அனுபவ வைத்தியம்

சுவடி எண் : 25

[முதல் பகுதி]

1. சுவடியின் பெயர் : அனுபவ வைத்தியம்

2. சுவடி எண். : 25

3. படி எடுத்தவர் : நா.பாக்கியசுந்தரி

4. மொத்த பக்கங்கள் : 113(108+5)

5. தட்டச்சு செய்தவர் : வெ.சுப்புலட்சுமி.

6. தட்டச்சு பக்கங்கள் : 159

7. தட்டச்சு எடுத்த நாள் : 21.5.03 முற்பகல்

8. தட்டச்சு முடித்த நாள் : 4.6.03 பிற்பகல்

உஉ

பொருளடக்கம்

30. பித்தகணையின் குணம்

31. பித்த கணைக்கு கசாயம்

32. பித்தகணைக்கு நெய்

33. எரிபித்த கணையின் குணம்

34. சேர்வை கணையின் குணம்

35. சேரப்பள கணைக்கு கசாயம்

36. சுரகணையின் குணம்

37. சுரகணைக்கு கசாயம்

38. சுரகணைக்கு நெய்

39. அத்திசுர கணையின் குணம்

40. அத்திசுர கணைக்கு பிட்டவியல்

41. அத்திசுர கணைக்கு நெய்

42. வறட்டு கணையின் குணம்

43. வறட்டு கணைக்கு நெய்

44. வாலசந்திர கணை வரலாறு

45. வால பட்சியின் குணம்

46. வால சந்திர கணையின் குணம்

47. மகேந்திர கணையின் குணம்

48. வாலேந்திர கணைக்கு கசாயம்

49. வாலேந்திர கணைக்கு கண்ணில் பற்றுக்கு மருந்து

50. வாலேந்திர கணைக்கு நெய்

51. வாலேந்திரம் கண்ணில் பற்றுக்கு கண்ணில் எழுத மை

52. வேறு மை

53. வாலேந்திர கணைக்கு பச்சை மருந்து

54. மயேந்திர கணைக்கு நெய்

55. கண்ணில் பிறப்படும் சுக்கிரனுக்கும் கண்ணில் ஒழிக்கநறுநெய்

81. கரப்பன் கணையின் குணம்

82. கரப்பன் கணைக்கு நெய்

83. பித்கிராணி கணையின் குணம்

84. பித்கணைக்கு உருண்டை

85. முசல்வலிக் கணையின் குணம்

86. முசல்வலி கணைக்கு தயிலம்

87. முசல்வலி கணைக்கு திரி

88. நெய்

89. நத்தைசூரி கணையின் குணம்

90. மாந்த கணையின் குணம்

91. பட்சிகணையின் குணம்

92. சர்ப கணை

93. சித்திரகணை

94. உணரு கணை.

1. பாங்குடன் கணேசன் பாதம்
பணிந்து முக்குணங்கள் ஆய்ந்து
வாங்குயர் வடிவை யெல்லாம்
வகைவகை தொகுத்துப் பார்த்து
யாங்கவர் விதியின் அலால்
ஆய்ந்திடும் நோய்களுக் கெல்லாம்
போம்படி மருந்து சொல்வேன்
புலத்தியர் மருந்து கேளே

கணேசனின் பாதங்களைப் போற்றி மூன்று வகையான குணங்களையும் ஆராய்ந்து வகைவகையாகத் தொகுத்துப் பார்த்து, அவரவர் செய்த வினைகட்கேற்ப அவர்களுக்கு உண்டாகும் நோய்களுக்கெல்லாம் அவை நீங்குவதற்கான மருந்தைச் சொல்வேன் புலத்தியனே கேட்பாயாக.

2. பொருந்துமோ உந்திக் கீழே
புகழ்ந்தேழு நரம்பை பற்றி
எழுந்ததோர் நாடி தானும்
எழுபத் தீரா யிரத்தில்
தெளிந்ததோர் இவற்றில் பற்றில்
திசைநாடிஇவற்றில் மூன்றே
பரிந்ததோர் வாத பித்தம்
படாபயம் அறிந்து பாரே

உந்தியாம் வயிற்றிற்குக் கீழே நரம்பைப் பற்றிக் கொள்ளும் நாடியானது 72000 ஆகச் சொல்லப்படுகின்றது. அவற்றுள் திசைநாடி மூன்றாகும். அவை வாத நாடி,பித்தநாடி, ஐயநாடி என்பனவாம்.

3. அறிந்து தானிதற்கு நாமரைத்

தரை அறிவுள் ளோர்கள்

தெரிந்ததோ ரிடைதான் வாதம்

மியல்பின் கலைதான் பித்தம்

செரிந்துகொள் சுளிதா னய்யம்

சேரவிட மெந்கே யெள்ளில்

பிரிந்துகொள் மலமாம் வாதம்

பேர்பெரு நீராம் பித்தம்

நாம் அறிந்து உணர்ந்து கொண்டால் அறிவாளர்கள் சொன்னபடி இடைகால தான்வாதம், பின்கலைதான் பித்தம் சுழிமுனைதான் ஐயம், மமைானது வாதமாகவும், சிறுநீர் பித்தமாகவும் கருதப்படும்.

4. பித்தத்தின் மேலே அய்யம்

பெரியதோர் விந்தில் சேரும்

குற்றமே சேரு மய்யம்

கூறுனை கூர்ந்து காணும்

பித்தத்தைப் பிரித்து நன்றாய்

பேசுவோம் பேதம் போக்கி

பத்ததை குறிப்பாய் யெண்ணி

பரிவுடன் அறிந்து பாரே

பித்தத்தின் மேலே ஐயமானது பெரியதான விந்தில் இசரும். குற்றமே சேரும் ஐயம். இதனை நன்றாகக் கூர்ந்தறிந்து பித்தத்தின் பேதத்தைப் போக்கி பிரித்துணரலாம். அவ்வாறு குறிப்பாய் பித்தம் பற்றிப் பேசலாம்.

5. பாரப்பா யிடைதான் கேளு
பரிவுடன் இடது காலில்
காரப்பா விபற்றி மாறி
கபாலத்தில் சாடி பின்னும்
சாரப்பா வலக்க ரத்தில்
சார்ந்திடும் பிங்கலை தானப்பா
சேரப்பா வலது காலில்
சேர்ந்துபின் கபாலத் தேறி
பேரப்பா இடைக் கரத்தில்
பொருந்திப்போம் சுளிளை கேளே

இடைக்கலை நாடியானது இடது காலைப் பற்றி மாறி மண்டைக் கபாலத்தில் சாடிய பின்னர் வலக்கரத்திலே சாடும். அது பிங்கலையாகும். வலது காலில் சேர்ந்து பின் கபாலத்திலேறி இடைக்கரத்திலே பொருந்தி நிற்கும். சுழிமுனை நாடியாகும்.

6. கேளப்பா புருவ மத்தில்
சுளிவையாம் கேட்கில் மூன்று
நாளப்பா நவ்வா தாகில்
நடத்திடு நாடி பாரு
கேளப்பா நாடி பத்தும்
திசைநாடி யுடனே சேரும்
சூளப்பா திசை தானங்கள்
சொல்லுகிறேன் சொல்லுகிறேனே

சுழிமுனை நாடி புருவத்தியில் செயல்படும். அந்நாடி நடைபயிலும் நடக்கும் என்பதாம். நாடியானது பற்றும் திசையுடன் பற்றிக் கொள்ளும். திசைதனங்களைப் பற்றி சொல்லுகிறேன்.

7. சொல்லுகிறேன் சாமியங்கள் குதிங்கால் சந்து
கொல்பெரிய உந்திகரம் மார்பு கண்டம்
சொல்லுகிறேன் புருவமதிறி காது மூக்கு
துகைப திதில் வாழ்ந்திருக்கும்தாது மூலம்
சொல்லுகிறேன் கரத்தெழுந்த நாடி மாறில்
சோதிக்கில் திசைதானம் தடியோ வாடில்
சொல்லுகிறேன் சாகால கால பிணிதான் தீரும்
தஞ்சுகிற விபரமதை சூட்டு றேனே

குதிங்கால் சந்து, வயிறு, கை, மார்பு, கண்டம், புருவம், காது,மூக்கு, தாது மூலம் இவ்விடங்களில் நாடியானது மாறுமானால், திசைநாடிகள் மூன்றும் மாற்றம் பெற்று பலவகையான பிணிகள் உண்டாகித் துன்பம்தரும் என்பதாம்.

8. தஞ்சியெழு வாதபித்தம் முயிர்தான் அப்பா
சூட்சமாய் தான்றியது சுழன்று தேய்ந்து
மிஞ்சியந்த பந்தக் குறி தம்முள்
மேவியே மார்புள்ளே வாங்கு மாகில்
அஞ்சியே பஞ்சமொழிறில் அடங்கும் சீவன்
அரகார அவத்தைஇது அறிந்து இந்த
பஞ்சிலே சூத்திரமாம் வாத பித்தம்
பக்குவத்தை நன்றாக பார்க்க நன்றே

வாத பித்த நாடிகள் முக்கியமானதாகும். இந்நாடிகள் சுழன்று தேய்ந்து மிஞ்சி பந்தக்குழியில் நின்று உள்ளே வாங்குமாகில் அந்த நாடி மாற்றத்தால் சீவனாம் உயிலே அடங்கிவிடும் என்பதாம். இத்தத்துவத்தை உணர்ந்து வாஇபித்த குணங்களை உணர்ந்து பக்குவமறிந்து பார்ப்பது நன்று.

9. அறிவது வாதந் தானு
மாத்திரை யரைதாள் னோடில்
செறிவது பித்த மய்யா
சேரசமன் யொன்றாய் பின்னை
பிறிவது அய்யந் தானும்
பிரண்டது கால்தான் னோடில்
மறிவது சமம தாகும்
மயக்கமு மில்லைக் காணே

வாத நாடியானது அரைமாத்திரை அளவு ஓடுமானால் அதனால் பித்தம் உன்மாகும். ஓர் மாத்திரை அளவு ஓடினால் அது ஐயமாகும். அந்நாடியானது கால் மாத்திரை அளவு ஓடினால் அது சமநிலை உண்டாக்கும். மயக்கம் தவிர்க்கும்.

10. காணப்பா வாத மீறில்
காலகைகள் பொருத்தற்நோகும்
பூணப்பா குடல் பிரண்டு
வலசலம் பொருமிக் கட்டும்
ஊணப்பா குளிரும் காய்ச்சல்
உடம்பெல்லாம் குத்து வாய்வு
வீணப்பா குளிர்ந்தி ருக்கும்
வேகுவை வேர்க்கும் தானே

வாதநாடி மிகுந்தால் கால் கைகளும் பொருத்தம் நோகும். குடல் பிரண்டு மலசலம் பொருமிக்கட்டும். உடல் குளிர்ந்த காய்ச்சல் உண்டாக்கும். உடம்பெங்கும் குத்தல் உண்டாகி, வாயுமேலேறி குளிர்ந்து, உடல் வியர்த்து வியர்வை உண்டாகும்.

11. தானென்ற பித்த மீறில்

சடமெல்லாம் காந்தல் காணும்

ஊனென்ற வாந்தி வாய்நீர்

ஊறியே ஒழுகு மானால்

வானென்ற தமட்டி வேகும்

மண்டையில் குத்தல் டாக்கும்

தேனென்ற விக்கலப்பா மூர்ச்சை

செவியிடைப் புண்ணாம் பாரே

பித்த நாடியானது மீறினால் உடல் காந்தல் காணும்.வாந்தி உண்டாகும்.வாய்நீர் ஒழுகும்.உடல் வேகும்.மண்டையில் குத்தலுண்டாகும். விக்கலம் மூர்ச்சையும் உண்டாகி செவிகளும் புண்ணாகும் என்பதாம்.

12. பாரப்பா அய்ய மீறில்

யாகத்தில் வலத்தல் தானும்

நேரப்பா யிளைக்கும் ரொம்ப

நெஞ்சுடனி விலாவும் நோகும்

தாரப்பா சுரமும் காயும்

சாதமும் மொசக்கும் நாளில்

லோரப்பா ரெத்தம் கக்கும்

உடல்வந்த சுரம்போ லாமே

ஐ நாடியானது மிகுந்தால் உடல் அனத்தும் ; இளைக்கும். நெஞ்சும் விலாவும் நோகும்.சுரம் காயும். உணவு செல்லாது. ஒருநாளில் இரத்தம் கக்கும்.சுரம் தொடர்ந்த கண்டவன் உடல்போல் உடலானது மெலிந்து காணும்.

13. ஆமப்பா வாதம் தானும்

அன்னநடை கோழி யாமை

தாமப்பா பித்தந் தானும்

தவளைபோல் பாயும் யோடும்

மாமப்பா அய்யந் தானும்

சர்ப்பம்போல் லோடும் யோடும்

நாமப்பா கண்டு சொன்னோம்

நரம்பொன்றில் நாடி மூன்றே

வாத நாடியின் நடையானது அன்னம் நடப்பது போலவும், கோழி நடப்பது போலவும், ஆமை நடப்பது போலவும் நடக்குமாம். பித்த நாடி நடை தவளைபோல்பாயும். ஓடும். ஐய நாடியானது பாம்புபோல் ஊர்ந்து செல்லும். இவ்வாறு நாம் நரம்பில் தோன்றும் நாடிகள் மூன்றைப் பற்றிச் சொன்னோம்.

14. மூன்றுபேர் நிறமும் சொல்வேன்

முதல்வாதம் கறுப்பு செம்மை

மன்றிய பசுமை பச்சை

மஞ்சளா யிருக்கும் பித்தம்

தோன்றிய வெண்மை யப்பா

சோர்விலா அய்ய மாகும்

மூன்றே குணங்கள் சொன்னேன் நிறங்கள் சொன்னேன்

உத்தமாம் அறிவார் தாமே

மூன்று நாடிகளின் நிறம் இங்கே சொல்வேன். கறுப்பும், செம்மையும் கலந்த நிறம் வாதத்தின் நிறமாகும். பசுமையும், பச்சையும், மஞ்சளாகவும் பித்தம் இருக்கும். அய்ய நாடியானது வெண்மை நிறமாக இருக்கும்.

15. தலையென்ற அஞ்சு பூதம்

சரீரத்தில் கேளு கேளு

போலென்ற சதங்க ளெல்லாம்

பிருதிவு புத்மய் பாரு

மாலென்ற ரெத்தம் தண்ணீர்

மைந்தனே அப்பு வாகும்

தேனென்ற வெதய்புத் தானும்

தேயுவின் கூறே யாகும்

மாலென்ற வாயி தன்னில்

வருகெந்த மறிதல் வாய்வே

ஐந்து பூதங்களும் உடம்பில் ஆட்சி செய்யும் நிலையைச் சொல்வேன்.சதங்கள் எல்லாம் பிருதியாகும். இரத்தமும்,தண்ணீரும் அப்புவாகும். தேனென்ற வெதய்பானது தேயுவின் கூறாகும்.கெந்தம் அறிதல் வாயுவாகும்.

16. மறிந்திடும் மெல்லா மொன்றாய்

யாவிக்கும் தாவா னந்தான்

பிறித்திடும் பூமி தானும்

பேரொளி நாசி தன்னில்

செறிந்திடும் மய்பு தானும்

சேர்ந்திடும் நாவிலே தான

முறித்திடும் வன்னி தானும்

மூன்றுற கண்ணில் லேதான்

பறிந்திடும் வாய்வு தானும்

பரிச்சித்துமெங்கும் மெங்கும் பாரே

எல்லா பூதங்களும் ஒன்றாய் அமையும் என்பதாகும்.பூமியானது பேரொளியாக நாசியிலும், அப்பானது நாக்கிலும்,வன்னியானது கண்ணிலேயும் பிரிந்த வாயுவானது எங்கும் அமையும் என்பதாம்.

17. பாரப்பா காதிலேதான் பரிசிக்கும்

வன்றான மைந்தா

போரப்பா அஞ்சு பேர்க்கும்

பொல்லாத பேர்தான் மூவர்

ஆரப்பா வாதம் வாய்வு

அப்பனே பித்தம் வன்னி

நேரப்பா அய்ய மப்பு

நிறைந்தவை இது மூன்றாமே

பூமியெனும் பூதம் முன்சொன்னவாறு காதிலே பரிசிக்கும். அஞ்சு பேர்க்கும் பொல்லாத பேர்தான் மூன்றில் ஒன்றும் வாதம் வாயு, பித்தம் வன்னிஐயம் அப்பு என இம்மூன்றும் அமையுமாம்.

18. ஆமப்பா மூன்றுபேர்க்குள்

மாதாரம் வாய்வு வாகும்

தாமப்பா வாய்வு சேரில்

லெபையில் முடைத்தாய் நிற்கும்

வேமப்பா வன்னி கூடில்

வெந்நீர் ராகும் மன்றாம்

சேமப்பா சிக்கி நின்ற

நெற்றெல்லாம் தெளிக்கும் தானே

இந்த மூன்று நாடிகளுக்கும் ஆதாரம் வாயுவாகும். வாயு சேர்ந்தால் லோபயையில் உடையதாய் நிற்கும். வன்னி கூடினால் விந்து நீராகுமாம் சிக்கலாக நின்ற நெற்றுக்களெல்லாம் தெறித்து வெளியேறும் என்பதாம்.

..10

19. தானென்ற வன்னி வாய்வு
தாண்டிடு மேல்கொண்டு தானால்
தானென்ற சுரந்தான் தோஉஷம்
தாபமும் மிகுதி யாகும்
வானென்ற வன்னி யோடு
அப்பவும் சேரு மாகில்
தானென்ற சீத ரூச்சை
சாத்திடும் தப்பி டாதே

வன்னியாம் வாயு மேற்கொண்டு ஓங்கி நின்றால் சுரதோஉஷம் உண்டாகும்.தாபம் மிகுதியாகும். வன்னியோடு அப்புவம் சேருமானால்

20. தப்பிலாத் தோஉஷமந் தானும்
சார்ந்திடும் வாறு கேளாய்
கப்பிலா வன்னி வாதம்
கடுந்தோஉஷ மாசாத்திய மாகும்
செய்பிலா பித்தத் தோடும்
செந்தணலே வெண்மை யாகி
செம்பிலா வாத னூடு
சிவம்பேராம் வாய்வு வாமே

தோஉஷங்கள் சார்ந்திடும் விவரம் சொல்வேன். வன்னிவாதம் கடுந்தோஉஷமாகும்.இது அசாத்திய தோஉஷமாகும்.சொல்லவியலாத பித்ததோஉஷம் செந்தணலே வெண்மையாக மாறி வாதத்தோடும் சிவன் பெயர் வாய்வுவாகும்.

21.வாய்வுதான் அடங்கித் தானால்

மைந்தனே தோஉஷம் போகும்

வாய்வுதா னுப்பித் தானால்

மண்ணோடு சீறும் மொழிறாய்

வாய்வுதான் சிலந்தான் ரெண்டால்

மைந்தனே வன்னி மானாம்

வாய்வுதான் சொல்லா விட்டால்

மண்டல வோசை யாமே

வாயுவானது அடங்கியிருந்தால் தோஉரும் நீங்கிவிடும்.வாயுவானது மிகுந்துதானால் மண்ணோடு சேர்ந்து வாயுவும் சீறும். வாயுவடன் அப்பு சேர்ந்தால் வன்னியின் தன்மையைப் பெறும் என்பதாம். வாயுவானது 40 நாட்களுக்குள் அசாத்தியம் என்பதாகும்?

22. ஆமப்பா வோசை யேறாமல்

றொளி விழி அஞ்சாகும்

நாமப்பா நாசி மூன்றாம்

நாவிநீ ரடைப்ப தாகும்

யோமப்பா இந்த உண்மை

உணர்ந்தவன் யோகி யாகும்

வேமப்பா நாசி தன்னில்

விறாங்குறி விளம்பக் கேளே

ஓசை நாற்பது ஒளியின் விழி ஐந்தாகும்.நாசி மூன்றாகும்.நாவின் நீரானது அடைப்பை உண்டாக்கும். இவ்வுண்மையை உணர்ந்தவன் யோகியாவான். நாசியில் ஏற்படும் குறிகுணங்களைச் சொல்வேன்.

23. கேளப்பா திசைதான் மூன்று
கெடியிடை கலைதான் பாயில்
மாளப்பா பருவம் ரெண்டில்
மறலியூர் புகவான் ஐய்பா
நீளப்பா தினமும் ரெண்டு
பிங்கலை தானே பாயில்
மூளப்பா தேகந் தானும்
மூவாண்டில் மரண மாமே

திசைகள், இடைகலை, பிங்கலை, சுழிமுனை என மூன்றாகும். இடைகலையானது பாயில் படுத்தால் பருவம் இரண்டாகும். தினமும் இரண்டு பிங்கலை பாயில் படுத்தால் தேகந்தானும் மூன்றாண்டிற்குள் மரணத்தை எய்தும்.

24. மரணந்தான் தினந்தான் பத்து
உபையத்தில் வாங்கு மாகில்
மரணமாம் திங்க ளொன்றில்
மைந்தனே கண்டு கொள்ளாய்
மரணமாம் மூக்கு விட்டு
வாய்விளி வாய்வு பாயில்
மரணமாம் தினந்தான் மூன்றில்
வளம்பெற அறிந்து பாரு
மரணமா மலங்கள் மூண்டு
வற்றினால் பச்ச மென்றே

உதையத்தில் மூச்சு வாங்கினால் பத்து நாளில் மரணம் கிட்டும். அது தவறினால் ஒரு மாதத்தில் மரணம் எய்தமாம். மூக்கு வழி அல்லாமல் வாய்வழியே மூச்சுவிடுமானால் வாயு பாயுமானால் மூன்று நாளில் மரணம் எய்துமாம். மலங்கள் வற்றினாலும் உயிர்போகும் என்பது.

25. ஒன்றான வாயி நீரு

ஊற்ற ரவி மேலுமி

யின்ன ருந்த தானும்

மிரவி மறைந்திருந் தாக்கால்

பொன்றாக மூண்டு திங்களி

பெருத்த ஊன்போலி றிடுவாளி

வென்றாக நிழ லலையில்

வீழ்வார்கள் பச்சம் ரெண்டே

வாய்நீருறி

26. காணப்பா தோஉஷங்கள் போக்கும் போத

காறுறுநீ குறிசொல்வோம் கருதிபாரு

தோணப்பா உண்ணாக்கு உதடு தண்டு

சுகமான தாதுஇவை கறுக்கு மாகில்

வீணப்பா தினம்மூன்றில் மரன மாகும்

மேலான வன்னிக்குத் தோஉஷ மென்ன

பாரப்பா வத்திநின்ற பித்தத் தோற்கு

முடம்பு பருத்ததினால் உரையை கேளே

தோஉஷங்கள் போக்குவதற்கான வழிமுறைகள் சொல்வோம். உள் நாக்கு, உதடு, தண்டு இவை கறுக்குமானால் மூன்று நாட்களில் மரணம் உண்டாகும். பித்த உடம்பினர்க்கு மெலிந்த காணப்படும் வுடம்பிற்கு, உடம்பு படுத்தினால்

27.கேளப்பா மரியாரில் சாவுண் டாகும்
கெடில்லை யிதில்லினைத் தோண்டா யாளால்
நாளப்பா திங்களொன்றில் சாவார் சாவார்
நலமான சீவயினைத் திருப்பார் கேளு
வேளப்பா மேலேறி யிடைந்து தானால்
மெல்மையுடன் சீவகிளைவிடு படாத
தாளப்பா கீழ்நோக்கி நடந்து தானால்
தவறுவரும் சீவகிளை நாடி தானே

ஆறு நாட்களுக்குள் சாவுண்டாகும். இதிலிருந்து மாறுபட்டால் கூட ஒரு திங்களில் மரணம் நிகழும்.என்பதாம். சீவன் பிழைத்திருந்தவர் மூச்சு மேலேறி அடைக்குமானால், சீவகளை விடுபடாது. கீழ்நோக்கி நடந்து-தானால் சீவகளையின் நாடியானது தளர்ந்து விடும்.

28. தானென்ற நாடி கீழே
தாண்டியே வாங்கு மாகில்
தானென்ற வுயிர்தான் மாறாம்
சாதகம் யின்னங்கேளு
தானென்ற மூன்று நாடி
தான்வசம் குறைந்து பின்னும்
தானென்ற வாத பித்தம்
தம்பித்து அய்ய மேரில்
தானென்ற திடங்கொண் டாலும்
சாவது திண்ண மாமே

நாடி நடையானது கீழ்தாங்கி வருமானால் உயிர் மாறும் என்பதாம். மூன்று நாடிகளிலும், தன் நிலையிலிருந்து குறைந்து தானால், வாதமும், பித்தமும் குறைந்து ஐயம் மிகுந்ததானால் திடமானாலும் கூட சாவது திண்ணமாம்.

29. ஆமப்பா வாத பித்த
தாண்மையை அறிந்து கொண்டு
நாமப்பா மருந்து செய்ய
நலமுறு தோஷம் தீரும்
வேமப்பா பித்தம் போனால்
வெம்பிடும் உயிர்தாள் தானும்
பூமப்பா வாதம் நிற்கில்
பேர்பன்றிடா மருந்து நல்கேள்

வாத,பித்த நாடிகளின் தன்மையை அறிந்து மருந்து செய்து பயன்படுத்தினால் தோஷங்கள் எல்லாம் தீரும் என்பதாம். பித்தம் மிகுந்து நின்றால் உயிர்தான் வெம்பிடும். வாதநாடியிலிருந்து நின்றால் மருந்துண்பது கடினமாம்.

30. நல்கிற மருந்து நாடி
நரம்பெல்லாம் குதித்துப் பொங்கி
இலகிய நாடி மேலே
எரிந்து நன்னோமு மாகில்
மலகிய மரண மில்லை
மறைந்தது கீழே சாடில்
யுலகிய் யுயுருக் கீனம்
உற்றுநீ அறிந்து கொள்ளே

நரம்பெல்லாம் குதித்துப் பொங்கி இலகுவான நாடி மேலே நிற்குமாகில் மரணம் ஏற்படாது. மேலன்றி கீழ்நோக்கி நாடி நகருமானால் மரணம் உண்டாகும் என்று அறியலாம்.

31. அறிந்திட உந்திக் கீழே

அமலியாய் குதிக்கு மாகில்

லெறிந்திட உயிரை உன்னும்

மெய்யுமாம் தோஉஷ மென்பர்

செறிந்திட உந்தி தாலும்

சேரிடம் வாய்வுக் கப்பா

மறிந்திடா திசை நாடிக்கும்

மகுத்தான பீடம் பாரே

வயிற்றிற்குக் கீழே நாடியானது குதித்துக் கொண்டிருந்தால் தோஉஷம் உண்டாகி உயிர் நீங்கும் என்பதாம்.உந்தி சேரும் இடத்தில் வாயு உண்டானால் 3 வகை நாடிகளுக்கும் இடத்தைத் தனியே அறியலாம்.

32. பாரப்பா நோய்யுள் ளோர்கள்

பக்குவம் பகர்ந்த நீயும்

வாரப்பா உமித்திட் டாக்கால்

மைந்தனே தூரப் போகில்

சாரப்பா தாக்கித் தானால்

சாவில்லைச் சாற்று கேளு

சாரப்பா கிட்ட வீனில்

சாவது சடுதி தானே

நோயுள்ளவர்களின் நாடி பக்குவம் அறிய வேண்டியது. நாடி நடை-யானது தூரமாகப் போனால் அதனால் சாவு ஏற்படாது என்பதும். நாடி நடையானது குறுகிய வட்டத்திற்குள் விழுமானால் உடனடியாகச் சாவுநேரம் போகிறது என அறியலாம்.

33. காணப்பா முறை பாடெல்லாம்

காண்பது மந்த தாலே

பூணப்பா மந்த மானால்

புகழ்ந்திடும் வாய்வு தானும்

வாணப்பா நோய்கட் கெல்லாம்

வாய்வினால் வளரும் பாரு

முணப்பா அப்பு வன்னி

முத்தோஷம் முன்னம் பாரே

வயிறு மந்தப்பட்டால் சிவமுறைபாடுகள் நிகழும் என்பதாம். மந்தத்தால் வாயு உண்டாகி வாயுவால் நோய் உண்டாகி நோயினால் திரும்பவும் வாயு ஏற்பட்டு வளரும். இதன் பின்னர் 3 வகை தோஷங்களும் தோன்றும்.

34. பாரப்பா மந்த முண்டாம்

பரிசன முரைக்க கேளு

காரப்பா மிகுந்த அயறிக்க

வளிக்கும் அன்னத் தாலே

வாரப்பா யிரச்சி யாலும்

மாப்பண்டத் தாலு தானும்

சேரப்பா மேதிப் பாலால்

சேர்ந்திடும் மந்தம் தானே

பின்வரும் காரணங்களால் மந்த உண்டாகலாம். அதிகமாகச் சாப்பிடுதல், மிகுந்த இறைச்சியை உண்பது, மிகுந்த மாப்பண்டங்களைப் புசிப்பது, எருமைப்பால் அதிகம் உண்பது ஆகியன மந்தம் உண்டாகக் காரணமாகலாம்.

35. தாளென்ற அன்னத் தாலே

தலைப்பட்ட தடம்பு மப்பா

தாளென்ற அன்ன மப் பாத

தனிப்பளி கொள்ளும் மீறில்

தாளென்ற அன்ன மெல்லாம்

சகல வித்தாகு மப்பா

தாளென்ற வித்துக் கெல்லா

மத்தகுவ முரைக்க கேளே

அன்னமிகுதியால் உடம்பு பெருத்துக் காணும். அன்னம் (சாப்பாடு) மீறினால் பலவகைச் சிரமத்தை உண்டாக்கும். அன்னமே சகல நோய்களும் உண்டாகும் என்பதாம். அவ்வாறு நோய் தோன்றுதற்கான காரணங்களைச் சொல்வோம்.

36. கேளப்பா வெட்டை பித்தம்

கெடியாக வாதம் வாய்வு

வாளப்பா அய்யம் சீதம்

வாளத்தி மென்னத் தாலே

பாளப்பா பித்தந் தானும்

பகையுடன் பகையும் கொள்ளும்

வேளப்பா அன்னத் தாலே

மேகங்கள் பிறப்பை கேளே

வெட்டை, பித்தம், வாதம், வாயு, ஐயம், சீதம், பித்தம் இவை பகைக்கு பகையாய் வேலை செய்யும். அன்னத்தால் உண்டாகின்ற மேகங்களின் பிறப்பைச் சொல்வேன்.

37. மேகங்கள் பிறந்த நிலீற

விதங்களை விளம்பக் கேளு

வாதங்கள் யெழுந்த போது

மப்பனே திரமு முண்டு

போகங்கள் செய்யும் போது

புகழ்மந்தம் அங்கே கூடுமப்ப

பாகங்கள் பசியினாடு

பருகுசய யோகந் தாளே

மேகங்களின் தோற்றம்பற்றிச் சொல்வேன். வாதங்கள் மிகுதியாகும் போதும் போகம் செய்யும் போதும் அங்கே மந்தசேரும். பசியிரும்போது சையோகம் செய்தாலும் மேகம் உண்டாகுமென்பர்.

38. சயயோகம் செய்யும் போது

தனிநின்ற சனியே யோடும்

அய்யயோ வயறு தன்னில்

அடங்கியே அனல்தான் கொள்ளும்

மெய்யடா விந்து காணில்

விளவிளய் புண்ணுண் டாகும்

மய்யடா தேகத் தாலே

வளர்ந்தது கிரந்தி பாரே

சையோகம் செய்யும்போது தனியாகச் சனியோடும். வயிற்றுள் அனல் மிகுந்திருக்கும். விந்து வெளியேறும்போது ஓரங்களில் புண்ணாகும். இந்த மேகத்தால் கிரந்தி உண்டாகும் என்பதாம்.

39. கிரந்தியால் விரண முண்டாம்
    கெடியதில் தீய்யாம் மேகம்
முரந்திய யிரண்டி னாலே
    மூலவாய்வு சூலை காணும்
பரந்திய மூன்று நாலே
    பலபல மேகம் காணும்
திரந்திய லிங்கத் தாலே
    தொல்கிலநோய் யெய்தும் பாரே

கிரந்தி நோயில் விரணமுண்டாகும்.தீயாய்க் கொதித்த மேகம் உண்டாகும்.மூலவாயு, சூலை,இவற்றால் பலவகை மேகங்கள் உண்டாகும். லிங்கத்தில் தொல்லையான பலநோய்கள் தீரும் என்பதாம்.

40. தொல்லையாம் சுரத்தி னாலும்
    சூழ்கின்ற வாய்வு வாலும்
மல்லையே செய்யு மாகில்
    அன்னத்தை கண்டி டாதே
தெவல்லை யெனவனி ராசன்
    வழியது ...ளீலே யானால்
தொல்லையே யில்லை அப்பா
    சூழுநோய் வாய்வு தானே

தொடர்ந்து வரும் சுரத்தாலும் சூழ்கின்ற வாயுவாலும், தொல்லைகள் வருமானால் அரிசிச்சோற்றை உண்ண வேண்டாம். வனிராசன் வழியே நாம் சென்றோ தொல்லையே இல்லை; வாயு நோய் மட்டும் உண்டாகும்.

41.வாய்வுவே மிகுத்து தானால்
மைந்தனே மேல்மூச் சேரும்
வாய்வுவே மிகுத்து தானால்
மலர்ந்திடு மாரணமெல்லாம்
வாய்வுவே மிகுத்து தானால்
மலசலம் ரெண்டும் கட்டும்
வாய்வுவே விரண மய்பா
வளர்ருத்திரி ரோகந் தானே

வாய்வுமிகுந்ததானாலும்,மேல்மூச்சு உண்டானாலும், வாயு மிகுந்ததால் ஏற்பட்ட மரணங்கள் உண்டாகும்.வாயுமிகுந்ததானால் மலசலம் இரண்டும் கட்டும்.வாயு மிகுந்தால், விரணமும் ருத்திரரோகமும் உண்டாகும்.

42. ஆமப்பா ருத்திர ரோகம்
ஆண்மையை உறைக் கேகு
வேமப்பா வெம்பி பார்த்த
மிகுநெஞ்சில் குத்தம் டாக்கி
போமப்பா பித்தந் தன்னை
தம்பித்த போகட் டாமல்
பாமய்பா பேசும் போது
பதையாமல் வாசான் காணே

ருத்திரரோகம் உண்டாகும், ஆண்மை பெருகும்.உடம்பானது வெம்பி நொந்து நெஞ்சில் குத்துண்டாகி பித்தம் அதிகமாகி தம்பித்து நிற்கும் இவ்வாறு மீறிய குறிகுணங்களைக் கொண்டவன் இறந்துபடுவான்என்பதாம்.

43.பதையாமல் சாகுகிற சுகசன்னி மார்க்கம்

பார்க்கிறவ்தங் கேளு பண்பாய் நீயும்

நிலையாத யெண்ணையுடன் தீர்த்த மாடி

நீர்ரெம்பத் தயிர்கட்டி பொசித்துப் பின்னும்

யிசையாத மநதிமுடன் புணர்ச்சி கூடில்

யிதங்கெட்ட வாய்வுதான் கபாலத் தேறி

அசையாடல் போக்கிவிக்கும் மேகம் செய்யும்

அப்பனே சன்னியோடு யசாத்திய மாமே

சுகசன்னியைக் கூறுகிறது இப்பாடல். எண்ணெய் தேய்த்துக் குளித்து,தயிரும் கூட்டி சாப்பிட்டபின்னர் புணர்ச்சி மேற்கொண்டால் இதங்கெட்ட வாய்வு கபாலத்தேறி உயிரைப் போக்கக் கூடும்.

44. சன்னிதான் தோஷ்மும் போது

சடமெல்லாம் வேர்வை காணும்

சன்னிதான் சுகத்தில் மைந்தா

கண்கள்தான் சிவப்பே யாகும்

வன்னிதான் சுகத்தி லய்யா

மகுத்தான தோஉஷ மாகும்

வன்னிதான் சுகத்தி லின்ன

முறிந்திடும் காயந் தானே

சுகசன்னி தோஷிம்போது உடம்பெல்லாம் வியர்வை உண்டாகும். இந்தச் சுகசன்னியில் கண்கள் சிவப்பேறும். வன்னியில் பெரிய தோஉஷ-முண்டாகும். வன்னியான்து சுகசன்னியில் காமறார்ந்உடம்பு மறித்திடும்.

45. காயத்தில் மூல ரோகம்
கண்டிடும் விதங்கள் கேளாய்
பாரொத்த பசி யில்லாமல்
படசிக்கில் அடங்கி வாய்வு
மாயத்தால் நிறுத்தி கொண்டு
மலமதை அடைக்கும் போது
வேயத்த குன்றலிக்குள் புக்கும்
விரணஞ்செய் வாய்வு காணே

மூல நோய்கள் உண்டாகும் வழியைச் சொல்வேன். பசியில்லாமல் பசியடங்கி வாயுவானது மிகுந்தேறி மலத்தை அடைக்கும். வாயுவானது குண்டலிக்குள் புகுந்து விரணங்களை உண்டாக்குமளவு இந்த வாயுவாகும் என்பதாம்.

46. காணப்பா வாய்வு வாயும்
கனத்த நத்த அன்னந்தன்னை
பூணப்பா மலத்தை கட்டி
புகையெனக் கறுக்கி நாளும்
தோணப்பா மலந்தான் வீழில்
சுருக்குமுள் முளியைப் போல
வாணப்பா அன்னம் தன்னை
அழுந்தவே யிருக்கும் பாரே

இவ்வகையான வாயு மிகுவதால் சாப்பிட்ட உணவானது இறுகிக் கறுத்துக் கட்டிக் கொள்ளும். மலம் வீழும்போது முள்போலக் குத்தி சிரமத்தை உண்டாக்கும் என்பதாம். இவ்வாறு மலம் இறுகி

47\. இருத்திய மூல மென்னும்

மெளுமன்டை மூல மென்னும்

வருத்தியே புண்ணாய்ச் சீய்தான்

வடிந்திடும் மூல மென்னும்

உருத்தியே வாய்வு வாலே

உதிரந்தான் கட்டி நின்று

தருத்தியேக் கீரி கிளிலங்கள்

தான்ரத்த மூல மென்றே

மலம் இறுகுவதால் உண்டாகும் மூலம் என்றும், மண்டையில் ஏற்படும் மூலம் என்றும் மூலம் புண்ணாகி சீழ் கோர்த்திடும் மூலமென்றும், வடிந்திடும் மூலம் என்றும் வாய்வு மிகுதியால் உதிரங்கட்டி அதனால் ரத்தம் கசியும் மூலமென்றும் மூலம் பலவாம்.

48\. மூலமே யெழுந்த போது

மூலத்தில் கனல்தானி மாமும்

மூலமே யெழுந்த போது

முறை வித்தஞ் சமாகும்

மூலமே யெழுந்த போது

முழுகிய யிரைச்ச லாகும்

மூலமே யெழுந்த போது

முடிவில்லலக் கழிச்சல் தானே

மூலம் எழும்போது மூலத்தில் கனல் உண்டாகிவிடும் என்பதாம். முளைமூலம் எழும்போது இரைச்சல் உண்டாகும். இவ்வாறு மூலம் உண்டாகும்போது தொடர்ந்து கழிச்சல் உண்டாகும் என்பதாம்.

49. கழிச்சலென்ற கிராணியே விதம் பாரப்பா
காணடா பித்தநல் வாதம் வாய்வு
அழிச்சலென்ற அய்யமுடன் மூன்றும் கூடி
அப்பனே பேதிக்கும் பிலந்தான் போகும்
தெழிச்சலென்ற வாய்வுதான் மேகம் பேதி
திறமான மூலத்தில் தோஉஷம் பேதி
அழிச்சலென்ற சங்கான பேதி யொன்றாய்
பாரப்பா வருமென்று மாறு மாச்சே

கிராணி கழிச்சல் பற்றி இங்குச் சொல்வோம். பித்தம், வாதம், வாயு, ஐயம் என்ற மூன்று கூடும்போதுபேதி உண்டாகி உடல் பலம் குறையும். தெழிச்சல் என்ற வாயுமேலேறி மேகம், பேதி, சங்குபேதி இவையெல்லாம் உண்டாகி கிராணிக் கழிச்சலாகுமாம்.

50. ஆச்சப்பா மேகம் கேளு
மப்பனே யீற்று முண்டு
நீச்சப்பா மேகந் தன்னை
நிசம் சொன்னார் காணும் காணு
காச்சப்பா மஞ்சள் போலத்
சவ்வீனந் தன்னில் கண்டாய்
வீச்சப்பா பித்த மேகம்
விரும்பினார் விளம்பக் காணே

மேகமானது ஈற்றில் உண்டாகிவிடும் என்பதை உணர்ந்த மூதாதையர்கள் சொன்னார்களே. அதை நாம் உணர்தல் வேண்டும். மஞ்சள் போன்ற உடம்பில் பண்டு பிடித்த மேகம் பற்றிய முன்னோர் சொன்னதை நாம் சொல்வோம்.

51.விரும்பிய சீலை தானும்

வெளுத்திடில் வாத மேகம்

மருந்பிய கவ்னந் தானு

மதிமயில் நிறமே யாகு

திரும்பிய அய்யத் தாலே

சேர்ந்திடு மேக மாகும்

சுரும்பிய மூன்றா லய்பா

தோன்டிய குணங்கள் கேளே

சோதித்து பார்க்கும்போது நீரில் வெள்ளைத் துணியைப் பயன்-படுத்திய பின் வெள்ளையாகவே காணுமானால் அது வாதமேகம். சுகவ்ன மேகமானால் அமு மயில் நிறமாகும். அது ஐயத்தால் ஏற்பட்ட மேகமாகும். இவ்வாறு மூன்று குற்றங்களும் ஏற்படும் மேகங்களாகும்.

52. கேளப்பா பித்தம் வாய்வு

கெடியுடன் சேரு மாகில்

தாளப்பா ஞான மான

தமரிலே எரித்து எரும்

வேளப்பா ந்ரைத் கட்டும்

வீழ்ம்பொசித் துளியும் பாரு

பாளப்பா சில நேரந்தான்

பனிச்சென யிருக்கும் பாரே

பித்தமும் வாயுவும் சேருமானால் அது மயிரில் எரிந்துஏறும். சிறு நீர் கட்டும். துளித்துளியாக வீழும்; சில நேரங்களில் நீரானது பனிச்சென்று இறங்கும் என்பது.

53.தானென்ற வாயுயோ திக்கில்

தண்டிலே நோவு தானால்

வானென்ற மந்தத் தாலே

வாய்வுவில் புகுந்தே தாடும்

கானென்ற யெரிச்சல் காணும்

கல்லடைப் பாகும் பின்னை

மானென்ற வாதம் வாய்வு

மருவிடில் வெள்ளை தானே

வாயு மிகுதியானால் முதுகுத் தண்டிலே வலி உண்டாகும். வாயு மிகுதியால் மந்தம் கூடும். நீர்த்தாரையில் எரிச்சல் உண்டாகி கல்லடைப்பு ஏற்படும். வாதமும் வாயுவும் கூடினால் வெள்ளை ஏற்படும்.

54. வெள்ளைதான் மெத்த வீழில்

மேனியும் பாரிமிக காணும்

கள்ளமே சரீர மெல்லாம்

கறுப்புடன் நரம்பும் மோடும்

தள்ளவே தாது நட்டம்

தாகமும்மிகுதி யுண்டாம்

உள்ளது சொன்னோம் உண்மை

முற்றுமல கறிந்து கொள்ளே

வெள்ளை வீழ்வதால் உடல் இளைத்துக் காணும். உடம்பெங்கும் கறுத்த நரம்புகள் ஓடும். தாது நட்டம் உண்டாகும். மிகுதாகம் எடுக்கும். நாம்சொன்ன இக்குறிகுணங்கள் எல்லாம் உண்மையானது. அதனை அறிந்து கொள்ளவும்.

55. அறிந்திடாய் வாய்வு வோடே

அய்யம் வந்தெய்த மாகில்

பிறிந்தநீர் பொசிந்தி டாது

பிறவெள்ளை வீழ்ந்திடாது

வெறிந்திடு மத்தி போலே

விளைய்புடன் நீரும வுண்டாம்

முறிந்திடும் புகைச்சல் காணும்

வலியெழு மேக மாமே

வாயுவுடன் ஐயம் சேர்ந்து கொள்ளுமானால் நீர்ச்சுருக்கு ஏற்படாது. வெள்ளை ஏறாது. பெரிய சத்தத்துடன் இருமல் உண்டாகும்.புகைச்சல் உண்டாகும்.இவை வலிமேகம்,எழுமேகம். மேகத்தின் பாற்பட்டதாம்.

56. வலித்திடும் வாதந் தானும்

வளரய்யம் பித்தம் தானும்

குளித்திடும் ரெத்த மேகம்

யொழுகிடும் சலந்தான் மாறி

சலித்திடும் தாக மீறும்

சாப்பிட்டால் உடனே காந்தும்

பலித்திடும் முனி னோடு

வருந்தவாய் யினிக்கும் பாரே

வலி வாதத்தில் ஐயமும்,பித்தமும் உண்டாகும்.ரெத்த மேகத்தில் இரத்தமும் சலமும் மாறி மாறி வெளியேறும். தாகம் மிகுதியும் உண்டாகும்.சாப்பிட்டவுடன் காந்தல் உண்டாகும். சாப்பாடு சாப்பிட்டு முடித்தவுடன் வாய் இனிப்புத் தட்டும்.

57. இனித்திடும் வாத மேகம்

மியல்பு நல்லெண்ணெய் போலும்

பனித்திடும் கள்ளுப் போலும்

பன்னீர் போத்நீர் தான்னோடும்

கனிந்திடும் மேனி யெல்லாம்

கனத்திடும் வெளுத்துப் போகும்

மனிந்திடும் மேகந் தானும்

சாத்திய வைய்யந் தானே

வாதமேகம் உண்டானோர்க்கு நல்லெண்ணை போலும், கள் போலும், பன்னீர்போலவும் நீர் கழியும். அழகாக இருந்த மேனி கசந்து கனத்து வெளுத்துக் காணப்படும்.வாதமேக நோய் சாத்திய மேகமாகும்.

58. அய்யமும் பித்தந் தானும்

மனைந்திடும் காலம் தன்னில்

கொய்யுற ரெத்தம் தானும்

கொப்பளித் தோடும் தன்டில்

மைய்யுரு கன்னி ஆர்க்கும்

மகோதரம் பெரும்பாடாகும்

தொய்யுற மேகம் உண்டாம்

தொடர்ச்சியை முறையால் கேளே

ஐயமும்,பித்தமும் கூடிடும் காலத்தில் மலம் வழியாக இரத்தம் பீறிட்டோடும்.இதனால் மகோதரம் பெரும்பாடு மேகம்இவை உண்டாகும். எனபதறியவும்.

59. முறைகேஞு மொளிப தாகும்
முயர்ச்சியாய் வந்த தேகம்
முறைகேஞு சற்பத் தால
சூழ்கின்ற மேக மொன்று
நடைபூத்த கூந்தல் நல்லாள்
நாயகன் மேகத் தாலும்
மரைபோற்றும் கெர்ப்பத் தாலும்
வளர்ந்திடும் மேக மாமே

மனிதனில் இயற்கை செயற்கை குண மாறுபாட்டால் தோன்றும் மேகங்கள் ஒன்பது. கற்பத்தால் உண்டாகின்ற மேகம் ஒன்று. நாயகனின் மேகம்பற்றிக் கொள்வதும் கெற்ப்பத்தாலும் உருவாகும் மேகங்களே அதிகமாகும்.

60. வளர்ந்திடும் கெர்ப்பத் தாலே
மருவிய மேக மஞ்சு
முளந்திடு மனுப்பத்தி யாகும்
முள்ளதில் மேகந் தானும்
மளந்திடும் வெள்ளை காட்டும்
ஆகுத்தில் மேகந் தானு
மாமுந்திடு மேகம் பத்தும்
எலும்பது உருக்கும் தானே

கெற்பத்தில் தோன்றிய ஒரு மேகம் ஐந்துவகை மேகங்களாக வளர்த்திடும். உள்ள மேகங்களில் வெள்ளைகட்டும் மேகங்கள் பத்தாகும். வெள்ளைப்படுவதால் அம்மேகங்கள் கண்டவர் எலும்புகளை உருக்கிடும் என்பதாம்.

61. தனல்போல் காயும் தண்ணீர்
    தாபமும் மிக வுண்டாகும்
இனல்மேகம் முன்னங் காலே
    அகோரமாய் மேகந் தானும்
பினக்காலே பசிதானி கெட்ட
    பேரேழு மேகந் தானும்
வணங்காத சய யோகத்தை
    வறட்சிக்கு மேக மாமே

உடம்பு தனல்போல் காயும். தண்ணீர் தாகம் மிகவுண்டாகும். ஆனால் மேகம் முன்னங்காலிலே தோன்றி சிக்கலை தரும்.ஏழுவகை மேகங்களும் சையோகத்தால் அதிகமாகும் என்பது. அவை பின்னர் வறட்சி மேகங்களாக மாறும்.

62. ஆமப்பா கடுவஸ்து உண்டால்
    லாகிய மேகம் பின்னும்
மோமப்பா பாசா ணத்தில்
    ஒன்டிடும் சில மேகங்கள்
நாமப்பா சொல்லோம் மிந்த
    நா டி சூத்திரத் தன்னில்
லோமப்பா மதிதானி மஞ்சு
    முன்னொழிப தாமே

கடினமான பொருள்களைச் சாப்பிட்டால் மேகங்கள் மேலும் வளரும். பாசாணத்தில் மருந்துகளை உண்டால் சில மேகங்கள் நீங்கும்.இந்த நாடி சூத்திரத்தில் மேகங்களின் முறை பற்றி தெளிவாகச் சொன்னேன்.

63. ஆகிய மேகந் தானும்
அப்பனே இருபத் தொன்னாம்
மேகிய குன்மந் தானும்
யெழுந்ததோர் விதங்கள் சொல்வோம்
பாகிய பித்த தோடு
வாதமும் பிரிந்து சீறில்
வாகிய வன்ன னிறகம்
மயங்கியே பலிதான் யேறி
வாகிய வாயால் நீரா
வாந்தியு மாகும் பாரே

இதுவரை இருபத்து ஒரு வகை மேகம் பற்றி விரிவாகச் சொன்னேன். குன்மம் தோன்றிய விதங்களும் அதன் முறைகளும் எடுத்துச் சொல்வோம். பித்தத்தோடு வாதமும்சேர்ந்து சீறினால் மயங்கி வலி உண்டாகி வாய்நீருறும் என்பது.

64. பாரப்பா வாய்வு வாதம்
பரிவுடன் பானை றங்கில்
ஓரப்பா கும்பி தன்னில்
உருண்டுதான் மிகவே நோகும்
கோரப்பா நெஞ்சில் குத்தும்
குடலையும் முரிக்கிக் கொண்டு
வாரப்பா வலிக்கும் மெத்த
வாதமாய் வளரும் வாய்வே

வாயுவாதம் ஏற்பட்டால் முட்டுகள் நோகும். நெஞ்சில் குத்தல் ஏற்படும். குடலை சுருக்கி வலியை உண்டாக்கி மேலும் வளர்ந்து அவ் வாய்வு துன்பம் தரும்,

..பக்க 33

65. வளங்கிய அப்பு வோடு

வாதமும் மொன்றே யானால்

தளங்கியே அன்ன சாரம்

சங்கிக்க வொட்டா தப்பா

புழுங்கிய யணியாய் அந்தப்

பிடியன்ன யேறில் குத்தும்

முளங்கிய வாத பித்தம்

மொழிந்தனத் மேகந் தானே

உடலிலே நிலைத்து நிற்கும் தண்ணீரோடு வாதமும் ஒன்றாக இசருமானால் சாப்பிட்டஉணவு உடம்பிலே ஒட்டாது. சந்துகளில் எல்லாம் வலியை ஏற்படுத்தும் இந்த வாத பித்த நிலையின் மேகத்தைச் சொன்னோம்.

66. தானென்ற வாய்வு கொண்டு

தாண்டியே யெழுந்து மாகில்

மானென்ற மலஞ்சலங்கள்

மரியுடன் கட்டிக் கொண்டு

மதையுரு பக்க மாலே

வலது பக்கதில் குத்தும்

இதையுரு மிருக்கி குத்தும் மென்றால்

பேருஞ்ஞை குன்ம மாமே

வாயுவானது மேலோங்கி ஆங்காங்கே குத்தல் உண்டானால் மலசலங்கள்கட்டிக் கொள்ளும். வலது விலாப்பக்கத்திலே குத்தல் வன்மை உண்டாகும். வயது பக்கத்தில் மீண்டும் மீண்டும் குத்தல் எடுக்குமானால் அது பெருஞ்சுனை குன்மமாகும்.

67. குன்ம மோரிது தானாகில்

கருவேள் விதமாய் பாரு

வன்மையாய் நோய்களுக் கெல்லாம்

காலோய்தான் பொல்லா தாகும்

கன்ம மாசிடத்துக் கெல்லாம்

காணுங்கால் இந்த ரோகம்

நம்மையாம் தர்மத் தோற்கு

நாடிடா நாடி டாதே

குன்மம் ஒன்றல்ல; அவை பல வகையாம். அவற்றைக் கருவேள். நோய்களிலே பொல்லாதநோய் குன்மநோய்தான். குன்மங்கள் பலவாக மாறி இருக்கும். பிறர்க்கு நல்லது செய்த தர்மவான்களுக்கு குன்மநோய் வருவதில்லையாம்.

68. நாடிய பித்த சூலை

நடத்திய முறையை கேளு

ஊட்டமா யன்ன முன்ன

ருசிதப்பி வாந்தி யாகும்

மாட்டிய கைகால் காது

வசைத்தால் மேவு நோகும்

நீட்டியே அங்கங் கேதான்

நின்றெறிந் தூருங் காணே

பித்த சூலையானது இருக்கும் விதம் அறிவோம். ஊட்டமான உணவை அதிகமுண்டால் அது ருசிதப்பி வாந்தியை உண்டு பண்ணும். கை, கால், காது இவற்றை அசைத்தாலே நோகும். ஆங்காங்கு எரிச்சலையும் உண்டுபண்ணும்.

69. காணப்பா வாத சூலை

காட்டிடும் குறியே தெள்ளில்

காணப்பா கைகால் சந்து

குளச்செலாம் கடுத்த நோகும்

காணப்பா அடி வயறு

களத்துடன் சுரப்பு மாகும்

காணப்பா தேக மெத்த

களத்திடும் மிளையா தெளினே

வாதசூலையின் குறி குணங்கள் பின்வருமாறு. கை, கால், சந்துகளில் எல்லாம் கருத்த நோகும். அடிவயிறு களக்கும். சுரந்து காணப்படும். தேகம் முழுவதும் கூடக் களத்துக் காணப்படும்.

70. இளைத்திடும் மார்பில் சூலை

யெறித்திடும் குணங்கள் சொல்போம்

குளைத்திடும்கைகால் சந்து

குத்துடன் வறண்டி ருக்கும்

தளைத்திடும் மார்பில் செவிறு

தாக்கியே யேறி வெட்டு

மளைத்திடும் சீய தாகும்

ஆகாத வாய்வு வாமே

மார்பில் ஏற்படும் சூலைகள், உடலை எரித்திடும்குள்மங்கள் சொல்வோம். கைகால் சந்துகளில் வறட்சி உண்டாகும். மார்பில் தாக்கி துன்பம் தரும். இவை எல்லாம் உடம்பிற்கு ஆகாத வாயுவாகும்.

71, ஆகாத வாய்வு காணும்

அனைந்திடும் சூலை சேரு

வாகான கால்க்ள் கைகள்

வளமுடன் கட்டி நிற்கும்

மாகான வீக்க தானும்

வந்திடும் மதில்தான் னெல்லாம்

தாகான உடல்மேல் லெல்லாம்

தடிப்புடன் வெடிப்புண்ணாகி

போகாத புண்மேல் லெல்லாம்

புண்களாய் கொல்வந் தானே

உடம்பிற்குத் தேவையில்லாத வாயுக்களை உண்டாக்குகின்ற சூலையின் விவரம் சொல்வோம். கால்,கைகள் கட்டிக் கொள்ளும்; வீங்கியும் காணும். உடலெங்கும் தடிப்பும் வெடிப்பும் உண்டாகி புண்கள் தோன்றி புண்மேல் புண் உண்டாகும்.

72. சொல்லிய அய்ய மோடு

பித்தமும் கொதித்த தானால்

வண்மை போலக் குடையும்

மைந்தனே யெலும்பு தோனும்

மெல்லிய சரீர நோகும்

வேர்வையாய் சுரமும் காயும்

வில்லிய தனுத்த வத்தும்

விடங்கக்கு மிருமும் தானே

ஐயத்தோடு பித்தமும் சேர்ந்து கொதித்த உடலைக் குடைந்-தெடுக்கும். மெலிந்த உடல் நோகும். வேர்வை உண்டாகும். சுரங்காயும். உடல் சற்றி இருமல் உண்டாகும்.

73. தானென்ற அய்யத் தோடு
சமன்வாத சூலை கேளு
ஆனென்ற சடந்தான் நோகும்
ஒருகீதம் கபாலம் புண்ணாம்
கானென்ற காலி லாணி
யெலும்பெல்லாம் கழுத்து கொண்டு
கோனென்ற கழிச்சல் தாகம்
குளிர்சுரம் மார லாகீ
மோனென்ட நாத நட்டம்
முழுசூலை கிரந்தி பாரே

ஐயத்தோடு வாதமும் சேர்ந்து சூலை உண்டானால் உடம்பெங்கும் நோகும்.மண்டை புண்ணாகும்.காலில் ஆணி ஏற்படும்.எலும்புகள் கழுத்து கழிச்சல், தாகம்,குளிர் சுரும்,மாறல் சுரம்,நாதநட்டம்,சூலை, கிரந்தி இவை உண்டாகும்.

74. ஆறாகும் சூலை யப்பா
அதினொண்டு மூண்டு சூலை
பேராகும் பதி னெட்டாகும்
வெவ்வேறு சூலை யில்லைக்
கூறாகும் மின்னா லப்பா
குணங்கள்தான் கோடி யாகும்
போராகும் இவர்கள் பேரை
பரிந்துரை செய்வேன் பாரே

சூலை ஆறாகும். ஒன்று மூன்று என சூலையின் பெயர் பதினெட்டாகும்.வெவ்வேறு சூலையின் குணங்கள் அனேகமாகும். சூலை ஒவ்வொன்றின் பேரையும் சொல்லி விளக்குவேன்.

75. பாரப்பா கெர்ப்ப காலம்
பரிவுடன் வாய்வு தேய்வு
சேரப்பா உத்தி யோடு
சென்றிடில் கருத்தால் மாறாம்
மாரப்பா புறாதான் உள்ளில்
மலடென சொல்வா றரைய்யா
யாரப்பா இதனைப் போக்கில்
ஆண்பிள்ளை செனிக்கும் தானே

கெற்ப காலத்தில் வாயுவும், தேயுவும் சேர்ந்த சென்றும். உத்தியுடன் கருத்த கொண்டு அதனை அறியவும். புறாவை உண்டால் மலடென்ற சொல்லுவார். இதனைப் போக்கிட ஆண்பிள்ளையே உருவாகும் என்பதாம்.

76. செனிக்கின்ற குளவி தானும்
திடமுற பிறக்கும் போத
கனக்கிடை சிறுநீர் போலக்
கலந்துள்ளே கட்டி நிற்கும்
பனிக்கின்ற யிருப்பு கைகால்
பாவியே நொந்த குத்தம்
கனிக்கிடை மான பேற்கு
கதித்திடும் முதண்டி பாரே

கெற்பத்தில் உருவான குழந்தையானத திடமுறப்பிறக்கும் போத அதிகமாக சிறுநீர் போல் கட்டிக் கொள்ளும். இடுப்பு, கை, கால் சந்தகள் வலியுண்டாகும். பலரும் இவ்வகையே பயன்படும் என்பதாம்.

77. பாரிய வாய்வு தானும்

பறந்ததால் மூலம்பற்றி

சாறிய கலச மாகி

சதானித்தம் உருவிச் சாறும்

வாரிய தேகந் தானும்

வலியெழும் யிடைதால் நோகும்

மாரியற் றெனக்கு சொன்னார்

ஆயித்தவர் சித்தர் தானே

பாரிச வாயுவானது பறந்த மூலத்தைப் பற்றி கலசலாகி நித்தம் உருவிச்சாறும். தேகமும் இடுப்பும் நோகும். இந்த விவரத்தைச் சொன்னவர் சித்தர்கள் தான்.

78. தநனென்ற கெர்ப்பத் தோடு

தரித்திடும் சோறை கடி

வானென்ற மத்துப் போல

வாய்வும் உருகும் பாரு

ஊனென்ற பசிதான் போகும்

முறைத்ததால் இரைச்ச லுண்டாம்

மானென்ற கழிச்சல் மீறும்

வரும் சூதம் வாய்வு வாமே

கெற்பத்தோடு சோறையும் உண்டாகி மத்த உருளுவதுபோல வாயுவும் உருகும். பசிபோய்விடும். வயிற்றில் இரைச்சல் உண்டாகும். கழிச்சல் அதிகம் போகும். சூதமும் வாயுவும் உண்டாகும்.

79. சூதான கெர்ப்ப காலம்

சுற்றிதான் மிகுத்து கொள்ளில்

வாதான மேக மீறி

வளைத்கியே செனிப்பிக்கும் கான

போதான உடம்பு தேகம்

புக்போல மிகவும் நோகும்

நீதான மயக்க மாகில்

நிஷ்ற சீவன்னாகும் பாரே

கெற்பகாலம் மிகுந்த மேகமும் அதிகமாகி உயிரைப் பிறப்பிக்கும். உடம்பு முழுமையும் புண்போல மிகவும் நோகும். மயக்கமாகில் பிறக்கும் சீவன் சிறந்ததாகும் எனபதாம்.

80. ஆகின்ற ஆறு சூலை

கெர்ப்பத்தி லடைத்த நோய்தான்

பாகின்ற கவைதான் சூழல்

பாித்திடாக் கருவு மப்பா

வாகின்ற தானம் போக்கில்

மலடிதான் பெறுவாள் பிள்ளை

ஆங்கொண்ட நோய்க ளெல்லாம்

அரைத்துடல் உரைப்ப தாமே

ஆறு வகை சூலைகள் உண்டு. கெற்பத்தில் அடைத்த நோய்தான் கரு உருவாகாமல் தடுத்திடும். பிறர்க்கு வேண்டிய அளவு தானம்செய்தால் மலடிகூட பிள்ளை பெறுவாள்.

81. முறையான கெர்ப்பந் தன்னில்

முயன்றதோர் மருந்து கேளு

குறையான செயநீர்....னே

கலந்திடில் வாய்வு தானும்

விறையாமல் கலங்கி ஓடி

மெய்யெல்லாம் வருத்த மாகும்

துறையான மலந்தான் கட்டும்

சொல்லாம் துணிந்து பாரே

முறையான கெர்ப்பத்திற்கு பயன்படும் மருந்தைச் சொல்வேன். செய்நீர் சாப்பிட்டு வந்தால் தேங்கிய வாயு கலைந்து ஓடிடும். உட-லெங்கும் வலியெடுக்கும். மலங்கட்டும்.

82. பாரப்பா மாதர்க் கெல்லாம்

பச்சுடம் பான காலம்

தாரப்பா அநு பவிப்பாள்

தயிர்கட்டி தன்னை தின்பாள்

ஆரப்பா மாங்காய் தின்பாள்

அப்பனே மாவும் தின்பாள்

கூரப்பா சன்னி யெய்தும்

கொண்டிடும் சன்னி கேளே

கெர்பகாலம் மாதர்களின் உடம்பு பச்சை உடம்பாக விருக்கும். துன்பம் அநுபவிப்பார்கள். தயிரைக் கட்டி கட்டியாகத் தின்பார்கள். மாங்காய் தின்பார்கள். மாவும் தின்பார்கள். இவர்களுக்கு சன்னிநோய் உண்டாகும்.

83.கொண்டும் மலடிக் கப்பா
கூடிடும் யெட்டு சன்னி
வண்டிதான் இது காலத்தில்
மாத்திரிப்பாள் மோர்தான் உண்பாள்
தண்டியே அணைவாள் பின்னும்
தனித்தூத காயும் தின்பாள்
ஒண்டிய பெண்க ளுக்கு
ஓர்ரெட்டுச் சன்னி யாமே

மலடிக்கு எட்டுவித சன்னிகள் உண்டாகும்.மாத்திரிப்பாள்,மோர் குடிப்பாள். தூதக்காய் தின்பாள். இவ்வாறு உள்ள பெண்களுக்கு எட்டு விதமான சன்னிகள் உண்டாகும் என்பதாம்.

84. ஓர்ரெட்டு சன்னி யப்பா
உற்றது பெண்களுக்கு
வார்ரெட்டு புருச ளுக்கு
மதிகுத்தான சுக சன்தான்
நேரிட்டுப் பார்க்கும் போது
நெகிழ்ந்தது வெவ்வே றாகும்
பார்ரெட்டு மெச்ச வேதான்
பகர்ந்திடும் கண்ணோய் கேளே

பெண்களுக்கு எட்டுவகை சன்னிகள் உண்டாகும். ஆண்களுக்கு சுகசன்னி உண்டாகும். இரண்டையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இரண்டும் வெவ்வேறாகும்.இனிவரும் பாடல்களில் கண்ணோய் பற்றிச் சொல்வேன்.

85.கேளப்பா பொடி சுட்டாலும்

கேளிர் வெய்யில் கோபித்தாலும்

வாளப்பா மின்னார் தன்னை

மருவியே நித்தம்நித்தம்

தாளப்பா முளுக்கில் லாதே

கண்ணில் தணல்தான் பார்த்தால்

தாளப்பா பாசத் தாலும்

தானினெழும் கண்ணோய் பாரே

பொடி சுடுதல், வெயிலின் கோபத்திற்கு ஆளாதல்; தலை முழுக்கு போடாததால் கண்களில் சூட்டின் அனல் பறத்தல் போன்ற காரணங்களால் கண்ணோய் உண்டாகும் என்பது.

86. கண்ணில் நோய்தானுண் டானால்

காரணம் சொல்வேன் கேளாய்

பன்னான் மேகத் தாலும்

பழும்வெட்டை வாய்வு வாலும்

தண்ணான அப்பு வாலும்

தனிவலம் கட்டி னாலும்

புண்ணான விரண தாலும்

போகுந்திட விழிகள் தானே

கண்ணில் நோன் உண்டாவதற்கான காரணங்களை சொல்வேன். மேகநோயினால், வெட்டையால், வாயுவால், தண்ணீரால் புண்களில் உள்ள இரத்த புண்களில் உண்டாவது விழி நோய்கட்கான காரணங்கள் சொல்லப்படுகின்றன.

87. காரமாம் சாரத் தாலும்
கடுநடை தூரத் தாலும்
நீதமாம் வெண்டையாலும்
நிலையுறு புகையி னாலும்
காதலாம் போகத் தாலும்
கடுஞ்சுனை தண்ணி யாலும்
சீதமாம் பண்டத் தாலும்
சேர்ந்திடும் கண்ணில் வியாதி தானே

அதிகம் காரம், காரப்பொருட்களை உண்பதாலும், தூரம் நடப்பதாலும், வெட்டையாலும், புகை மிகுதியாலும், அதிக போகத்தாலும் சுனைத்தண்ணீர் பருகுவதாலும், சீதள பண்டங்களை உண்பதாலும் கண்ணில் வியாதி தோன்றும் என்பதாம்.

88. வியாதியாம் மூவ நாற் றாகும்
விளம்பிய குட்டம் கேளு
சுயாதியாய் மேகத் தாலும்
சூழ்கின்ற கிரந்தி யாலும்
பயாதியா யாற தாகும்
பலவண்டி னாறே எட்டாம்
ஆதியாம் புகுத்தா னய்ய
மம்பத் தெட்டாமே

வியாதிகளின் வரிசையைக் கேட்போம். குட்டம், மேகத்தாலும், கிரந்தியாலும் இவை ஆறாகவும், எட்டதாகவும் இருக்கும். மேலும் இது ஐம்பத்தெட்டாகும்.

89. அய்யமாம் நாடி மூன்டால்

ஆக்கவும் அழிக்க லாகும்

தைய்யுறு பொழிறில் மூன்று

நாடியாம் நயந்து பாரு

மைய்யுறுக் கருவிக் கெல்லாம்

வாசல் காப்பாரே யாகில்

செய்யுறு தொழில்கள் எல்லாம்

சித்தடன் சித்து மாமே

ஐய நாடி மிகுதியானால் ஆக்கவும், அழிக்கவும் இயலும். மூன்று நாடிகளுள் ஒரு நாடியான இந்த ஐய நாடியைக் கண்டு கொண்டால் காப்பாக இந்நாடி அமையும். செய்யும் தொழில்கள் எல்லாம் கட கைகூடும்.

90. ஆமப்பா நோய்க ளெல்லாம்

மாத்தான மூன்று நாடி

காமப்பா வளந்தென் னாளும்

கருவியை கலந்து சேர்ந்து

வேமப்பா வெந்து நீரி

விழுவெல்லாம் பிளந்து பின்னும்

சாமப்பா

(பாடல் முடிவு பெறவில்லை. 20ம் எண் உள்ள ஏடு இல்லை.)

மூன்று வித நாடிகளின் வளர்ச்சி மாற்றத்தினை உணர்ந்து காரணங்களை அறிந்து ---

(பாடல் முற்று பெறவில்லை).

91. முதல் 93 முடிய பாடல்கள் விடுபட்டுள்ளது.

தட்டச்சு செய்யப்படவில்லை.

94. . . .ரப்பா கும்மிட்டி பொலிமுசுட்டை
நரி புளியாரை கொடிவேலி
மணத்தக்காளி நீரப்பா கற்றாலி
மைப்பால் கட்டி விளங்க
வாய்விளங்கம் கெந்தம் நிரைத்த
கருஞ்சீரகமும்கோட்டந் தானே

குமட்டிக்காய்,பொலிமுசுட்டை,புளியாரை, கொடிவேலி, மணத்தக்காளி, கற்றாழை, வாய்விளங்கம், கெந்தம்,கருஞ்சீரகம், கோட்டம் இவற்றைச் சேகரித்துக் கொள்ளவும்.

95. கோட்டமுடனே நாயுருவி யிருவத்தஞ்சு
கூறான நீர்கொண்டு கசாயங் கொண்டு
மாட்டமோடு மத்திச்ச கடுகை மூண்டு
மப்பனே வெவ்வேறே செய்தா யானால்
வருட்டவாம் குளுமைக்கும் விடஷத்துக் கெல்லாம்
உத்தமனே வேதையுட நாயம் தீரும்
பாட்டெல்லாம் குத்தால்லல்லோ சித்தர்
பாடினார் நூல்தோறும் பாடி னாரே

கோட்டம் நாயுருவி இவற்றை நீர்விட்டு கொதிக்க வைத்த எட்டில் ஒவ்றாக்சி மத்திச்சு ஒருமணிநேரம் கழித்து நோய்களுக்கு வழங்கலாம். குளிர்ச்சி,விடஷம்,வேதை போன்றவை நீங்க இவற்றை வழங்கலாம் என்று சித்தர்கள் பாடினார்கள்.

96. கெந்தக சுத்தி மனோசிலை:-

பாடினதோர் கெந்தகத்தின் சுத்தி யென்ன

பசுவின்நெய்விட்டு ஆட்டி பாலில் சாய்ப்பாய்

ஆடினதோர் பிரிசுத்தி யவனசுத்தி யாகும்

அப்பனே ஏழுதரம் உருக்கி சாய்ப்பாய்

தாடினதோர் மனோசிலையின் சுத்தி சொல்வோம்

நறுக்குவாய் பணம்போலே நன்றாய் நீயும்

முடினதோர் கிளிகட்டி ஆட்டு நீரில்

முதிரவே யெழுதரம் யெரித்து வாங்கே

கெந்தகத்தைப் பசுவின்நெய் விட்டு ஆட்டி பாலில் கொட்டவும். இவ்வாறு ஏழுமுறை உருக்கிச் சாய்க்க கெந்தகம் சுத்தியாகும். மனோசிலையை சிறுசிறுவில்லைகளாக நறுக்கி கிளிகட்டி ஆட்டு. மூத்திரத்தில் ஏழுமுறை எரித்தெடுக்கவும்.

97. தாளகத்தின் சுத்தி:-

எரித்தல்லோ உளுந்தவெந்த தண்ணீர் விட்டு

எடுத்திடுவாய் மனோசிலைதானே சுத்தி யாச்சு

மரித்திடுவா ரில்லையப்பா தறைக ளெல்லா மாகும்

மகத்தான தாளகத்தின் சுத்தி கேளு

பரித்திடுவாய் தாளகத்தை பணம் போலே வெட்டிப்

பழுஞ்சீலைதனை மடித்து கிளிதானிக்கட்டி

யெரித்திடுவாய் தோளாந்த கோமியத்தி னாலும்

அப்பனே காடியா லவித்தி டாயே

பின்னர் அதனை உளுந்து வெந்த தண்ணீரை விட்டு எடுத்துக் கொள்ள மனோசிலை சுத்தியாகும். தாளகத்தைச் சிறு சிறு துண்டுகளாக வெட்டி பழஞ்சீலையில் கிளிகட்டி கோமியத்திலும், காடியிலும் தொங்கவிட்டு எரித்தெடுத்துக் கொள்ளவும்.

98. சாதிலிங்க சுத்தி:

அவித்திடுவாய் தண்ணீர் பூவனிக்காய் நீராம்

ஆவின்பால் அரசம்பட்டை கசாயத் தாலும்

வித்திடுவாய் மூன்றுதினம் ஊறப் போட்டு

வாகார வெடுத்திடவே சுத்தி யாகும்

வித்திடவே சாதிலிங்கம் சுத்தி கேளு

அப்பனே குப்பிவைப்பை நறுக்கிக் கட்டி

அவித்திடுவாய் பழம்சாற்றில் முலைப்பால் தன்னில்

அடவாக இருசாமம் ஊறப் போடே

தண்ணீர், பூசணிக்காய் சாறு, ஆவின்ப்பால், அரசம்பட்டை, கசாயம் இவற்றில் தனித்தனியே மூன்று நாள் ஊறப்போட்டு எடுத்துக் கொள்ள தாளகம் சுத்தியாகும். சாதிலிங்கத்தை நறுக்கி கிளிகட்டி எலுமிச்சம்பழச் சாற்றிலும், தாய்ப்பாலிலும் 6மணி நேரம் தனித்தனியே ஊறவிட்டெடுக்க சுத்தியாகும்.

99. நாக சுத்தி:

ஊறவே லிங்கமது சுத்தி யாகும்

மூட்டுவாய் துறைகளெல்லாம் முறைத்துப் போகும்

சீறிநிறை நாகசுத்தி தன்னை கேளு

செப்பிரிய யெண்ணெயாம் பாலு மாகில்

மீறவே மோராகும் சால நீராம்

வெள்ளாட்டின் கோமியமாம் பழச்சா றாகும்

வீறான யெருக்கன்பால் இவைகள் தன்னில்

வெந்துருக்கிச் சாய்த்திடவே சுத்தி யாமே

நாகத்தினை எண்ணெய், பால்இமோர், வெள்ளாட்டு கோமியம், எலுமிச்சம்பழச்சாறு, எருக்கம்பால் இவற்றில் தனித்தனியே வேகவைத்து எடுத்துக் கொள்ள நாகம் சுத்தியாகும்.

100. சுத்தியென்ற நாகபற்ப மணிக ளக்காகும்
சூதத்துக்காகு மது நீறுக் காகும்
சுத்தியென்ற செந்தூ ர மருந்து காகும்
சித்தரெல்லாம் சுத்திதன்னை துறந்தா ரில்லை
பத்தியுடன் னிருவக்கம் யிப்படிதான் உருக்கி
பாங்காக சாய்த்திடவே சுத்தி யாகும்
வெத்தியுறு வெள்ளிக்கு சுத்தி சொல்வேன்
வெட்டடா பணம்போலே பொடியாய் தானே

நாகபற்பம்,நாகமணி, சூதம் இவையெல்லாம் சுத்தி செய்ய மேற்சொன்னமுறையைப் பயன்படுத்தலாம்.சுத்தி செய்த செந்–தூ ரம் மருந்திற்காகும். இவற்றை முறைப்படி உருக்கிக் கொள்ள சுத்தி–யாகும். இனி நான் வெள்ளிக்குச் சுத்தி சொல்வேன்.

101. தானென்ற பொடியதனைக் கிளியாய் கட்டித்
தனிச்சுண்ண நீர்குள்ளே தோய்த்து திறமாகத்
தேனென்ற ஆவின்பால் தன்னி லப்பா
திறவாமல் மூடியதை யெரித்து வாங்கி
வானென்ற பாசாணம் நல்ல சுத்தி
மாட்டுவாய் துறைகளெல்லாம் சுத்தி யதகும்
த்னென்ற யெவிவிஷத்தில் சுத்தி கேளு
சிறுக்கீரை சாறுதனில் மாட்டி டாயே

வெள்ளியைப் பொடித்து கிளிகட்டிக் கொண்டு சுண்ணாம்பு தண்ணீரில் தோய்த்து எடுத்து ஆவின்பாலில் போட்டு மூடி எரித்து எடுக்க சுத்தியாகும். பாசாணங்களை எல்லாம்கூட இதே முறையில் சுத்தி செய்து கொள்ளலாம். எவிவிஷத்தைச் சிறுகீரைச் சாற்றில் சுத்தி செய்யலாம்.

102. ஏலிஉத்திஸ்_சுத்தி:

சாறுகளில் தோரளாந்த மாட்டி வாங்கி

தயவாக யெரித்திடவே சுத்தி யாகும்

வேறாகும் நாவியுட சுத்தி சொல்வோம்

வெண்பருத்திச் சாறுதனில் இருசாமம் போட்டு

மீறாமல் கோமியத்தி லிப்படியே செய்து

மீண்டுமதை யெரண்டை இலையில் சுற்றி

மற்றமல இலைவாட்டி யெடுத்துக் கொண்டு

மைந்தனே துறைகளெல்லாம் மாட்டு மாட்டே

சிறுகீரைச் சாற்றில் தோளாந்திரமாகக் கட்டித் தொங்கவிட்டு எரித்திட சுத்தியாகும். வெண்பருத்திச் சாற்றில் 6 மணிநேரம் ஊறப் போட்டு, பின்னர் 6மணி நேரம் கோதியத்தில் ஊறப்போட்டு ஏரண்டத் திலையில் சுற்றி இலையை வாட்டி எடுத்துக் கொள்ளலாம்.

103. நாவி_சுத்தி:

மாட்டுவாய் சீந்தியுட கசாயத்தி லிட்டு

மருவியதை தோளாந்த மாட்டி வாங்கி

பூட்டுவாய் கோமியத்தில் கழுவ சுத்தி

யுற்றெருக்கம் பாலிலே ஊறப்போட்டு

கோட்டுவாய் கோப்பாலில் கழுவ சுத்தி

சூதமனும் நாவிசுத்தி கூர்ந்து கேளு

ஆடுகின்ற அரைபொடியில் சுத்தி தன்னை

அறையிறேன் நன்றாக றையி றேனே

சீந்தில் கசாயத்தில் இட்டு தோளாந்திரமாகக் கட்டி கோமியத்தில் கழுவிக்கொள்ள சுத்தியாகும். எருக்கம்பாலில் ஊறப்போட்டு ஆட்டுப்பாலில் கழுவிட சுத்தியாகும். அடுத்த அரப்பொடியின் சுத்திதனை இனிச்சொல்வோம்.

104.அறையிறேன் அக்கினி யொரண்டு வாங்கி
அப்பனே யெள்ளெண்ணெய் அதற்குள் விட்டு
குறையாமல் லோருசாமம் வருத்தா நீயும்
கொடுங்காடி தனில்விட்டு கருவ சுத்தி
முறையாக கருவேலாம் பட்டைச் சாற்றில்
முசியாமல் இருசாமம் வேகச் சுத்தி வைத்து
நிறையாக காடியிலே கழுவிப் போட்டு
நீட்டுவாய் வருசுத்தி நிலைத்த போக்கே

அதனை ஒரு கிண்ணத்தில் போட்டு நல்லெண்ண விட்டு 3மணிநேரம் வருத்தெடுத்து காடியில் கழுவி எடுத்க சுத்தியாகும்.மேலும் கருவேலம் பட்டைச்சாற்றில் இரண்டு சாமம்வேக வைத்து பிறி அதனைக் காடியில் கழுவிக் கொள்ளலாம்.

105.அப்பிரக சுத்தி

போக்கான அப்பிரக சுத்தி தன்னைப்
பூட்டுகிறேன் அப்பிரக தகடுதா னொன்று
வாக்கான கோமியந்தான் படிதானி மூன்று
வகைகண்டு சமனாக விரவி வைத்து
வீக்குவாறி ரெண்டுபடி நீர்தானி வத்த
வெந்தபின்பு தனையுள்ள நெல்லிச் சேர்த்து
தாக்கியே கிளிகட்டி புளித்த காடி
தனிவிட்டுக் காய்ச்சிடவும் கரையும் பாரே

அப்பிரகத்தைத் தகடாகத் தட்டி 3 மடங்கு கோமியம் விம்மு வேக வைத்து தண்ணீர் இரண்டு பங்காகச் சுருங்கக் காய்ச்சி நெல்லி சேர்த்து கிளிகட்டி புளித்த காடி தனியே விட்டு காய்ச்சிட கரைந்திடும்.

106. தாம்பிர_சுத்தி

கரைந்தத்த காடியெல்லாம் தெளிய வைத்து
கலங்காமல் இருத்தப்பா யுலர வைத்து
நிறைந்ததொரு செந்தூர பற்பம் பண்ணு
நிலைத்தெந்த நோய்யெலும் நீரலயும் போகும்
தரைத்ததொரு தாம்பூர சுத்தி கேளு
சல்லிபோல் தாம்பூரம் நறுக்கி வாங்கி
நிறைத்திடுவாய் புளித்தமோர் கால சாற்றில்
யெழுதரம் காய்ச்சிந் துவைத்தி டாயே

கரைத்த பிற்பு காடியைத் தெளிய வைத்து இறுத்து உலர வைத்து செந்தூரமோ, பற்பமோ செய்யலாம். அதைப் பயன்படுத்தி வந்தால் நோய்கள் எளிதில் குணமாகும். தாமிரத்தை சிறிது சிறிதாக நறுக்கி புளித்தமோர் காலச் சாற்றில் ஏழுமுறை காய்ச்சி எடுத்துக்கொள்ளவும்.

107. துவைத்திடுவாய் யேழுதரம் யெருக்கம் பாலில்
சொல்லுகின்ற நல்லெண்ணெய் கோமி யத்தில்
துவைத்திடுவாய் பழச்சாற்றி லாவின் பாலில்
சுருக்கான கற்றாழை பொன்னாங் கண்ணி
துவைத்திடுவாய் இவைகளிலே காய்ச்சி காய்ச்சி
சுத்தியாம் தாம்பூரத்தை ஈட்டு சூட்டு
துவைத்திடவே காந்தசுத்தி சூட்டக் கேளு
துசிபற்றுங் காந்தத்தை துண்டாய் வெண்டௌ

எருக்கம்பாலில் ஏழுமுறை காய்ச்சிக் கொள்ளவும். பின்னர் நல்லெண்ணெயிலும், கோமியத்திலும், பழச்சாற்றிலும், ஆவின்பாலிலும், கற்றாழைப் பொன்னாங்கண்ணி சாற்றிலும் துவைத்துக் காய்ச்சிக் கொள்ள தாம்பிரம் சுத்தியாம்.

108. தாந்த சுத்தி, நிமிளை சுத்தி:-

வெட்டியதோர் காந்தத்தில் செம்பிறச் சாறும்

வெகுநாளைக் காடியதில் புளித்த மோரில்

கொட்டிடுவாய் மூன்று தினம் வற்றக் வற்றக்

கூட்டாது நார்களெல்லாம் லோகத் தோடு

பாட்டில்லைக் காயசித்திக் காகும் மாகு

மப்பனே நிமளைசுத்தி அறைய கேளு

வாட்டியுறு நால்வகையும் நொறுக்கி கொண்டு

வாழையுட கிழங்குநீர் வாங்கு வாங்கே

காந்தத்தைத் துண்டுகளாக நறுக்கிக் கொள்ளவும். செம்பிறச் சாற்றிலும், வெகுநாள் காடியிலும், புளித்தமோரிலும், மூன்று நாள் ஊற வைத்துக் கொள்ளவும். நார்கள் லோகத்தோடு கூடாது. சுத்தி செய்த இவ்வுலோகங்கள் காயசித்திக்காகும் என்பதாம்.

109. துத்தத்தின் சுத்தி:

வாங்கியே நிமிளையிட்டு யெரித்து மைந்தா

வைத்திடவே சுத்தியாம் களங்க மில்லை

பாங்குயர் துத்தத்தின் சுத்தி சூட்சம்

பணம்போலே நறுக்கியதை கிளிபோல் கட்டி

ஆக்கியே அமுரியிலே யெழு சாமம்

ஆவினுட நீர்தனிலே ரெண்டு சாமம்

தேக்கியதை தோளாந்த மெரித்து வாங்கி

உத்தியாம் சித்தியாம் லோக காடே

நிமிளையினைச் சிறு சிறு துண்டுகளாக நறுக்கிகொண்டு வாழைக் கிழங்கு நீரிலிட்டு எரித்துக் கொள்ள சுத்தியாகும். துத்தத்தைத் துண்டுகளாக்கி கிளிகட்டி அமுரியில் 21 மணிநேரமும், பசுவின் கோமியத்தில் 6மணிநேரமும் தோளாந்திரமாக எரித்தெடுத்துக் கொள்ள சுத்தியாகும்.

110.குக்கில் சுத்தி:

அட்டவுந்தான் குக்கிலதனை சுத்தி செய்ய
உத்தமனே யிடித்ததனைக் கிளிதானி கட்டி
மூட்டுவாய் ஹரியாணை தேவ தாரம்
முதிர்ந்ந்ட பேய்ப்புடோல் கசாயம் பண்ணி
ஆட்டுவாய் தோளாந்த நாக சாமம்
அதின்பிறகு பேய்ப்புடோலில் பத்திரி கூடக்
காட்டுவாய் நிம்பத்தோல் கசாயம் வாங்கி
கக்கடா குக்கிலட களங்கம் போச்சே

குக்கிலை இடித்துத் தூளாக்கிக்கிளிகட்டிக் கொண்டு, தேவதாரம் பேய்ப்புடல் சேர்த்து செய்த கசாயத்தில் தோளாந்திரமாகக் கட்டி எரிக்கவும். பின்னர் பேய்ப்புடோலுடன் பத்திரி எலுமிச்சம்பழத்தோல் சேர்த்து கஷாயம் செய்து முன்போல் எரித்துக் கொள்ள குக்கில் சுத்தியாகும்.

111.தொட்டி சுத்தி:

களங்கம்போம் மான பாலில் நாலு சாமம்
காய்ச்சிடவே சுத்தியாம் கலமும் சுத்தி
களங்கம்போம் தொட்டிக்கு சுத்தி சொல்வேன்
கட்டிதனை நொறுக்கியதை கலத்தி விட்டு
களங்கமற நெய்தேனும் சரியாய் சேர்த்து
கலக்கியே யூறவைப்பாய் யெட்டு நாள்தான்
களங்கமற தேதளாந்தம் கானச் சாற்றில்
காய்ச்சடா தொட்டியங்கே சுத்தி யாச்சே

இதனை 12மணிநேரம் மான்பாலில் போட்டு எரித்தெடுக்க. சுத்தியாகும். தொட்டிப் பாஷணத்தைத் தூளாக்கி நெய்யும், தேனும் சம அளவு சேர்த்துக் கலக்கி ஊற வைக்கவும். எட்டுநாள் கழிந்தபின் அதனை எடுத்துத் தோளாந்திரமாகக் கட்டி தீந்தில் சாற்றில் எரித்தெடுக்கச் சுத்தியாகும்.

112. கற்பூரசிலை சுத்தி

ஆச்சப்பா கற்பூர சிலையை வாங்கி
அடவாக நொறுக்கியதை கிளியாய் கட்டி
பாச்சப்பா ஆவின்பாலில் தோளாந்த மாக
பால்வார்த்த மாங்கெடங்கே அரித்துப் பின்னும்
காச்சப்பா அக்கினிக்குள் வேக வைத்து
கழுவதொரு வல்லிநீர் விட்டு ஆட்டு
மூச்சப்பா சிலாசத்தை சுத்தி யாகும்
முட்டுவாய் கிறைகளெல்லாம் முட்டு முட்டே

கற்பூர சிலையைத் தூளாக்கிக் கிழி கட்டி ஆவின்பாலில் (தோலாந்திரமாக) எரித்த பின்னர் நெருப்பினுள் போட்டு வேகவைத்து வல்லிநீர்விட்டு ஆட்டிச் சிலாசத்தைச் சுத்தி செய்து பயன்படுத்தலாம்.

113. நேர்வாள சுத்தி

முட்டவே நேர்வாள சுத்திகேளு
முஃமேதி சாணியிலே வாளம் போட்டு
ஆட்டுவாய் கமலாக் கிளியால் அப்பா
ஆறவிட்டு யெடுத்ததனை தோடு போக்கி
பூட்டுவாய் குற்றமறாம் சுத்தி யாகும்
உறவாகும் சரக்கோடு வூடு பத்தாம்
நீட்டிய சுத்திவகை மெத்த உண்டு
நினைவுகண்டு இவ்வளவுஞ் சொன்னேன்

நேர்வாளத்தை எருமைச்சாணி கரைசலில் சேர்த்து கமலாக்கிளியாக எரித்து ஆறவிட்டு ஓடு போக்கிக் கொள்ள சுத்தியாகும். உறவாகும் சரக்குகளோடு மருந்து சரக்குகளை சேர்க்கும்போது சுத்தி முறைகள் மாறுபடும். அவை பலவுண்டு. நினைவிலிருந்தவற்றைச் சொன்னேன். பிறவற்றை அறிந்து கொள்ளவும்.

114. <u>மாரணம்.</u>

பாரப்பா மாரணத்தை சொல்லக் கேளு
பரப்பிலே விடுகாதே அடக்கி யாடு
ஆரப்பா வகையாக சொன்னார் பாரு
அடவாக சொல்லுகிறேன் அடக்கம் விட்டு
நேரப்பா வெள்ளாகம் தாளகத் தநலும் மாளும்
நிலையான காரியம் மனோசிலையால் மாளும்
காணப்பா யுறுக்கதவும் லிங்கத்தால் மாளும்
கடிய கெந்தி தாம்பூரத்தை கலவுந் தானே

மாரணத்தைச் சொல்கிறேன் கேள். வெளியிலே விட்டு விடாமல் அடக்கி ஆள வேண்டும். வெள்ளாகம் தாளகத்திலும், காரியம் மனோசிலை-யாலும், உறுக்கு லிங்கத்தாலும், கெந்தி தாம்பூரத்தாலும் மாளும் என்பதாம்.

115. கலவுமடா மாட்சீதன்னை வெள்ளி யுன்னும்
மளங்கமில்லா பொன்னதனை நிமளை யுன்னும்
கவ்வுடா லோகங்கள் தகடு தட்டிக்
கட்டிடுவாய் சரக்குக்கு தகடு நேராய்
கவ்வவே சம்பிறச் சாற விட்டு
களங்கமரை ஆட்டியே தகட்டில் பூசிக்
கவ்லவே சட்டிக்குள் தகட்டை வைத்து
கவிழ்த்தியே ஓடுகொண்டு மூடு மூடே

மாட்சீதன்னை வெள்ளி உன்னும், பொன்னை நிமிளை உன்னும், உலோகங்களைத் தகடுதட்டி சரக்குகளுக்கு நேராய்த் தகடு வைத்துக் கட்டி சம்பிறச் சாறுவிட்டு அரைத்துத் தகட்டில் பூசி சட்டிக்குள் தகட்டை வைத்து ஓடு கொண்டு மூடி வைக்கவும்.

116.முடுவாய் சந்தக்குச் சீலை செய்து

முதிரவகை கிசபுடமாய் போடு போடு

நீட்டியதோரி லோகங்கள் வெவ்வே றாக

நீட்டியே புடம்போடு வற்றாத் மேரும்

மாடிநிற காந்தத்தை செந்து ரிக்க

அறையிறேன் சுத்திசெய்த காந்தம் வாங்கி

நாடியோரு சட்டிக்குள் காந்த மிட்டு

நலமாக மேல்சட்டி கொண்டு மூடே

சந்துவாய் மூடி சீலை செய்து 1000 வரட்டியில் புடம் போட்-டெடுக்கவும். ஒவ்வொரு உலோகத்தையும் தனித்தனியாக வெவ்வேறு புடம் போட்டு எடுத்துக் கொள்ளவும்.சுத்தி செய்த காந்தத்தை சட்டிக்குள்ளே வைத்து மேல்சட்டிக் கொண்டு மூடிக் கொள்ளவும்.

117.கவிழ்த்தியபின் குழிவெட்டி மூன்று பத்து

கனத்தயெருக் குழிக்குள்ளே அடுக்கி ந்யும்

கவிழ்த்தி வைத்த சட்டிதனை யெருமேல் வைத்துக்

காட்டடா முப்பதெரு மேலும் மூடிக்

கவிழ்த்தியானால் மூடிநீ யெடுத்து வாங்குக்

கலைஆறி காந்தத்தை வாங்கி மைத்தாக்

கவிழ்த்திய பச்சரிசி கழுநீர் ரோடு

கருவாழை கிழங்கிட சாறு வாங்கே

ஆழமான குழிவெட்டி குழியில் 30 விறகடுக்கி அதன் மேல் சட்டியை வைத்து, மேலேயும் முப்பதெரு மூடி எரித்துப் புடம்போடவும். ஆறியபின் காந்தத்தை எடுத்துப் பார்க்கவும்.பச்சரிசி கழுவிய நீரும் கருவாழைக்கிழங்கு சாறு

118. வாங்கப்பா ஆவாரஞ்சாற் இளநீர் சாறு
வகை நாலும் சமனாக வளந்து செய்து
வாங்கடா திமிரண்டு ஆட்டுச் சாற்றால்
வண்டுபோல் பிடித்ததனை ஆற வைத்து
வாங்கடா சட்டிக்குள் அடையை வைத்து
மறுசட்டியா லதனை மரித்து மூடி
வாங்கடா சீலை செய்து கெசபுடந்தான் போடு
வாகாக ஆறியபின் யெடுத்தி டாயே

ஆவாரஞ்சாறு இளநீர் இவற்றை சம அளவெடுத்து ஆட்டுச் சாணம் சேர்த்துப் பிசைந்து வண்டளவு உருண்டைகள் செய்து சட்டிக்குள் வைத்து மேல் சட்டிக் கொண்டு மூடி சீலை மண் செய்து 1000வரட்டியில் புடம் போட்டெடுக்கவும்.

119. எடுத்ததொரு வில்லைதனை குமரிவேர் நீரில்
யிளகியதை யாட்டியே கெசபுடத்தால் போடு
எடுத்திடுவாய் காறைவேர் மாம்பட்டை சாற்றில்
இலவங்கப் பட்டையுடன் நெல்லி முள்ளி
எடுத்திடித்து இவை சமனாய் சேர வைத்து
இயவாக வாட்டியதை சட்டிக் குள்ளிட்டு
எடுத்திடவே மூன்றுநாள் ஆற வைத்து
இசவாக கெசபுடத்தில் தாலும் போடே

இதனை ஆறிய பின்னர் எடுத்து கற்றாழை வேர்ச் சாற்றில் ஆட்டி 1000 வரட்டியில் புடம்போட்டெடுக்கவும். பின்னர் இதனை காறைவேர் மாம்பட்டைச் சாற்றில், இலவங்கப்பட்டை, நெல்லிமுள்ளி இவற்றுடன் சேர்த்திடித்த கற்றாழைச்சாறும் சேர்த்துச் சட்டியில் வைத்து மேல்சட்டி மூடி 1000 வரட்டியில் புடம் போட்டெடுக்கவும்.

120. போடேதான் இப்படிதான் நாலு வாட்டி

பேரான பழச்சாற்றில் மூன்று வாட்டி

புடம்போடு பருத்தியிலை சாற்றி னாலும்

பிறகாமல் ஆலம்விழுது சாற்றி னாலும்

புடம்போடு மூன்று தினம் அப்பால் கேளு

பிறகுநீ நெல்லிமுள்ளிச் சாற்றி லாட்டி

புடம்போடு ஓர்தினந்தான் சிவந்து போகும்

பேசாதே காயசித்தி திரந்தான் நன்றே

இவ்வாறு 4முறை புடம்போட்டுப் பின்னர் எலுமிச்சம்பழச்-சாற்றில் 3முறை புடம் போடவும். பருத்தியிலைச் சாற்றிலும், ஆலம் விழுதச் சாற்றிலும் 3 நாட்கள் புடம்போடவும். பின்னர் நெல்லிமுல்லிச் சாற்றால் ஆட்டி ஒருநாள்புடம்போட செந்தூரிக்கும் காயசித்தி உண்டாகும்.

121. லோகசெந்தூரம்_

நன்றான லோக செந்தூரம் கேளு

நடப்பான லோகமோர் பலந்தான் மூன்று

குன்றாத சூதமோரு பலந்தான் வாங்கி

கொடுகெந்தி ரெண்டுபலம் தூக்கு தூக்கு

ஒன்றாக சூதமுடன் கெந்தி ரெண்டும்

முறைவாட்டு கல்வத்தில் கடிகை ரெண்டு

குன்றாலும் மிளகியது மயளமமாகும்

தூளான லோகத்தை யிதனில் சேரே

உலோகம் 105கி எடுத்து, சூதம் 35கி, கெந்தி 70கி இவற்றைக் கலவத்திலிட்டு இரண்டுமணிநேரம் தொடர்ந்து அரைத்து உலோகத்தை அதனுடன் சேர்த்துக் கொள்ளவும்.

122. சேரங்கே குமரிச்சாறு விட்டு நீயும்
சிதறாமல் இருசாம மாட்டி வாங்கி
சேர்த்தங்கே உருண்டைபண்ணி ஆமணக்கின் இலையில்
திடனாக வைத்தந்த இலையில் மூடி
சேர்த்தேதான் ரவியில்வைப்பாய் கடிகை யீராறு
சென்றதற்குபின் தீசுட்டாப் போல சுருங்கான்
சேர்ந்தநெல்லில் புதைத்திடுவாய் தினந்தான் மூன்று
திரும்ப அதை தூளாக ஆட்டி வாங்கே

இதனைக் குமரி எனும் கற்றாழைச் சாறுவிட்டு 6 மணிநேரம் அரைத்து உருண்டை செய்து ஆமணக்கிலையில் வைத்து இலையை மூடி 12மணி நேரம் வெயிலில் வைக்கவும். பின்அதனை எடுத்து பாத்தால் தீ சுட்டதுபோல் சுடும். இதை எடுத்து நெல்லில் புதைத்து 3 நாள் கழித்து எடுத்து தூளாக்கி ஆட்டிக் கொள்ளவும்.

123. வாங்கினதோர் செந்தூரம் தங்கம் பேலாம்
மாரணத்தின் செந்தூர மாகித் தப்பா
பாங்காக காந்தங்கள் லோகம் வெள்ளி
அரிதான தாம்பூரம் நல லோகங்கள்
தாங்கான சரக்கெல்லாம் அசுத்தி யாகும்
தாரணியில் காயசித்தி தானு மாகும்
தேங்காத மாரணத்தில் சித்தி யாகும்
செய்யடா குறைகள்ளெல்லாம் தணிந்த தாமே

இச்செந்தூரம் தங்கம்போல் மதிப்புள்ளதாகும். இது மாரணத்தில் செந்தூரமாகும். காந்தம், லோகம், வெள்ளி, தாமிரம், நவலோகம் இவை சுத்தியாகும். காய சித்தியுமாகும். மாரணத்திலும் சித்தியாகும்.

124. அப்பிரக செந்தூரம்.

தெளிவான அப்பிரக செந்தூரஞ் சொல்வோம்

சேரவாங்கி அப்பிரகம் சுத்தி செய்து

வளியாகும் செப்பு நெரிஞ்சி யினா லாட்டி

மைந்தனே சட்டிக்கு ளடைப்போ லப்பி

தெளியாம லப்பிரக மதின்மேல் வைத்து

நேராக அடையதனை மேலும் வைத்து

அளியால் சட்டிகொண்டு கவிழ்த்து மூடி

அப்பனே கெசபுடந்தான் போடு போடே

அப்பிரகம் எடுத்து சுத்தி செய்து செப்பு நெருஞ்சிலால் ஆட்டி அடைபோல் தட்டி சட்டியில் வைத்து அதன்மேல் அப்பிரகம் வைத்து மேலே ஒரு அடை வைத்து சட்டி கவிழ்த்து மூடி 1000 வரட்டியில் புடம்போட்-டெடுக்கவும்.

125. போட்டதொரு அப்பிரகம் திரும்ப வாங்கி

புகழாகக் கல்லுரலில் தூளாய் நீதான்

நாட்டியே வாங்கியதை மாந்தோலா லாட்டி

அடவாகச் சாற்றா லடைதான் தட்டி

தாட்டுவாய் மிம்பட்டை தேத்தான் கொட்டை

நயமாகப் பொடியாக்கி யெரண்டி விட்டு

மூடியே அடைதன்னை யோட்டி விட்டு

முன்போலே சீலைசெய்து மூடு மூடே

அப்பிரகத்தைத் திரும்பவும் எடுத்துத் தூளாக்கிக் கல்லுரலில் போட்டு மாம்பட்டைச் சாற்றால் ஆட்டி எடுத்து அடை தட்டி, மிம்பட்டை, தேத்தான்கொட்டை இவற்றைப் பொடித்து ஏரண்டத்தெண்ணை விட்டு அடை தட்டி ஒட்டிவிட்டு முன்போல் சீலை செய்து புடம் போட்டெடுக்கவும்.

126.முடியேப் புடம் தறந்த ளாய் யாட்டி

முன்போலே முன்முதரம் கெசபுடந்தான் போடு

நீட்டிய நெல்லிமுள்ளிச் சாற்றா லாட்டி

நீகேளு வாழையுட கிழங்கு நீரும்

முடியே கலந்தாட்டி அடைதான் செய்து

உறப்போடு முன்போலே புடத்தில் நீயும்

நாடியே இப்படியே கெசபுடந்தான் போடு

நயமாக யெடுத்ததனை ஆட்டு ஆட்டே

புடம் திறந்த ளாக ஆட்டி3 முறை 1000 வரட்டியில் புடம் போடவும். அதனை எடுத்த நெல்லிமுல்லி சாற்றாலாட்டி வாழைக்கிழங்கு நீரும் கலந்த ஆட்டி அடை செய்த முன்போல் புடம்போட்டு (1000 வரட்டியில்) எடுக்கவும்.

127.எடுத்திடவே நெல்லி முள்ளிச் சாற்றில்

இதமாக ஆட்டியதை பாகம் செய்த

கொடுத்திடதான் முன்போலே சீலை செய்த

அருணன் போல -- --

விடுத்திடுவாய் வியாதிகளை யுன்ன வென்றால்

பஞ்சில் பொறியப்பட்டா போா யெகுன்

தடுத்திடுமே ஆயித்தம் நரை திரையும் தள்ளும்

சதிரான சாத்திரத்தென் வியாதி போமே

இதனை எடுத்த நெல்லிமுள்ளிச் சாற்றால் ஆட்டி சட்டியில் வைத்த மேல்சட்டி மூடி சீலை செய்த புடம்போட்டு எடுத்தக் கொள்ளவும்.இதை முறைப்படி உன்டுவந்தால் பஞ்சில் பொறிபட்டால் போல நோய்கள் நீங்கும். நரை,திரை நீங்கும், பல வியாதிகளும் நீங்கும்.

128. மன்டூர செந்தூரம்.

வியாதிமொழ் மன்டூர செந்தூரம் கொண்டால்

மைந்தனே வைக்கிறதோர் வரிசை கேளு

நயாதிபோல் சத்த திரமாம் வருஷம்சென்ற

நதிங்கள் தனிக்கிடக்கும் கரிய கிட்டம்

யதில்பேர் கொண்டுவந்து தூளாய் யாட்டி

அப்பனே தாவிறிமாகக் கரி யினாலே

நீயாதிபேர் யுலையில் விட்டுச் சிவக்க

நிலாவின் கோமியத்தில் யூறிப் போடே

மன்டூர செந்தூரம் உட்கொண்டால் அதை வைக்கவேண்டிய வரிசை சொல்வேன். ஓராண்டு சென்ற பின்னர் கரிய கிட்டத்தைக் கொண்டு வந்து இடித்துத் தூளாக்கி உலையிலிட்டு அடுப்பேற்றி சிவக்குமாறு பசுகோமியத்தில் ஊறப்போட்டெடுக்கவும்.

129. ஊறியபின் யென்றதனை ஆறால் வாங்கி

உலர்த்தியதைத் தூளாக்கி குழாயி லிட்டு

மாறியதோர் மன்டூர சிவப்பு மாச்சு

மரித்துமதை செந்தூரமாக கொள்ளு

வீருடனே மூன்றுநாள் நாகவல்லிச் சாற்றில்

விபரமுடன் ஊட்டுவாய் வத்த வத்த

வாறாக நொச்சிச்சாறு வெள்ளாட்டுப் பாலிளநீர்

மைந்தனே மூன்றுதினம் கொதிக்க வைய்யே

ஊறியபின் அதனை எடுத்துத்தூளாக்கி குழாயிலிட்டுப் பார்க்க மன்டூர் சிவப்பாகும். இதனைச் செந்தூரமாக நாகவல்லிச் சாற்றில் தொடர்ந்த 3 நாட்கள் சர்ப்பிட்டு வரலாம். நொச்சிச் சாற்றால், வெள்ளாட்டுப் பாலில் இளநீரில் 3 தினம் தனித்தனியே கொதிக்க வைத்துக் கொள்ளவும்.

130.வைத்ததுதான் யெப்படியோ வெவ்று நீயும்
வயனங்கேள் வெவ்வேறு தினந்தான் மூவ்று
வைத்ததனை வத்தவைத்து பின்பு வாங்கி
வரிசைபெற்ற ஒருசாமம் குமரிச் சாற்றில்
வைத்தாட்டி கொண்டுஇடவே குப்பி கேளு
வைப்பதுதான் ஆறிவிடும் சுத்தி யாகும்
வைத்தியா கொண்டுஒரு புடந்தான் செய்து
வராக புடம்தான் போடு போடே

தனித்தனியே 3 நாட்கள் கொதிக்க வைத்து இறக்கிக்கொள்ளவும். இதனை எடுத்து 3 மணிநேரம் குமரிச்சாற்றால் ஆட்டி எடுத்தச் சுத்தியாகும். இதனை வராகப் புடமிட்டெடுத்துக் கொள்ளவும்.

131.போட்டிடுவாய் மூண்டுக செந்தூர மாச்சு
போக்கதிலே வியாதிகளை பிடுங்கி தின்று
மாட்டிடுமே மகோதரத்தை காமாலை பாண்டு
வனிசோகை பெருவயறு வலிய வீக்கம்
மாட்டியதோர் ஈளைமுதல் மேகந் தானு
மாக்கவகை கிராணிவகை யெல்லாந் தீரும்
மூட்டவே அனுப்பான முரைக்க கேளும்
உத்தமனே வியாதிகண்டு யுறவு கேரே

இந்த மண்டூர செந்தூரமானது பலவகையான வியாதிகளைப் போக்கும்.மகோதரம்,காமாலை, பாண்டு,சோலை,பெருவயறு,வீக்கம், ஈளைமுதல் மேகம் வரையிலான நோய்கள், கிராணி வகைகள் எல்லாம் தீரும்.

132.உருக்கு_செந்தூரம்

உறவுசேர் உருக்கிலே செந்தூரந் தன்னை

யுரைக்கிறேன் உளிபத்து வாங்கி யேதான்

உறவாக உலையிலிட்டு அருணன் போலே

யூறியதை யாரில் வெள்ளாட்டு நீரில்

உறவாகச் சமன்கலந்து வைத்தா யானால்

யசிருமடாத் கருங்கதேலி தோய்க்க தோய்க்க

உறவாக உதிர்ந்தபொடி யெல்லாம் வாரி

வூறலாட்டுக் கரிப்பான்நீர் விட்டு காணே

உருக்கும் செந்தூரத்தைச் சொல்வேன்.பத்து இரும்பு உளிகளை வாங்கி எடுப்பு உலையிலிட்டு எடுத்து வெள்ளாட்டு நீரில் சமனாகக் கலந்து கருங்கதலிச்சாற்றில் தோய்க்கவும்.உதிர்ந்த பொடிகளைச் சேகரித்து கரிப்பான் நீர்விட்டு ஆட்டிக் கொள்ளவும்.

133.காணப்பா ஆட்டியதை வில்லை தட்டில்

காயவைத்து சட்டிக்குள் ஆலிலை பரத்தி

பூணப்பா வில்லைதன்னை இதடேல் விட்டு

புகளாக பின்னுமந்த யிலையால் மூடி

யூணப்பா மேல்சட்டி இட்டு மூடி

உறவாகச் சீலைசெய்து புடத்தில் வைத்து

தோணப்பா கெசபுடத்தா லாட்டி வாங்கி

தோய்ந்தவிடு சிறுகுறிஞ்சா சாறு சாறே

ஆட்டியதை எடுத்து உலர்த்தி வில்லை செய்து காயவைத்து சட்டிக்குள் ஆலிலை பரப்பி வில்லைகளை மேல் வைத்து அதன்மேல் ஆலிலைகள் பரப்பி மேல்சட்டி மூடி சரியாகச் சீலைமண் செய்து 1000 வரட்டியில் புடம் போட்டெடுக்கவும். இதனை எடுத்து சிறுகுறிஞ்சான் சாற்றில் ஆட்டிக் கொள்ளவும்.

134. சாறுவிட்டு ஆட்டி நீகெச புடந்தான்போடு தனிக்குறிச்
சாற்றினால் கெசபுடந்தான் சேரவே புடந்தான் செய்து
கூறுடனே யெடுத்துப்பார் முருக்கவிப் பூபோலக்
கொண்டுகியது செந்தூரம் கொடிய சித்தி
மாறுபட நோய்களெல்லாம் திண்ணிபாலையும் சமனாய்
வரிசையுடன் பொடிகட்டி வைத்துக் கொண்டு
ஆரியதோர் செந்தூரம் பணந்தான் தூக்கி
யப்பனே தேனிலே குழப்பிக் கொள்ளே

ஆட்டியெடுத்தபின் முன்போல்1000 எருவில் புடம் போட் - டெடுக்கவும். பிள்ளர் தனிக்குறிஞ்சான் சாற்றினால் கெச (1000)புடம் போட்டுஎடுத்துப் பார்க்க முருக்கம் பூப்போலிருக்கும். இச்செந்தூரத்தை எடுத்து நோய்களுக்கு வழங்கலாம். இந்த செந்தூரத்தை 5மிகி அளவு தேனில் குழப்பிக் கொள்ளவும்.

135. கொள்வே தூலவுடன் சூட்ச மாகும்
குறைந்திருந்த சூட்சமுடன் நெய்யில் கொள்ள
வெள்ளவே பருத்திருக்கு மயம்போ லப்பா
மீறிவரும் நரைதிரைகள் வேருவி யோடும்
விள்ளவே நாவெதை பாவு மேதை
மேலோர்கள் யங்கிட்ட மிரண்டு கொண்டா
ரள்ளவே குறையாது கடையி லேத்தம்
மருந்து நவலோகத்தை அரைந்து ஆடிட

இந்தத் தூலவுடல் சூட்சுமஉடலாகும். குறைந்த இச்செந்தூரத்தை நெய்யில் உட்கொள்ள பருத்திருக்கும். உடல் மெலியும். நரை திரைகள் நீங்கும். நாவேதை, பாவுமேதை இரண்டும் கொண்டால் நல்லதாம். நவலோகத்-தையும் சேர்த்து அரைக்கவும்.

136. மிருகசஞ்சீவி மாத்திரை:_

ஆட்டவே மிருக சஞ்சீவி சொல்வோம்

அப்பனே சூதமோடு கெந்தி யொன்று

நீட்டவே கல்வத்தில் சாம மொன்று

நீட்டியே யாடையிலே மயன மாகும்

மூடவே காத்திருக்கு மப்பிரக பற்பம்

முயரிஅந்த லோகபற்பம் தாம்பூர பற்பம்

தாடவே தாளகமும் நாவ லிங்கம்

நலமான மனோசிலையும் குக்கில்விட்ட பற்பம்

சூதத்தையும் கெந்தியையும் சேர்த்து கல்வத்திலிட்டு 3மணிநேரம் அரைத்தெடுக்க மயனமாகும். அப்பிரக பற்பம், லோகபற்பம், தாமிர பற்பம், தாளகம், நாவலிங்கம், மனோசிலை, குக்கில் இற்றையும் பற்பமாக்கிக் கொள்ளவும்.

137. பாரப்பா அத்தி திப்பிலி யினுமே

பரிவான அதிவிடயம் சொர்ண மாஞ்சி

சீரப்பா யிதுவெல்லாம் ரச செந்தியுடன்

சேரரசமான யிஞ்சிச்சாறு சிவதை சாறு

வாரப்பா சிறுக்கீரை இவைகள் தன்னில்

மாட்டியே ஆட்டுவாய் தினந்தான் ரெண்டு

போரப்பா கஞ்சாவின் சாற்றி னாலே

பொருந்தவே தினமொன்று புகட்டி யாட்டே

அத்தி, திப்பிலி, அதிவிடயம், சொர்ணமாஞ்சி, ரசசெந்தி, கோரோசனை, இஞ்சிச்சாறு, சிவதைச்சாறு, சிறுகீரைச்சாறு இவற்றால் இப்பொருட்களை 2 நாட்கள் தொடர்ந்து ஆட்டி பின்னர் கஞ்சா சாற்றால் 1நாள் முழுமையும் அரைத்துக் கொள்ளவும்.

138. ஆட்டப்பா பழச்சாற்றால் வல்லாரை சாற்றால்

அப்பனே ஆறவைத்து குப்பிக் கேத்தி

ஆட்டடா சீலைசெய்து தாளிக் குள்ளே

முதிரவே மணலிட்டு குப்பி வைத்து

நீட்டடா மேலமந்த மணல் பரப்பி

நிலவாக யிருசாமம் யெரித்து வாங்கி

மீட்டடா வாறியபின் தூளாய் வாங்கி

மேலான மாத்திரைதான் செய்யக் கேளே

எலுமிச்சம் பழச்சாற்றாலும், வல்லாரைச்சாற்றாலும், அரைத்து குப்பிக்கேற்றி தாழிக்குள் முழுமையும் மணலிட்டு மேல் குப்பி வைத்து சீலை செய்து ஆறியபின் தூளை எடுத்து உருட்டி மாத்திரைகளாகச் செய்து கொள்ளவும்.

139. சூசிகா பாணம்

கேளப்பா இஞ்சிச்சாற் றன்னா லாட்டி

கிருபையுடன் குன்றியிடை குளிகை கட்டி

சூள்ப்பா சன்னிமுதல் சன்னிக் கெல்லாம்

சூட்டவெகு தஞ்சிநிரை யுயிர்கள் மீளும்

நாளப்பா சூசிகா பாணஞ் சொல்வேன்

நாடியுற பதின்மூன்று சன்னி தீரும்

வாளப்பா சூதமொன்று காந்த மொன்று

வாகான தாம்பூரமயம் லோகந் தானே

மேற்சொன்ன தூளை இஞ்சிச் சாற்றலாட்டி குன்றி அளவாகக் குளிகை செய்து எல்லா வகையான சன்னி நோய்களுக்கும் வழங்கிட 13வகை சன்னி நீங்கும். சூதம் ஒரு பங்கு காந்தம் ஒரு பங்கு சேர்த்து தாமிர லோகத்தனை எடுத்துக் கொள்ளலாம்.

140.லோகமுடன் அப்பிரகம் ஆமம் நேராய்

நொறுக்கியதை நேர்சமனாய் சேர்த்தி கூட்டி

லோகமுமம் தொச்சிவேர் சித்திர மூலம்

தனுக்கமுடன் சரியாக கசாயம் வைத்து

லோகமுமும் பொடியாட்டு தினந்தான் மூன்று

நேராகவதை யாட்டி நீவாங்கி பின்பு

லோகமுமு நாயுருவி கரிப்பான் ஊமத்தை

நோயகலும் பேய்யத்தி தக்காளி காணே

இவற்றுடன் அப்பிரகம் சேர்த்து நொறுக்கி நேர்சமனாய் எடுத்து நொச்சிவேர், சித்திரமூலம் இவற்றையெல்லாம் சேர்த்து முறைப்படி கசாயம் வைத்து அதைக் கொண்டு மூன்றுநாட்கள் லோகப் பொடியை ஆட்டவும். நாயுருவி, கரிப்பான் ஊமத்தை பேயத்தி, தக்காளி

141. காணப்பா சித்திரைப் பாலாடை கோட்டான்

கரந்தையோடு வெள்ளைக் காகறணை மிக்க

பன்பாக பமுபாகல் தாழைபுகழ் சீந்திச்

சாரணையும் பேய்ச்சுரைக ளெல்லாம்

தோணப்பா பேய்த்துளசி இவைநீர் வாங்கித்

தோய்த்தத்த நீர்சுவற ரவியில் வைப்பாய்

நாளப்பா தினமொன்று சாற்தான் ஒன்று

நயமாக விரவியதை ரவியில் போடே

சித்திரப் பலைநடை, கோட்டம், கரந்தை, வெள்ளைக் காக்கரணை, பமுபாகல், தாழை, சீந்தில், சாரண, பேய்ச்சுரை, பேய்த்துளசி இவற்றின் சாறெடுத்து தோய்த்து வெயிலில் வைத்து ஒவ்வொரு நாளும் ஒருஒரு சாறாக ஊற்றி வெயிலில் வைக்கவும்.

142.போட்டனிப்பு வாவனைதான் யின்னமங் கேளு
புகழ்கோழி மீன்மச்சை பன்றி வெள்ளாடு
ஊட்டியதின் பித்தகளில் யெழு வாட்டி
யூறவைத்து திப்பிலியின் கசாயத் தாலும்
மாட்டியதை பாவினைதான் செய்து மைந்தா
வதில்சமனாய் நாவிதனை சேர லாமே

இதன் பின்னர் கோழி,மீன்,பன்றி, வெள்ளாட்டுப் பித்துகளில் ஏழு முறை ஊறவைத்துத் திப்பிலிக் குடிநீரிலும் ஊறவைத்து அதே அளவு நாவிதனைச் சேர்த்துக் கொள்ளவும்,

143. சேர்த்ததொரு சூரணத்தை முன்சொல் லதில்
திரும்பவைத்து யெடுத்துக் கொண்டு
சேத்திடுவா யநுப்பானம் நோய்கள் கண்டு
செயல்கண்டு முறையுடனே செய்து நீயும்
சேர்த்திடுவாய் யருசூலை பெருவயறு குன்மம்
தீராத பான்டுடனே வலிதான் குட்டம்
சேர்த்திடவும் சயத்த குருவாதம் தானும்
சொல்லாத வீக்கமுடன் வறட்சி போமே

முன்னர் சொன்ன சூரணத்தை தக்க அனுபானத்தில் உட்கொண்டு வந்தால் இரண்டுவகை சூலைகள், பெருவயிறு,குன்மம்,பான்டு, வலி, குட்டம்,வாதம்,வீக்கம்,வறட்சி இவை நீங்கும்.

144. வறட்சிபோம் வெட்டைபோம் மறுக்கு தேகம்

மைந்தனே சஞ்சீவி மருந்தான சித்தி

மிறட்சியோடு நரம்பெல்லாம் அமுர்தம் மூறும்

மிறகமென்றயி பூபதியை யியம்பக் கேளு

வறட்சிபோம் மிறதபற்ப மந்த பற்பம்

வாங்காத நாவிலிவை நேர்தான் தூக்கி

குறைச்சிடாக் கெந்திரெண்டு திரிகடுகு திரிபாலை

கூறாகயிவைக ளெல்லாம் நேராய் நொறுக்கி டாயே

வறட்சி நீங்கும். வெட்டை அகலும். அமிர்த சஞ்சீவி உண்டதுபோலவே உடல்பலம்பெறும். நரம்புகளில் எல்லாம் அமிர்தம் ஊறும். இரச பற்பத்துடன் நாபியைச் சமஅளவு சேர்த்து கெந்தி, திரிகடுகு, திரிபலைஇவற்றை [illegible] உடைத்துத் தூளாக்கிக் கொள்ளவும்.

145. நொறுக்கியான தழுதாழை கண்டங் காரி

நொச்சியடா மேயத்திகும்மிட்டி யிவைகளெல்லாம்

நறுக்கியதோர் கொடிவேலி தீண்டாப் பாளை

நட்டடா கசாயமிட்டு வாங்கி மைந்தா

சிறுக்கடா யிருபதுநா ளாட்டி வாங்கி

சீரான உறுந்திடைக் குளிகை கட்டிச்

சுறுக்கடா சன்னிக்கு ஈந்தா யானால்

தொட்டவுடன் பதிமூன்றும் ற்றிப் போமே

இவற்றுடன் தழுதாழை கண்டங்காரி, நொச்சி, மேயத்தி கும்மட்டி இவற்றை நறுக்கி கொடுவேலி, ஆடுதீண்டாப்பாளை இவற்றைக் கொதிக்க வைத்துக் கஷாயமிட்டுக் கொள்ளவும். கஷாயத்தால் முன்சொன்ன பொருட்களை இருபது நாட்கள் கட்டி உளுந்தளவாகக் குளிகைகள் செய்து சன்னிக்கு வழங்க 13 வகை சன்னி நோய்களும் நீங்கும்.

146.நீறுமென்ற பஞ்சவறி யிரதம் சொன்னேன்
நேருடனே காலாக்கினி ருத்திரன் சொன்னேன்
வேறுமென்ற நாவிகெந்தி வெங்காரம் சூதம்
பலமான மிளகுடனே யிடைதான் நேராய்
மாறுமென்ற மத்தஞ்சொறி கொண்டு ஆட்டு
வகையாக தினமூன்றில்வலித்து ஊட்டி
ஆறியே யுலந்தபின்பு புகழாய் யாட்டி
அப்பனே செப்புலே அடைத்து வைய்யே

இதுவரை பஞ்சவறி இரதம் சொன்னேன். காலாக்கினி ருத்திரன் சொன்னேன். நாவி, கெந்தி, வெங்காரம், சூதம், மிளகு இவை வகைக்கு 35கி வீதமெடுத்து ஊமத்தஞ்சாறு சேர்த்து 3 நாட்கள் ஆட்டி உலர்ந்த பின்பு நிழலிலுலர்த்தி செப்பில் அடைத்துக் கொள்ளவும்.

147.அடைத்ததொரு பொடிகுன்றி யிடைதான் தூக்கி
ஆகாத சன்னிக்கு அளித்தா யானால்
லுடைத்திடுமே பனிரெண்டு சன்னி பின்பு
யேராத சன்னி பிறகு சன்னி யொன்று கூடத்
துடைத்திடுமே தோசங்கள் பலவும் தீரும்
தருசான காலாக்கினி ருத்திரன் கேளப்
படைத்த சத்தியாவசார யவச்சாரம் தானும்
பங்கான நவச்சாரம் யிந்துப்பூவே

இதனைப் பயன்படுத்தும்போது உடைத்துத் தூளாக்கிக் குன்றி-யளவெடுத்து வழங்கி வர 13வகை சன்னிகள் யாவும் குணமாகும், என்பதாம். மேலும் பலவகை தோஷங்களும் தீரும். இனி காலாக்கினி ருத்திரன் சொல்வேன். சத்தியச்சாரம், யவச்சாரம், நவச்சாரம், இந்துப்பு

148.இந்துவோடு பொட்டிலுப்பு வளைய லுப்பு

இயல்பான காச்சுப்பு கல்லுப்புப் பாதிவ்

மைந்தனே சரிகூட்டி கல்வத் திட்டு

மாட்டியதில் யொரிதைதான் சூத மிட்டுத்

தொந்தமுறவோர் தினந்தான் மத்தித்து வாங்கி

சூட்டவே மேல்மருந்தை தூய்மையாய் நீயுஞ்

சிந்திரவே பெருங்காயங் கடுக ரத்தை

சிறப்பான புகழ்கண்ட வித்துவிடை நோராட்டே

பொட்டிலுப்பு, வளையலுப்பு,காச்சுப்பு, கல்லுப்பு, இவற்றைச் சம அளவு சேர்த்து கல்வத்திலிட்டு சூதமிட்டு ஒரு நாள் முழுமையும் மத்தித்து மேல்மருந்தாகக் கடுகு அரத்தை கண்டவித்து இவற்றை நேரளவாக எடுத்துக் கொள்ளவும்.

149. ஆட்டியதோர் மருந்துக்குள் சூத மிட்டு

அப்பனே மூடியதை தோளாந்த மாக

ஊட்டுவாய் பழங்காடின பாண்டத் திட்டு

உறவாக தினம்ரெண்டு எரித்து வாங்கி

மாட்டுவாய் ஊமத்தஞ்சாற் நொச்சிச் சாறு

வகையான கரிப்பான்சாற் மணத்தக் காளி

கட்டுவாய் பொன்முசுட்டை கொடுவேலி யிஞ்சி

வெள்ளைக் கொட்டை கிரந்தைச் சாறென

ஆட்டியரைத் எடுத்த மருந்திற்குள் சூதத்தைப் பொதித்து வைத்து மூடி தோளாந்திரமாகக் கட்டித் தொங்கவிட்டு பழங்காடியைப் பாண்டத்திலிட்டு தினம் 2 மணிநேரம் எரித்து வாங்கி ஊமத்தஞ்சாறு, நொச்சிச்சாறு, கரிப்பான்சாறு, மணத்தக்காளிச்சாறு, பொன்முசுட்டை,கொடுவேலி இஞ்சி, வெள்ளைக்கொட்டை, கரந்தைச்சாறு

150. சாறுகளில் வொவ்வோருநாள் ஆட்டி வாங்கித்

தனித்தவினி பாவனைக்குத் தூ ளா யாட்டி

வீறுபுகழ் மிளகதற்கு நேரா யாட்டி

விரவியதை மயில்பித்து வராகனி பித்து

மீறிவளர் மீன்பித்து வெள்ளாட்டின் பித்து

வெவ்வேறே தினமொன்று விரவி வைநீ

ஊறியபின் றெண்டுகுன்றி வெல்லந் தேனில்

ஊட்டடா தயிரும்சோ றுண்ணச் சொல்லே

சாறுகளில் ஒவ்வொருநாள் ஆட்டி நன்றாக நைந்தபின் அதே அளவு மிளகு சேர்த்து அரைத்து மயில்பித்து, பன்றிப்பித்து, மீன்பித்து, வெள்ளாட்டுப்பித்து இவற்றிலெல்லாம் ஊறவைத்து எடுத்து பின் வெல்லம் அல்லது தேனில் 2 குன்றி அளவாகச் சாப்பிட்டு வரவும். தயிரும் சோரும் உண்ணவும்.

151. உண்ணயிலே வெட்டைவந்து மேவித் தானால்

உடனந்தலையில் குளிர்ந்தசலம் முறவார் நீயும்

உண்மையிலே சன்னிபோம் தோசம் போகும்

உயிர்பாரிக்கும் அட்டகுன்மம் கவுசிபோகும்

உண்மையிலே பெருவயறு பாண்டு போகு

ஓவோகோகோ கரிசிஙக ளாறும் மோடும்

உண்மையிலே சாரமுறுங் கார முறும்

உத்தமனே வெகுவாக உரைக்கி றேனே

வெட்டைநோய் உண்டானால் தலையில் குளிர்ந்த ஜென்னீர்விட்டுக் குளிக்கவும். இம்மருந்துண்பதால் சன்னி, தோஷம் இவை நீங்கும். உயிர்க்கே உலை வைக்கும். அட்டகுன்மம், உடல் கவிச்சை இவை நீங்கும். பெருவயிறு, பாண்டு இவை நீங்கும். கார சாரம் இவை உறும் எனபதாம்.

152. உரைக்கிறேன் சன்னியா தாங்கு சாசத்தை
உத்தமனே இரதமொன்று கெந்தி யொன்று
நிரைக்கிறதோ ரரிதாரம் நாவிமாஞ்சி
நேரான பொன்மாஞ்சி தாம்பூர பற்பந்
தரைக்குயர்ந்த வப்பிக்கு சத்திச் சாரஞ்
தாங்குநிட சார மிவச்சாரந் தானும்
பேரைக்குயர்ந்த கற்கடகசிங்கி பெருங்காயம் வசம்பு
பேய்ப்புடலம் பொன்முசுட்டை கடுக்காய் சுக்கே

இரசமொருபங்கு, கெந்தியொருபங்கு, அரிதாரம், நாவி, மாஞ்சில், பொன்மாஞ்சில், தாம்பிரபற்பம், சத்திசாரம், நவச்சாரம், கற்கடகசிங்கி, பெருங்காயம், வசம்பு, பேய்ப்புடல், பொன்முசுட்டை, கடுக்காய், சுக்கு, இவற்றைச் சேகரித்துக் கொள்ளவும்.

153. சுக்குடனே கஞ்சாவும் நிலப்பனையின் மூலந்
தஞ்சாத நிம்பத்தின் பிசினும் நேராய்
யீக்குவாற் செத்தஉத்தம தாளிச் சாற்றால்
பழச்சாற்றில் தினமும் ரெண்டுவெவ் வேறாக
யுக்கிறமாய் யாட்டியே கடலை போல
வுருட்டியே திசைமூல கசாயந் தன்னில்
தக்கதொரு யிஞ்சிச்சாற் வற்றி யூட்ட
சாந்தவரும் வியாதிட வகையை கேளே

சுக்கு, கஞ்சா, நிலப்பனைமூலம், வேப்பம்பிசின் இவற்றைச் சம அளவெடுத்துஉத்தம தாளிச்சாற்றில் ஒரு நாள் அரைத்து, எலுமிச்சம்பழச்-சாற்றால் 1 நாள் அரைத்து முத்துக் கடலை அளவு உருண்டை செய்து திசைமூலக் கஷாயத்தில் தேவையான அளவு இஞ்சிச்சாறு சேர்த்து வழங்கி கீழ்காணும் நோய்கள் நீங்கும்.

154.வடவளார் ரசம்

வியாதியெனும் பதிமூன்று சன்னி தானும்
    விக்கலோடு வாந்தியுறு வெட்டை தானும்
வியாதியெனும் கரப்பான்முதல் புண்கள் தீரும்
    மேலான வடவளார் ரசத்தை கேளு
வியாதிபோம் சூதமொன்று கெந்தி யொன்று
    மேலான அப்பிரக தாம்பூர பற்பம்
வியாதிபோம் காந்தம் மாஞ்சி காந்தாரம்
    வீரான நீலாஞ்சன மனமுந் தூக்கே

துன்பந்தரும் நோய்களான 13வகை சன்னிகள், விக்கல், வாந்தி, வெட்டை, கரப்பான், புண்கள், இவை தீரும். ஒருபங்கு சூதம், கெந்தி, அப்பிரகம், தாம்பிரபற்பம், காந்தம், மாஞ்சிகாந்தாரம், நீலாஞ்சனமனமும் சேகரித்துக் கொள்ளவும்.

155.தூக்கடா கடல்நுரையும் மிவைதான் நேராய்
    துடியான யிந்துப்பு பொட்டி லுப்புத்
தூக்கடா வெடியுப்பு காச்சுப்புத் தானும்
    சுகமான அட்டுப்பு அஞ்சும் நேராய்
தூக்கடா சதுரக்கள்ளிப் பாலில் லொருநாள்
    துரிசாக ஆட்டியதைக் குகையி லிட்டுத்
தூக்கியே குழிக்குள்ளே குகையை வைத்து
    சேரவன்றி வாய்மூடி யெருத்தான் போடே

இதே அளவு கடல்நுரையும் நிறுத்தெடுத்துக் கொண்டு இந்துப்பு, பொட்டிலுப்பு, வெடியுப்பு, காச்சுப்பு, அட்டுப்பு இவை ஐந்தும் சமஅளவு நிறுத்தெடுத்து இடித்துச் சதுரக் கள்ளிப் பாலில் 1 நாள் முழுமையும் அரைத்து குகையிலிட்டு குழிக்குள்ளே குகையை வைத்து வாய்மூடி எருவடுக்கிக் கொள்ளவும்.

156.அடுக்குவத குளி மேலும் கீழும் அப்பனே
அப்படியேகன் பீடமாய் யொருநாள் மட்டும்
யெடுத்திடுவாய் மறுநாளில் தூளா யாட்டி
இருகட்டுமங் குன்றியிடை இஞ்சிச் சாற்றில்
கொடுத்திடுவாய் மூன்றுதினம் மேல்பொடியைக் கேளு
கறான திப்பிலியின் பொடியைத் தூவி
படுத்திடுமே முகவாதம் தானும் வாத சன்னி
பாங்கான அடுக்குவாதம் பாருங் கானே

குழிக்குள்ளே விறகடுக்கி குப்பியை வைத்து மேலே விறகடுக்கி கனபுடம் போட்டு ஒருநாள் கழித்தெடுத்துக் கொள்ளவும்.மறுநாள் எடுத்துத் தூளாக்கி ஆட்டி குன்றி அளவெடுத்து இஞ்சி சாற்றில் 3 நாள் அரைக்கவும்.மேல்பொடியாகத் திப்பிலிப் பொடியைத் தூவிச் சாப்பிட்டு வந்தால் முகவாதம் வாத சன்னி அடுக்கு வாதம் நீங்கும்.

157.பாருமப்பா கழல்வாதம் வத்துட வாதம்
பாவின்ற தடிவாதம் விலங்கு வாதம்
படபடத்து மூச்சிக்கும் படராம் வாதம்
பாருமப்பா அனுப்பானம் கசாயம் கேளு
பாங்கான வாமணக்கு சித்தா முட்டி
பாருமப்பா வேர்கொம்பு மடக்கி வேரும்
படசிக்கில் யிவையெல்லாம் பாக்குமந் தானே

கழல்வாதம்,தொடைவாதம்,தடிவாதம்,விலங்குவாதம்,படபடத்து மூச்சிரைக்கும்.படபடப்பு வாதம் ஆகியவற்றிற்கு அனுபானம் கீழ்வரும் கசாயமாகும்.ஆமணக்கு, சிற்றாமுட்டி, வேர்க்கொம்பு, அடக்கிவேர், பாக்குவேர் இவற்றைச் சேகரித்துக் கொள்ளவும். முறைப்படி கசாயம் செய்து அனுபானமாகப் பயன்படுத்தலாம்.

158.சாளென்ற சொற்க்காந்த வயிரவத்தை சொல்லுவேன்

சாறுவகை யென்பத்தினால் வாதந் தீரும்

தாளென்ற சூதமொன்று லோக மொன்று

தாளகமும் தான்னொன்று நிமிளை யொன்று

தாளென்ற கெந்தியொன்று நாபி யொன்று

தாம்பூரபற்பந் தானொன்று சித்திர மூலம்

தானென்ற வெங்காயம் நொச்சி வேரும்

சமன்சேர்த்து கல்வத்தில் பொடித்தி டாயே

சாறு வகைகள் 80ஆல் வாதம் தீரும்.சூதம் ஒரு பங்கு, உலோகம் 1பங்கு, தாளகம், நிமிளை, கெந்தி ,நாபி,தாம்பிர பற்பம், சித்திரமூலம்,வெங்காயம்,நொச்சிவேர் இவற்றைச்சம அளவு சேர்த்துக் கல்வத்தில் பொடித்தெடுத்துக் கொள்ளவும்.

159.பொடித்ததனை நொச்சியிலைச் சாற்றா லாட்டி

போகவகை கரந்தைசாற் தன்னி லோர்நாள்

மடித்தாட்டி குன்றியிடை குளிகைக் கட்டி

மைந்தனே இஞ்சிச்சாற் றின்னக் கேளு

பத்தமாய் கசாயமப்பா திப்பிலி மூலம்

பாங்கான சூரணத்தை பகரு வோம்நாம்

நடித்துடைய சீந்தி சர்க்கரை அரத்தை

நயமான நிம்மிட பட்டை பாரே

பொடித்ததனை நொச்சிச் சாற்றாலாட்டி கரந்தைச் சாற்றில் ஒருநாள் ஆட்டி குன்றி எடை அளவு உருண்டைசெய்து இஞ்சிச்சாறு சேர்த்து திப்பிலி மூலக் கஷாயத்தைச் சேர்க்கலாம்.சீந்தி சர்க்கரை,அரத்தை, நிம்மிடப்பட்டை இவற்றைச் சேகரித்துக் கொள்ளவும்.

160.பாருமய்பா லாமணக்குப் பருப்புத் தானும்
பருஞ்சுக்கு நொச்சியிலை தேவ தாரம்
நேரய்பா தூளாக்கி அதற்குள் நேராய்
நிறுத்திடுவாய் சுத்திசெய்த குக்கில் சேர்த்து
ஆரய்பா நெய்விட்டு ஆட்டிக் கொண்டு
அனுப்பான சாறுகளில் அறிந்து ஊட்டு
பேரய்பா வாதத்தைப் பிடுங்கி தின்னும்
புகளான வயிரவத்தின் போக்குத் தானே

ஆமணக்கம் பருப்பு, சுக்கு, நொச்சியிலை, தேவதாரம் இவற்றைத் தூளாக்கி சமஅளவு நிறுத்து சுத்தி செய்த குக்கில் சேர்த்து நெய்விட்டு ஆட்டிக் கொண்டு உரிய அனுபான சாறுகளை உணர்ந்து வழங்க வாதநோய்களை நீக்கும். இது வயிரவத்தின் போக்காகும்.

161.மிருதாங்க ரசம்

போக்குமிகு மிருதாங்க ரசத்தைச் சொல்வோம்
புகளான சொர்ணப்பற்பம் தாம்பூர பற்பம்
போக்குமிகு சூதமிவை சீரியாய் சேரு
வெங்காரம் இவைரெண்டு கெந்தி ரெண்டு
போக்குமிகு மனோசிலையும் கழஞ்சி ரெண்டு
பொடியாக்கி குகைமருந்தை புகழக் கேளு
போக்குமிகு வெங்காரம் பலகறையும் நேராய்
புகட்டியதை வெள்ளாட்டுப் பாலால் ஆட்டே

சொர்ணபற்பம், தாம்பூரபற்பம், சூதம் இவற்றைச் சமஅளவாகச் சேர்த்து வெங்காரம் 2 பங்கு, கெந்தி இரண்டு பங்கு, மனோசிலை 10கி இவற்றைச் சேர்த்து பொடித்துக் கொள்ளவும். வெங்காரம், பலகரை இவற்றைச் சேர்த்து வெள்ளாட்டுப் பாலில் ஆட்டிக் கொள்ளவும்.

162. ஆட்டியதைக் குகைபிடித்துப் பொடியை யிட்டு
அடவாக குகைமருந்தால் அடைத்து மூட்டி
நாடியதை சட்டிக்குள் வைத்து மூடி
நீயும் நன்றாக மேல்சட்டிக் கவிழ்த்து மூடி
நீட்டியே சீலைசெய்து கெசபுடத்தில் போடு
நெருப்பாறி யெடுத்ததனை தூ ளா யாட்டி
மூட்டுவாய் முளகப்பா மூவா றென்று
முனுக்கியே ஆவின்நெய்யில் குழப்பி டாயே

ஆட்டியதைக் குகை பிடித்துப் பொடியை இட்டு மேற்சொன்ன குகை மருந்தால் அடைத்து மூட்டி சட்டிக்குள் வைத்து மூடி சீலை செய்து 1000 வரட்டியில் புடம் போட்டெடுக்கவும். நெருப்பாறிய பின்னெடுத்துத் தூ ளாயாட்டி ஆவின்நெய் சேர்த்துக் குழப்பிக் கொள்ளவும்.

163. குழப்பியது நாலுகுன்றியிடை பொடிதான் சேர்த்துக்
கொடுத்திடவே முன்மதிலம் கற்கம்கேளு
அழப்பிலே நோயறிந்து நடப்பி லூட்டும்
அப்பனே சிலேற்பனங்கள் தொண்ணூ று றாறுந்
கழப்போலி போல்ப்பறந் தோடுமதிக சித்தி
காட்டுமுன்னே எட்டுவகை மாந்தந் தீரு
தழப்பெரிய சஞ்சீவி யிதற்கு வொப்பில்லை
சொல்லுகிறேன் தானேன்வரத்தைக் கேளே

குழப்பியதுடன் கிலை 520மிகி. பொடியைச் சேர்த்து 3நாள் கொடுக்கவும். நோயின் தன்மையறிந்து மருந்தின் நடப்பறிந்து மருந்-தூட்டினால் பலவகை நோய்கள் (96) பறந்தோடும். 8வகை மாந்தம் தீரும். சஞ்சீவிக்கு ஒப்பில்லை அதுபோல் இந்த மருந்திற்கும் வேறு ஒப்பில்லை என்பதாம்.

164. தாளேஸ்வரம்

கேளப்பா சூதமொன்று தாளகந்தான் ஒன்று
கெடியான கெந்தியொன்று மனோசிலைதான் ரெட்டி
நீளப்பா தாம்பூரபற்பம் ரெட்டி கட்டி
நினவாக கல்வத்தில் நொச்சிச் சாற்றால்
நாளப்பா ரெண்டுதினம் மிரண்டுஇராப்பகல் ஆட்டி
நயமாக குன்றியிடை குளிகைக் கட்டி
சூளப்பா திப்பிலியும் மிளகும் நேராய்
சூரணித்து தேனிலோரு உருண்டை யூட்டே

சூதம்ஒரு பங்கு, தாளகம் ஒரு பங்கு, கெந்தி ஒருபங்கு, மனோசிலை 2 பங்கு, தாம்பூர பற்பம் 2 பங்கு கல்வத்திலிட்டு நொச்சிச் சாற்றால் இரண்டு இரவு, இரண்டு பகல் நேரம் ஆட்டி குன்றியளவாக குளிகை செய்து திப்பிலியும், மிளகும் சம அளவெடுத்துச் சூரணித்துக் கட்டி தேனில் உண்டு வரவும்.

165. ஊட்டவே உன்மாந்தை கழிச்சல் தீரும்
உயர்ந்துவரும் எலும்புருக்கி சுரமாந்தை தீரும்
மெட்டியுமாமே கத்தைச் சொல்வோம்
மேலான பலகறையின் பொடியு முண்
மாட்டியே சுத்திசெய்த மண்டூரம் நேராய்
மைந்தனே ஆனையில் மயனம் போலே
ஆட்டியே சாமமொன்று உலர்த்தி பின்னும்
அப்பனே தூ ளாக்கி வெற்றிலைச் சாறு ஊத்தே

இதை உண்பதால் உன்மாந்தை, கழிச்சல், எலும்புருக்கி, சுரமாந்தை, மேகம் இவை நீங்கும். பலகறைப் பொடியுடன் சுத்தி செய்த மண்டூரம் சேர்த்துப் பொடித்து நேக 3மணி நேரம் அரைத்து உலர்த்திப் பின் தூ ளாக்கி வெற்றிலைச் சாற்றைச் சேர்க்கவும்.

166. ஆத்தியே யாவினைதான் னொரு வாட்டி
உறவுசெய் தூளாக்கிக் குளிறி தூக்கி
ஆத்திடுவாய் கால்கழஞ்சு பசுவின் நெய்யில்
உட்கலந்து கொண்டிடவும் சயநோய் தீரும்
ஆத்திடுவாய் வெண்ணெய்தேன் கசாய மாகும்
உத்தமனே வியாதிகளு மூற்ற மாகும்
ஆற்றுவாய் சாமத்துக் கொருக்கால் தானும்
ஒன்பது பத்தாருமங்கே யொளிந்து போமே

வெற்றிலைச்சாற்றுடன் கலக்கி குன்றியளவாக உருண்டை செய்து 2கிராம் பசு நெய் சேர்த்துச் சாப்பிட்டு வர சயநோய் தீரும். வெண்ணெய், தேன், கசாயங்களுடன் கலந்து சாப்பிட பலவகை வியாதிகளும் நீங்கும். 3 மணி நேரத்திற்கு ஒருமுறை ஒவ்வொரு நோயாகத் தீர்ந்து வரும்.

167. ஒளித்திடவே சீறவர ரசத்தை கேளு
உயிர்பரிக்கும் வாதகுன்மம் மோடு மோடும்
மளித்து விந்து மாட்சிகப்பு ரோக
மெவடசாரங் கெந்தியுடன் காம்பூர பற்பம்

(43ம் என் உள்ள ஏடு இல்லை. 167ல் இருந்து 170வரை பாடல் இல்லை).

ஆதலால் தட்டச்சு செய்யப்படவில்லை.

171.மாரசசேகரம்.

திண்ணவிடு மாரச செகரத்தை செப்புகிறேன்
சிலேற்பனம் குன்மங்கள் போக
உன்னுகிற லோகபற்பம் நாவி சூதம்
உத்தகெந்தி வெங்காரம் திரிகடுகு தானும்
தன்னுகிரி போவுயர்ந்த தாம்பூர பற்பம்
தனியெலம் இலவங்கம் தாளிச பத்திரி
பொன்ஊமத்தம்விரைசங்கு பற்பம் தானும்
புகழ்வில்லை பழச்சாற்றில் சரியாய் கூட்டே

மாராச சேகரத்தைச் செப்புகிறேன். சிலேற்பனங்கள், குன்மங்கள், நீங்குவதற்காக உன்னுகின்ற உலோகபற்பம், நாபி, சூதம், கெந்தி, வெங்காரம், திரிகடுகு, தாமிரபற்பம், ஏலம், இலவங்கம், தாளிச பத்திரி, பொன்ஊ மத்தம்விரை, சங்குபற்பம், பழச்சாற்றில் (எலுமிச்சம்பழம்) அரைத்து வில்லை தட்டிக் கொள்ளவும்.

172.கூட்டடா கஸ்தூரி மஞ்சள் தானும்
கூசாமல் மூன்றுநாள் காய்ப்பால் சாற்றில்
ஆட்டடா குன்றியிடை குளிகைக் கட்டி
அப்பனே தேனிலிட சயம்அஞ்சு போகும்
மூட்டடாஈளைபோம் கிராணி போகும்
உடல்வந்த எலும்புருக்கி குன்மம் போகும்
வாட்டடா செரியாமை அம்மி பித்தம்
மகத்தான குடல்வாதம் மண்டை வாய்வு
காட்டடா அத்தியில் வியாதி யெல்லாம்
காட்டடா தீப்போலே கருதிப் போமே

இதனுடன் கஸ்தூரி மஞ்சளைகாய்ப்பால் சாற்றில் அரைத்து குன்றியளவாகக் குளிகை செய்து தேனில் சாப்பிட்டுவர ஐந்துவகை சயமும் நீங்கும் ஈளை, கிராணி, எலும்புருக்கி, குன்மம், செரியாமை, பித்தம், குடல்வாதம், மண்டைவாயு, எலும்புருக்கி நோய் போன்ற பலவும் இம்மருந்தால் நீங்கும் என்பதாம்.

173. வித்தியா ரசம்.

கருதிவிடும் வித்தியா ரசத்தை தானும்

காட்டுகிறேன் நோய்தீர கருதிப் பாரு

அரியதொரு சூதமொன்று கெந்தி யொன்று

அப்பனே நிமிளையொன்று தார மொன்று

வருகியநல் தாம்பூர பற்பம் மனோசிலையும் சமனாய்

அப்பனே திப்பிலியின் கசாயம் தன்னில்

சுருகியே யோரீதினந்தான் ஆட்டி வாங்கி

சுகமாக கசாயத்தில் பாவனைதான் செய்யே

சூதம் ஒரு பங்கு, கெந்தி ஒரு பங்கு, நிமிளை ஒரு பங்கு, தாரம் ஒரு பங்கு, தாம்பூர பற்பம், தாமிர பற்பம், மனோசிலை இவற்றைத் திப்பிலி கசாயத்தில் ஒரு நாள் முழுமையும் ஆட்டி கஷாயத்தில் கிளறிக் கொள்ளவும்.

174. செய்ததொரு மருந்ததனை பணத்தில் ஒரு பாதி

திரட்டியே தேனிலே செலுத்து பின்பு

செய்திடவே அஞ்சுவகை பீலையும் தீரும்

சீரான கெர்ப்பத்தில் சூலைக்கெல்லாம்

செய்திடுவாய் எள்ளுவெல்லம் கசாயமிட்டு

திரிகடுகு சிறுதேக்கு சமன்தான் ஆட்டி

செய்யடா விராகனிடை காசயத்தில் அவி

செலுத்திடவே பெரும்பாடு தீரும் காணே

இதில் 250மிகி எடுத்துத் தேனில் உண்டுவர ஐந்து வகையான பீலிகைகள் தீரும். கெற்ப சூலைக்கு எள்ளுக் கஷாயமிட்டு சிறுதேக்கு திரிகடுகு சமனாகச் சேர்த்து ஆட்டி 4 கிராம் அளவு கஷாயத்தில் அவிச் சாப்பிட்டுவர பெரும்பாடு தீரும் என்பதாம்.

175.காணப்பா பெரும்பாடு குன்டு குன்டாய்வீழ
கசாயத்தில் மேல்பொடியை கலிறக் கேளு
தோணப்பா வேர்கொம்பு தேவ தாரம்
சுகமான திப்பிலியின் புங்கம் பட்டை
பூணப்பா தூளாக்கி விராகல் தூக்கி
புகட்டடா குளிகையுடன் புகழ்ந்து நீயும்
முணப்பா வலியெடுக்கும் யோனிச் சூலை
உன்டானால் வேப்வெவிரை ஆமணக்கன் பருப்பே

பெரும்பாடு குண்டு குன்டாகிப் போகும். கஷாயத்தில் மேல் பொடியைச் சேர்ப்பதற்கு முறை சொல்வேன். சுக்கு, தேவதாரம், திப்பிலி, புங்கம்பட்டை இவற்றைத் தூளாக்கி 4கி அளவு குளிகையுடன் சேர்த்துச் சாப்பிட்டு வர வலியை உன்டாக்குகின்ற யோனிச்சூலை, வேப்பவிதை ஆமணக்கு இவற்றைச் சேர்க்கவும்.

176. பருப்புடனே சாிகூட்டி நிம்பபழச் சாற்றில்
பதம்மாறக் குளிகையிட்டு யோனியில் பூச
பெருப்பமுள்ள வலிதீரும் யுதிவலி யானால்
பேருபட உள்ளுக்கு கொடுத்து விட்டு
மறிப்புடனே மத்திருந்த வாய்வு வெல்லாம்
மாண்டிடுமே பொன்காரம் கெந்திரசம் மாமே
இருப்புடனே சமனாக வெடுத்துப் போடு
இவைக்கு நேர்வாளம் சமனாய் தானே

வேப்பன் வித்தையும் ஆமணக்கென்னின் வித்தையும் சமஅளவு கூட்டி எலுமிச்சம் பழச்சாற்றில் அரைத்துப் போனியில் பூசிவர யோனி வலி தீரும். வயிற வலித்தால் இம்மருந்தை உள்ளுக்குச் சாப்பிடக் கொடுத்து வர தீரும்.வாயுவெல்லாம் பிரியும்.பொறிகாரம்,கெந்திரசம் இவற்றைச் சமனாக எடுத்து அதற்குச் சமஅளவு நேர்வாளம் சேர்க்கவும்.

177.வாளமதை கரியாக்கி இஞ்சிச் சாற்றில்
மாட்டுவாய் திரம்ஒவிற மயனம் போலே
நீளவே பிரட்டியே குன்றி போலே
நிலவாக உருட்டியே இஞ்சிச் சாற்றில்
மாளவே குன்மங்கள் எல்லா சொல்லி
மைந்தனே கொடுத்திடவே வலிகள் தீரும்
சூளவே பாண்டுகுன்மம் ரெண்டு நீங்க
சூட்டுகிறேன் குடோரிதன்னை சூட்டுறேனே

வேப்பன்வித்தையும் ஆமணக்கின் வித்தையும் சமஅளவு கூட்டி எலுமிச்சம் பழச்சாற்றில் அரைத்து யோனியில் பூசிவர யோனிவலி தீரும். வயிறு வலித்தால் இம்மருந்தை உள்ளுக்குச் சாப்பிடக் கொடுத்துவர தீரும். வாயுவெல்லாம் பிரியும். பொறிகாரம், கெந்திரசம் இவற்றைச் சமனாக எடுத்து அதற்குச் சமஅளவு நேர்வாளம் சேர்க்கவும்.

178. கூட்டுகிறேன் வெங்காரம் நாவி கெந்தி
சுகமான காந்தபற்பம் தாம்பூர பற்பம்
நாட்டுபுகழ் சீரகமும் திரிகடுகு திரிபலை
நல்கடுகு ரோகணியும் சித்திர மூலம்
மாட்டுநீ யிவைச்சாரம் சத்திச் சாரம்
வாயாத பச்சைஉப்பு வாய்வி ளங்கம்
கூட்டுநீ நேர்சமன்ஆக அ ளாய் ஆட்டி
குறையாம மலநேர்வாளம் பாதி யாமே

வெங்காரம், நாபி, கெந்தி, காந்தபற்பம், தாமிரபற்பம், சீரகம், திரிகடுகு, திரிபலை, கடுகுரோகணி, சித்திரமூலம், எவச்சாரம், சத்திச்சாரம், பச்சைஉப்பு, வாய்விளங்கம் இவற்றைச் சமஅளவெடுத்துத் அ ளாக்கி அதே அளவு நேர்வாளம் சேர்த்துக் கொள்ளவும்.

179.பாதியாம் வாளத்தக் கெட்டி வித்து

பாங்காக அளாக்கி யெல்லா மொழிறாய்

நீதியாய் மாதுபழச் சாறு விட்டு

நீட்டியே அஞ்சுதினம் ஆட்டி பின்னே

ஆதியாய் யெழுதினம் கல்வத் திட்டு

அரைத்திடவே குளிகைகட்டி அடவாய் தாளே

நீதியாய் இஞ்சிவெல்லம் வெந்நீர் தன்னில்

நிகழுமடா பலம்யிழகும் சன்னி தீரும்

அதற்குப் பாதியாக எடுத்த நேர்வாளத்தையும் சேர்த்து ஒன்றாக இடித்து மாதுளம்பழச்சாறுவிட்டு5 நாட்கள் அரைத்துக் கொள்க. சிறு சிறு உருண்டைகளாகச் செய்து இஞ்சிச்சாறு,வெல்லம்,வெந்நீர் இவற்றில் தொடர்ந்து உண்டுவர பலத்தைக் குறைக்கும் தன்மையுள்ள சன்னியை நீக்கும்.

180. சுரகுளிகைக்

பாரப்பா சுரம்போகும்மாறல் போகும்

பாங்கான சன்னியோடு தோஷம் போகும்

மாரப்பா நோயறிந்து அனுப்பானம் செய்து

அளவறிந்து ஊட்டிடுவார் அப்பால் கேளு

நேரப்பா சரமாளி கையை சொல்வோம்

நேரான தாம்பூரபற்பம் சூதம் கெந்தி

சேரப்பா மனோசிலை தாளகம் வெங்காரம்

திரிகடுகு திரிபலையும் சீர்ரொன் றாயே

சுரம்போகும்,மாறல் சுரம் போகும். சன்னிதோஷகும் போகும். இவற்றிற்கு நோயறிந்த அனுபானம் கொண்டு அளவறிந்து உட்கொள்ள வேண்டும்.தாமிரபற்பம்,சூதம்,கெந்தி,மனோசிலை,தாளகம்,வெங்காரம், திரிகடுகு,திரிபலை இவற்றை சேகரித்துக் கொள்ளவும்.

ஒன்றான வித்துக்கு நேர்வாளப் பருப்பு

உளவு செய்து கல்வத்தில் காய்ப்பாய்

(பாடல் முடிவு பெறவில்லை.இதே சுவடியிலேயே அடுத்த பாடல் ஆரம்பிக்கப்படுகிறது0.

(பாட்டு முடிவுறவில்லை.அடுத்த நூல் ஆரம்பிக்கப்படுகிறது).

பாடல் முடிவுறவில்லை. அடுத்த நூல் ஆரம்பிக்கப்படுகிறது.

1. கரிமுகன் அடியை வாழ்த்தி
   கமல வாகனனைப் போற்றி
   அரிய மாதவத்தி னாலே
   அகத்திய மாமுனிவர் சொன்ன
   பெரிய மாவியாதி யான
   பக்க கணையின் தோசம் (கணையின்)
   தெரியவே புவியின் மீதில்
   செப்புவேன் சிந்தை வைத்தே

யானைமுகத்தோனாம் விநாயகனைப் போற்றி, தாமரைப் பூவினனாம் திருமாலைப் போற்றி மிகப்பெரிய தவவலிமையால் அகத்திய முனிவன் சொன்ன மாவியாதியாம் கணையின் தோஉஷம் அறிந்து கொள்வதற்காக சொல்வேன்.

2. என்றதோர் கணைகள் தானும்
   இயம்பிய பேரைக் கேளு
   சென்றதோர் வாதம் பித்தம்
   சேரப்பன மென்று முப்பேர்
   மன்றினில் சுரமே அத்தி
   வறசை வாலேந்தி ஏன்தான்
   வென்றி மகோந்திர மகுப்பு
   வெப்புவிஉஷ பாகமுதகணை தானே

கணைகளில் எத்தனைக் கணைகள் உண்டென்பதை கீழ்வரும் பெயர்களைக் கொண்டு உணரலாம். வாதகணை, பித்தகணை, சேர்ப்பன கணை என்று மூன்று கணைகளும், சுரகணை, அத்திகணை, வறட்சிகணை, வாலேந்திரகணை, மகேந்திர கணை, மகுப்பு கணை, வெப்புகணை, விஉஷகணை, பாகமுதகணை எனப் பேராம்

3. தானே வாய்வு நீர்பாலை
மருகா தள்ளு போகமுடன்
மானே குடல்சேர் கணையினே
மருந்தும் கரப்பன் கணையுடனே
ஆனபேர் பதினெட் டுள்ளே
சோத்திய சாத்தி யங்களீ
தென்மொழி யுமையாருக் கீசனீ
செப்பின நூ லிது தாமே

வாய்வுகணை, நீர்ப்பாவைகணை, தள்ளுகணை, குடல்சேர்கணை, கரப்பான்கணை எனக் காரப்பால் 18 வகைகளாம். அவற்றுள் சாத்திய கணைகள் எவை, அசாத்திய கணைகள் எவை என்பதை உமையாளுக்கு ஈசன் சொன்னார் அதனை நான் உங்களுக்குச் சொல்வேன் என்பதாம்.

4. வாத கணையின் குணம்

மீறிடுஞ் சுர மிருமல்
மேலில்நீர் மலமும் சீழும்
கூறிடும் நாரு மீறும்
குதங்களும் விரிந்த புண்ணாய்
வேறநீர் . . . .
வெப்புற கழிச்ச லுண்டாம்
மாறிடுங் குணங்கள் வாத
கணைகுண மென்ன லாமே

சுரமும் இருமலும் அதிகம் உண்டாகும். மேலில் நீர் வடியும். மலமும் நீரும் சீழும். குதம் விரிந்த புண்ணாகும். கழிச்சல் உண்டாகும். இவை வாதகணையின் குணங்களாகும்.

5. பித்த கணையின் குணம் :

பித்த கணையின் குணமதனை
பேசக் கேளீர் யிளையே
மெத்த பொசுப்பு வேண்டாத
மேனி வெளுக்கும் வாய்கசரும்
குத்தி வயறு பொருமி வரும்
குடலைபிரட்டும் வாந்தி செய்யும்
பத்தி வயறு நொந்திருக்கும்
பயந்தே யுடலம் காய்ந்திடுமே

மேனி வெளுக்கும், வாய் கசக்கும், வயிறு குத்தி பொருமும். குடலைப் பிரட்டும், வாந்தியுண்டாகும். வயிறு நோகும். உடல் காந்தி காய்ச்சல் உண்டாகும். இவை பித்த கணையின் குணங்களாம்.

6. நாக்கு கடித்துவாய் புண்ணாய்
நல்ல பிடரி தலைகாயும்
போக்குண் டாகும் வயறிதேக்கும்
பெரிதாய் கழியும் நாவுலரும்
தூங்கும் அரை கண்ணாய்
சுகமாய் நயனஞ் சிவந்திருக்கும்
ஆத்க முடயீர் பித்தகணை
வருத்தஞ்செய்யும் குண மிதுவே

நாக்கு கடித்து வாய் புண்ணாகும். பிடரி பகுதியும் தலையும் காயும். வயிற்றுப் போக்குண்டாகி அதிகமாகக் கழியும். நாவுலரும். அரைகண்ணில் தூங்கும். கண் சிவக்கும். இவை யாவும் பித்த கணையின் குணங்களாம்.

7. இதத்கு_கஷாயம்_

முத்தக் காசு வில்லை இலை

முதியார் கூந்தல் மாதளையும்

ஒத்த துளசி வல்லாரை

உறவே கொடுப்பை மருதந்தோல்

சித்தமுடன் பொன்ன வரை

சிறக்க கூட்டி சீரகமும்

நத்தைச் சூரி வேருடனே

நன்றாய் வகைக்கு ஒருபிடியே

முத்தக்காசு வில்வஇலை, முதியார் கூந்தல் மாதுளை, துளசி, வல்லாரை, கொடுப்பை மதரந்தோல், பொன்னாவரை, சீரகம் நத்தைச் சூரிவேர் இவற்றை வகைக்கு 1.3லிட்டர் எடுத்துக் கொள்ளவும்.

8. பிடியே ஏலம் சீரகமும்

பெருந்த சிங்கி செண்பகமும்

படியே கோட்டம் மதுரமுடனே

பணயி லாமிச் சிருவேலி

கூட்டுவாய் யொறொன் றொருகழஞ்சி

காய்ச்சி யிறக்கி எட்டொன்றாய்

குடிநீ பித்தகணை யெல்லாம்

குடிபோய் கெடியில்விழுந்திடுமே

ஏலம், சீரகம், மிருதார்சிங்கி, செண்பகம், கோட்டம், அதிமதுரம், விலாமிச்சம், இருவேலி இவை வகைக்கு 5கி அளவெடுத்து தண்ணீர் விட்டுக் காய்ச்சி எட்டிலொன்றாக்கி வழங்கிட பித்தகணை நோய்கள் எல்லாம் நீங்கும்.

9. நாவல்பட்டை கூவளைவேர்
நாகும் துளசி வல்லாரை
சிவ்வல் கதளி பூவிரு
சிறக்க முத்தஞ்சேரி யிடையாய்
கவ்வும் நார்ஒரு படியில்
காய்ச்சி எட்டொன்றான பின்பு
தவ்வல் சாதிக்கா யுரைத்து
தானே குடிக்கக் கணை தீரும்.

நாவளைப்பட்டை,கூவிளைவேர், துளசி, வல்லாரை,சிவ்வல், வாழை,பூவிரா, முத்தம் இவற்றைச் சமஎடை எடுத்து 2.6லிட்டர் தண்ணீர் விட்டு எவொன்றாகக் காய்ச்சி சாதிக்காய் உரைத்துக் குடிக்க கணை தீரும்.

10. கொச்சங் காயும் நன்னாரி
கூறிய வாழைப் பூவுடனே
மெச்ச மருதம் பட்டையுடன்
மிகவே ஈர உள்ளியுமாய்
பச்ச முடனே நற்சீரகம்
பகருஞ் சாதிக் காயும்
இச்சம் பெறவே குடிநீராய்
உறவாய் காய்ச்சி வகைகேளே

கொச்சைக்காய், நன்னாரி, வாழைப்பூ, மருதம்பட்டை, ஈரவுள்ளி, நற்சீரகம்,சாதிக்காய் இவற்றை ஒவ்றிரண்டாக இடித்து எட்டு பங்கு தண்ணீர் விட்டு எட்டில் ஒன்றாகச் சுருக்கிக் காய்ச்சிக் கொள்ளவும்.

11. கேளாய் வெந்த மருந்திதனை

கிண்டி சரக்கை எடுத்தரைத்து

நாளாத்சி நாங்கு டிக்க

நடுங்குங் கணைநோய் கடுப்புளதும்

பாரே தீர முன்மையிது

பரிவாய் செய்ய வல்லீரால்

கேளே கணைக ளில்லை யென்று

கீர்த்தி யுரைத்த பெரியோரே

குடிநீர் காய்ச்சிய பின் வெந்தமருந்துகளை எடுத்து அரைத்துத் தண்ணீர் விட்டுக் காய்ச்சிக் குடிக்க கணை நோய், கடுப்பு இவை நீங்கும். முறைப்படி இம்மருந்தினைச் சாப்பிட்டால் கணைகள் இல்லையென்று பெரியோர்கள் சொன்னார்கள்.

12. அத்திஆல் அரசின் மொட்டும்

அதினுடன் மருதம் பட்டை

பத்தியாம் கத்திரிப் பிஞ்சு

பருத்தின் பிஞ்சு மொத்த

நத்தமாம் சூரி வேரும்

நலமுடன் மொத்தக் காசுஞ்

சித்திரமாம் பனம்புல் லோத்த

சிறக்கந் வறுத்து வைப்பே

அத்தி, ஆல், அரசமொக்கு, மருதம்பட்டை, கத்திரிப்பிஞ்சு, பருத்திப்பிஞ்சு, சூரிவேர், முத்தக்காசு, பனம்புல் இவற்றை ஒரே அளவாக எடுத்து இளவறுவலாக வறுத்துக் கொள்ளவும்.

13. வைத்ததோர் மருந்தி னோடே
மரபடி கிராம்பு பத்திரி
கைத்ததோர் விடையஞ் சாதிக்
காயுடனம் ஓமம்
மெத்ததோர் சமனாய் சீரம்
விரவியே வசுத்தத் கொண்டு
பொய்ந்ததோர் கிழிகாய் கட்டி
போட்டுநீ காய்ச்சித் கொள்ளே

மேற்சொல்ல மருந்துகளுடன் கிராம்பு, பத்திரி, அதிவிடையம், சாதிக்காய், ஓமம், அதே அளவு சீரகம் இவற்றை வறுத்தெடுத்துக் கொண்டு கிழிகட்டி போட்டுக் காய்ச்சிக் கொள்ளவும்.

14. பித்தகுணத்கு நெய்

பொன்னிற சிறக் கீரை
புகழும் துளசி மாதளையும்
நன்னிற கவளை முசுமுசுக்கை
நலமாங் கொச்சை வல்லாரை
இன்னேற தாமரை அமுர்தவள்ளி
இனங்க வகைக்கு யொன்டு
வள்ளி ருள்ளி சாறொவிற
வகை சாறுழக்கிரு சீரகமே

பொன்னிறமான சிறகீரை இலைசேர், துளசி, மாதுளை, கவிளை, முசுமுசுக்கை, கொற்வை, வல்லாரை, தாமரைஅமிர்தவள்ளி இவற்றை வகைக்கு சமமாக எடுத்துக் கொண்டு வள்ளிச்சாறு 325மிலி, உள்ளிச் சாறு 325மிலி, சீரகம் 650மிலி, இவற்றைச் சேகரித்துக் கொள்ள வேண்டும்.

15. இருசீ ரெலஞ் சந்தனமும்
இலங்குங் கிராம்பு சாதிக்காய்
வரு மோதகமு மாயத்காய்
மதிரம் கோஷ்ட்டம் வசுவாசி
தருமே கன்னா ரெலமுடன்
சாத்திரபேதி சதகுப்பை
பொருமே நெல்லிப் பருப்புடனே
புகழும்வகை கோர்கழஞ்சி கொளீளே

நற்சீரகம், பெருஞ்சீரகம், ஏலம், சந்தனம், கிராம்பு, சாதிக்-காய், கடுத்காய், மாசிக்காய், அதிமதுரம், கோட்டம், வசுவாசி, சாத்திரபேதி, சதகுப்பை, நெல்லிப்பருப்பு இவை வகைக்கு 5கி அளவு எடுத்துக் கொள்ளவும்.

16. கொளீளே நறுநெய் நாழியதில்
கூட்டுஞ் சாற்றி லரைத்திட்டு
நள்ளெ காய்ச்சி மெழுகுபதம்
நன்றாய் வடித்து சீனியிட்டு
உள்ளே காசிடை கொண்டு
கிலோடும் பித்தகணை யெல்லாம்
பிள்ளா பலநோய் வெதப்பிவிடும்
பேணிச் செய்வீர் பேய்வளையே

1.3லிட்டர் நல்ல நெய்யெடுத்து மேல் சொன்னவற்றுடன் சேர்த்து முறைப்படி சாற்றிலரைத்துக் காய்ச்சி மெழுகுபதம் வரும்போது வடித்து சீனி சேர்த்து 5கி அளவு சாப்பிட்டுவர பித்தபணை, பிள்ளைநோய்கள் பலவும் நீங்கும் என்பதாம்.

17. எரிபித்தகுணையின் குணம் :-

சிமைதாய் முகமுங் வீங்கி
வீறியே யுடல் வெளுக்குங்
கனவயி றெரித்து ளைந்து
கவன போதும் தோஷ்மும்
அமலதாய் மலமும் தள்ளி
அனலது போலே காயும்
மினிமிக குழலி னாளே
எரிபித்த கணைபி தாமே

முகம் வீங்கும். உடல் வெளுக்கும். வயிறு எரிந்து உளையும். மலம் தள்ளி உடல் அனல்போலக் காயும். இவை எல்லாம் எரிபித்த கணையின் குணங்-களாம்.

18. சேர்வை குணையின் குணம் :

சேரப்பன ருனத்திலி நின்ற
சித்தின கணையின் செய்கை
பாரப்பத் னுடே வேர்கை
அயர்ச்சியின் தாக மோகம்
வேரப்பங் கைகால் ஓய்ந்து
விழியின் லொளியுங் கெட்டு
ஒறபன மான சேரப்ப
மான கணை மென்ன லாமே

சித்திரை இச்சேர்வை கணையின் குணங்கள் பின்வருமாறு. வேர்வை உண்டாகும். அயர்ச்சி தாகம், மோகம், கைகால் ஓய்ச்சல், விழியின் ஒளி கெடுதல் இவை இக்கணையின் குணங்களாகும்.

19.எள்ளலாஞ் சிரசில் நொந்து
இடித்திருந் திவளை தன்னில்
கள்ளலாய் வாய்நீர் வற்றி
கரண்டிடும் இருமல் விட்டும்
வள்ளமாம் நரை கக்கும்
வறச்சையாய் வலியுந் தோஷமும்
பின்னலாஞ் சேரப்பன மான
கணை யிதுகட்ச் சாத்தியம்

தலையில் நோக்காடு உண்டாகும். திவளையில் வாய்நீர் வற்றி வறட்டிருமல் உண்டாகும். நரை கக்கும், வறட்சியும் வலியும் தோஷமும். இவை சேர்ப்பன கணையின் குணங்களாகும்.

20. சேரப்பன கணைக்கு கசாயம்:
சாத்திர பேதி சதகுப்பை
தவித்த வாறதை வேர்க்கொம்பு
மாத்திரை யான திரிபலையும்
வாகால் சிங்கி செவ்வியமுடன்
தோத்திர மான மாவிலங்க
தருக்கு மிலந்தைப் பட்டையுமாய்
நேத்திர மான காஞ்சொறி
நிம்பத் தோலும் நிலவேம்மே

சாத்திரபேதி, சதகுப்பை, சுக்கு, திரிபலை மாத்திரை, மிருதார் சிங்கி, செவ்வியம், மாவிலங்கம், இலந்தைப்பட்டை, காஞ்சோறி, எலுமிச்சம்-பழத்தோல், நிலவேம்புவேர் இவற்றை (வகைக்கு 5கி)சேகரித்துக் கொள்ளவும்.

21. சேர்த்துங் கண்டங் கத்திரியும்
    குசைந்த இண்டஇலை மேனியுடன்
  பார்த்து வகைகாங்கிடு கழஞ்சி
    பதங்க தண்ணி லெட்டொன்றாய்
  சேர்த்து காய்ச்சி அண்டதயிலம்
    திறமாய் விட்டுதீ கொடுக்கில்
  பார்த்தே வந்த சேரப்பனை
    பதறி ஓடுங் சுரங்களுமே

கண்டங்கத்திரி, இண்டனிலை, குப்பைமேனி இவை வகைக்கு 5கிங்தம் எடுத்து அடுப்பேற்றி தேவையான அளவு தண்ணீர்விட்டு எட்டிலொன்றாகச் சுருக்கக் காய்ச்சி இறக்கிக் கொள்ளவும். அண்டத்தயிலம் சேர்த்து வழங்கினால் சேர்ப்பனக் கணையும் சுரங்களும் பறந்தோடும்.

22. சுரகுணையின் குணம்:
  சுரகணைக் குணங்கேள் மானே
    தொகுப்புற தேக மாறும்
  கரமோடு காலும் கையும்
    கனத்துநீ குளிர்ந்து காட்டும்
  பரபர வெதும்பும் தேகம்
    பல்கடித் தலமும் சற்றே
  சிரமுடி திடிக்குங் கண்டம்
    சிக்கென இருமும் தானே

தேகத்தின்நிறம் மாறும். சுரத்துடன் கால் கைகள் கனக்கும். பின்னர் உடல் முழுமையும் குளிர்ந்து காட்டும். தேகம் வெதும்பும். பல் கடிக்கும். கண்டதில் வலி ஏற்பட்டு இருமலும் உண்டாகும். இவையாவும் சுரகணையின் குணங்களாகும்.

23. இரத்த_கசாயம்:

ஆடா தொடை தூ தவளை
    அமுத வள்ளி கூவளை வேர்
தேடா திசங்கு நன்னாரி
    சிறுகாஞ் சொறியும் முத்தமுடன்
நாடா திலந்தை சித்தமுட்டி
    நலமாய் இஞ்சி நிலவேரும்
கோடா திவைகள் ஓர்கழஞ்சாய்
    கூட்டுங் குடிநீர் வகை கேளே

ஆடாதோடை, தூதவளை, சர்க்கரைவள்ளி, கூவிளைவேர், இசங்கு, நன்னாரி, சிறுகாஞ்சோறி, முத்தக்காசு, இலந்தை, சிற்றாமுட்டி, இஞ்சி, நிலவேம்பு வேர் இவை வகைக்கு 5கி எடுத்துக் கொள்ளவும்.

24. கேளா திப்பிலி செவ்வியம்
    கிளருந் திப்பிலி மூலமுடன்
நாளாஞ் சிங்கி சிறுதேக்கு
    நல்ல மதுர மிருசீரம்
வாளா யகிலும் கொத்தமல்லி
    வளர்சென் பகமும் வெட்பாலை
தூளாய் மிளகு திரிபலையும்
    துங்கும் நெற்பொரி சரிகூட்டே

திப்பிலி, செவ்வியம், திப்பிலிமூலம், மிருதார்சிங்கி, சிறுதேக்கு, மதுரம் இரண்டு சீரகம், அகில் கொத்தமல்லி, செண்பகம் வெட்பாலை, மிளகு, திரிபலை, நெற்பொரி இவறைறச் சம அளவெடுத்துக் கொள்ளவும்.

25. கூட்டி வகைத்தோர் கழஞ்சிட்டு
குதிசேரு தகவரைப் படி
நாட்டி எட்டொன்றாய் குறுக்கி
நலமாய் நாலுநாள் குடிக்கில்
வாட்ட மறவே சுரகணையு
மற்றும் பலநோய் புள்ளதெல்லாம்
கூட்டில்விழுந்து பயந்தோங்கும்
கருத்தால் நெய்யும் வைத்திடுமே

மேற்சொன்னவற்றை வகைக்கு 5கி அளவு சேர்த்துத் தண்ணீர்விட்டு எட்டில்ஒன்றாய் சுருங்கக் காய்ச்சி கசாயமாக்கி நான்கு நாள் குடித்து வர சுரகணையும் மற்றுள்ள பல நோய்களும் நீங்கும். இதனுடன் நெய்யும் சேர்த்து வழங்க வேண்டும்.

26. இதற்கு_நெய்:
வாழைப்பூ கழுகிய பூவும்
மருவிய தென்னம் பூவுந்
தாழை தாமரையின் பூவுந்
தண்ணீர் மிட்டான் கிழங்குடனே
கூவளை கொடுப்பை வல்லாரை
கொவ்வ யிலையும் பழம்பாசி
மீள வகைக்குதான் ஒன்று
விளங்கச்சாறு உரியாய் கட்டே

கழுவி சுத்தம் செய்த வாழைப்பூவும், தென்னம்பூவும், தாழம்பூவும், தாமரைப்பூவும், தண்ணீர் மீட்டான் கிழங்குடன், கூவிளை, கொடுப்பை, வல்லாரை, கோவையிலை, பழம்பாசி, இவை ஒவ்வொன்றையும் தனியே இடித்து 2.6லிட்டர் சாறெடுத்துக் கொள்ளவும்.

27. கூட்டியே சமனாய் கொண்டு
கோவின்நெய் நாழி தன்னில்
காட்டியே சாதிக் காயும்
கிராம்பு பத்திரி புடேல்
மாட்டியே மாயக் காயும்
வசுவாசி சாத்திர வேதி
வாட்டியே கன்ரஞ் சீர
மதுரமும் கொட பச்சை

இவற்றைச் சமனாக எடுத்துக் கொண்டு 1.3லிட்டர் நெய் சேர்த்து சாதிக்காய், கிராம்பு,பத்திரி, புடோல், மாயக்காய், வசுவாசி, சாத்திரபேதி சீரகம்,அதிமதுரம்,கோடாய்பச்சை இவற்றைச் இண சேகரிக்கவும்.

28. கண்டிவை மருந்தவை எல்லாம்
கழஞ்சிவை சமனாய் கூட்டி
இண்ட வுள்ளி தன்னை
இடித்துச் சாறு தெள்ளில்
நன்றிவை மருந்தை யெல்லாம்
நலமுட னரைத்து காய்ச்சி
குன்றிவ்வாழ் குழலி னாலே
கொண்டில் கணைகள் போமே

இவற்றைச் சமனாக எடுத்துக் கொண்டு 1.3லிட்டர் நெய் சேர்த்து சாதிக்காய்,கிராம்பு,பத்திரி,புடோல்,மாயக்காய்,வசுவாசி, சாத்திரபேதி சீரகம், அதிமதுரம்,கோடாய்பச்சை இவற்றைச் சேகரிக்கவும்.

29. அத்திசுர குணையில் குணம்:-

அத்திசுரத்தில் கணைதனக்கு
அறிய தாக முண்டாகும்
மெத்த வெதும்பும் தேகமெல்லாம்
மெலிந்தே பொசிப்பு வேண்டாது
சுரத்தில் விருந்தளர்ச்சை யுண்டாம்
சன்ன இருமல் பலவீனம்
பற்றி வயறு கிழிந்திருக்கும்
பரிந்தே சிலசை செய்வீரே

அத்திச்சுர கணைக்கு அதிக தாகம் உண்டாகும். வெதும்பும். தேகமெல்லாம் மெலிந்து பொசிப்புண்டாகாது. சுரத்தில் தளர்ச்சை உண்டாகும். இரதார்இருமல், பலவீனம், வயிறு கழிதல், காற்மூய் பிரிதல் போன்ற உண்டாகும்.

30. இதற்கு பிட்டவியல்:

தா தளை கண்டங் கார
சொறியணங் காடா தொடை
சீதளை செங்கு மேனி
சேரவே டிடி யோரொவிய
கா தணை இஞ்சி யுள்ளி
கிராம்புடன் மிளகு மூலந்
தாதளை யரைத்த சுத்தை
சரிசமன் கழஞ்சி கட்டே

பிட்டவியல்:

தா தளை, கண்டங்காரி, சிறியாணங்கை, ஆடாதோடை, சீதளை, குப்பை மேனி, இவை வகைக்கு 5கி வீதம் எடுத்து கதைளை, இஞ்சி, உள்ளி, கிராம்பு, மிளகு, சித்திரமூலம், தாதளை, சுத்தை இவையும் வகைக்கு 5கி வீதம் எடுத்தக் கொள்ளவும்.

31. சுட்டு இடித்துப் பிட்டவியல்

கறாவெந்து பிழிந்து கொண்டு
வடித்திதனை குடிக்கில் மாறும்
அத்தி சுர கணைதான்
தொட்டி நறுநெய் தான்வைத்த
சொல்லு மருந்து வகையேபோம்
இட்டமுடனே பொதிக முனி
இயல்சேர் வாகட முறையிதுவே

இவற்றை இடித்துப் பிட்டவியல் செய்து வேக வைத்துப் பிழிந்து கொண்டு வடித்து குடித்து வரவேண்டும். இதனைக் குடித்து வர சுரகணைகள் நீங்கும். இவை வாழும் பொதிகை முனிவனாம் அகத்தியர் சொன்ன முறை-யாகும்.

32. அத்தி சுர கணைக்கு நெய்

அணிப்பிள்ளை முயல் ரெத்தம்
வைத்ததனை யவித்த சாறு
மணித்ததோ ராட்டின் பாலும்
வல்லாரை கொடுப்பைச் சாறு
துணித்ததோர் முசுறு முட்டை
துலங்கவே யொன்றாய் கூட்டி
கெணித்ததோர் மேனிச் சாறும்
கிருபையால் சேர்த்து வையே

அணில் இரத்தம், முயல் ரத்தம், இவற்றை அவித்தெடுத்த சாறும், ஆட்டுப் பாலும் வல்லாரைச் சாறும், கொடுப்பைச் சாறும், முசுறு முட்டை இவற்றை ஒன்றாகச் சேர்த்து குப்பைமேனிச் சாறும் சேர்த்தெடுத்துக் கொள்ளவும்.

33.வையீயே மதர மெருசீரம்
வால்மிள கேல மிலவங்கம்
மெய்யே திரிகடுகு சதகுப்பை
மேவும் அரத்தை கிராம்புடனே
பொய்யா வகையொன்றொரு கழஞ்சு
பொருந்த மாவின்நெய் நாழி
செய்யே தேன உழக்குவிட்டு
திறமாய் வைத்து காய்ச்சுவதே

அதிமதரம்,இருசீரகம்,வால்மிளகு, ஏலம்,இலவங்கம்,திரிகடுகு, சதகுப்பை, அரத்தை,கிராம்பு இவை வகைக்கு 5கிராம் வீதம் எடுத்து, 1.3லிட்டர் ஆவின் நெய் சேர்த்து 625 மிலி. தேன் சேர்த்துக் காய்ச்சிக்கொள்ளவும்.

34. காய்ச்சு வடித்து கா சிடைகொள்
கான அத்தி சுரகணை போமங்
கச்ச மறவே யுடல்தெளியுங்
கொண்ட யிருமல் ஈளையும்போம்
வாச்ச மருந்தஇது செய்யில்
மற்றும் பிணிகள் வாராது
பூச்சம் பெரிய பொதிக
முனியுரை சேர்வாக யுண்மை யிதே

காய்ச்சியதை வடிகட்டி 5கி அளவு சாப்பிட்டு வர அத்திசுரகணை நீங்கும்.உடல் தெளிவடையும்.இருமல் ஈளை இவை நீங்கும்.இவற்றோடு மட்டுமன்றி இம்மருந்தைப்பதால் வேறு பல நோய்களும் வராமல் தடுக்கலாம்.

35. வறட்டு கணையின் குணம்:

வறட்டு கணையின் குணமதனை

மானே தேனே சொல்லக் கேள்

திரட்டி வளரும் உடம்பதனை

சேதப்படவே தானு லர்த்தும்

கருங்டே நாவு முலந்திருக்க

கசங்கள் வாரில் வெள்ளமிழி தனிலே

பரந்தே யரஞ்சி லாம்பது போல்

பகல்போ லிரவில் தெரியாதே

வறட்டுக் கணையின் குணத்தைச் சொல்லக் கேட்பாயாக. திரட்டி வளரும் உடம்பைச் சேதப்படுத்தி உலர்த்தும். நாக்குச் சுருண்டு உலர்ந்திருக்கும். வெள்ளுழியில் இராஞ்சி, ஆம்பலது போல் இருக்கும். பகல் போல் இரவில் கண் ஒளி முழுமையாகத் தெரியாது.

36. நெய்:

வல்லாரை சாறு நாழி

மருவிய புளியாரைச் சாறு

சொல்லிய துளசிச் சாறும்

சுகமுடன் மூன்றுங் கூட்டி

சொல்லிய ஆவின் நெய்யுங்

சிறக்கவே நாழி கூட்டி

எல்லையாஞ் சீரம் ஏலம்

இசையு மாம்வாங் கன்னார்

1.3லிட்டர் வல்லாரைச்சாறு, 1.3லிட்டர் புளியாரைச்சாறு, 1.3லிட்டர் துளசிச்சாறு இம்மூன்றையும் கூட்டி ஆவின் நெய் 1.3லிட்டர் சேர்த்து சீரகத்தையும், ஏலத்தையும் அதனுடன்சேர்த்துக் கொள்ளவும்.

37.இம்மருந் தொன்று தானும்

இசையவே கழஞ்சி கட்டி

அம்மியிலரைத்துச் சேர்த்து

அடுப்பினில் வெந்தி றக்கி

இம்மிய கழஞ்சு நெய்தான்

இருபொழு மருந்தில் வெய்பு

தம்மிய சுரமுங் காந்தல்

தூரத்து முன்னுரைத்தார் முன்னோர்

இவற்றை வகைக்கு கழஞ்சு சீதம் (5கி) எடுத்து அம்மியில் அரைத்துச் சேர்த்து அடுப்பேற்றி காய்ச்சி வெந்தபின் இறக்கிக்கொள்ளவும். 5கி நெய் வீதம் காலை,மாலை இரண்டுவேளை பருகிவர சுரம்,காந்தல் இவை நீங்கும்.

38.<u>வாலசந்திர தனை வரலாறு</u>:-

தந்தை தாய் தனக் குஷ்டணம்

தளரும் ரோகத் தாலும்

விந்தைசேர் வந்த மாகுவிடை

வந்த நாலா நாளில்

அந்தமாய் குணங்கள் தன்னில்

அவைசென்று குளிரும் போது

சந்தத மிகுந்து வால

பக்ஷியின் குணம்யி தாமே

தாய்தந்தையர்க்கு உஷ்டிணம் உண்டாகியிருக்குமானாலும், தாய்-தந்தையர்க்குள்ள நோய்களாலும் நாளாம் நாளில், இது போன்ற குணங்கள் உண்டானாலும் உடல் குளிர்ச்சி உண்டானாலும் இது பட்சி தோஷத்தின் குணங்களாகும்.

39. வாலபட்சியின் குணம்

மடக்கொடி மயிலே நீதான்
        மாதே மெய்குளிரும் போது
திடபட்ட வால பட்சி
        தோசமே சேரு மாகில்
நடப்பதில் கெர்ப்பந் தங்கி
        நகருவார் காறெரனிறில்
வடம்படு குழலின் மாதே
        வாலெந்திரன் வரும்தப் பாதே

மடக்கொடியாம் மயில் போன்றவளே உடம்பு குளிர்ச்சியுண்டாகும் போது வாலபட்சி தோஷம் சேர்ந்து கொள்ளுமாகில் கெற்பந்தங்கும், அதில் வாலேந்திர கணை உருவாகும் என்பதாம்.

40. ஆறதில் குணங்கள் தன்னில்
        அவள்செவ்று குளிரும் போது
கூடின் வால பட்சி
        தோசமே சேரு மாகில்
வீடின் கெர்ப்பந் தங்கி
        மேவியே பிறக்கு மாகில்
மாமசேர் மொழிநல் மாதே
        வாலேந்திரன் வரும்தப் பாதே

உடலானது முழுமையாகக் குளிர்ச்சியாகும்போது, வாலபட்சி தோஷமும் சேர்ந்து கொள்ளுமானால் கெற்பம் தரிக்கும். அதன் மூலம் பிறக்கும் குழந்தைக்கு வாலேந்திர கணை நோய் தவறாமல் உண்டாகும் என்பதாம்.

41. வாலசந்திர குணையின் குணம்:

மானே வாரா சந்திரன்தானீ
  வந்தால் செய்யும் குணங்களாய்
ஊனே யுருக்கு மத்திசுர
  முன்னே அனல் மிககாய்ந்
தேனே நாவும் வழுவழுக்கும்
  சிறந்த நயனம் சிவப்பும்
பேணுந் தானீவயறு மிககடுத்து
  சலமுஞ் சீயுதான் வருமே

வாலசந்திர கணையின் குணங்கள் பின்வருமாறு. ஊனை உருக்கும் அத்திசுரம் உண்டாகும். உடல் அனல் காயும். நாவில் வழவழப்புண்டாகும். கண் அங்குமிங்கும்ஆடும். வயிறு மிகவும் கடுக்கும். சீழும் சலமும் உண்டாகும்.

42. வந்தே கழியு முகமதைத்து
  மார்பு வற்றிவயறு பெரிதாஞ்
சந்தங் கெட்டு பிறங்கால்கை
  தானே யதைத்து யுடல் மெய்யும்
இந்த குணங்க ளிவைகண்டால்
  இதுவே வால சந்திரன்தானீ
தந்தே குறையை தானீதேர்ந்து
  தமிழர் உரைத்தார் முனிவோரே

வயிறு கழியும், முகம் அதைக்கும். மார்பு வற்றி வயிறு பெரிதாகும். நடைகெடும். புறங்கால் கை அதைத்து வீங்கும். இவை அனைத்தும் வாலை சந்திரத்தின் குணங்கள் என்பதை முனிவர் உரைத்ததை நாம் உரைத்தோம்.

43. வன்னம் புரியும் வரைகேளாய்
வாலெந்தி ரத்தின் வகையறிய
முன்னமே உடல் வெதும்பு
முள்ளெலும் புள்ளே சார்ந்து
மின்னேகேள் நயனந் தன்னில்
மீன்சிலம்பது போல யூறி
கன்னலாய் கருப்புச் சீதங்
குழிந்துடல் வற்றுந் தானே

வாலேந்தி கணையில் உடல் வெதும்பும், முள்ளெலும்பு உள்ளே சார்ந்து, கண்ணிலே மீன் செதில் போல் ஊறி, கடுப்பு, சீதம் இவை உண்டாகும். உடல் குழிந்து உடல் வற்றிடும் என்பதாம்.

44. வற்றுமே தேக மெல்லாம்
வயறது பொருமிக் காயு
முற்றுமே மூலந் தள்ளு
முதுகு தண்டெலும்புங் காயுஞ்
சாற்றுமே பிறங்கால் கைகள்
சூழ்ந்ததால் குளிர்ச்சி யுண்டாம்
நற்றுமே கழிய செய்து
நறுநெய்யுங் குடிக்க நன்றாம்

தேகம் பொருமிக் காயும். மூலம் வெளித்தள்ளும். முதுகந்தண்டும் எலும்புகளும் காயும் புறங்கால்கள் அதைத்து வலியை உண்டாக்கும். உடல் சூழ்ந்துகொண்டு குளிர்ச்சியை உண்டாக்கி கழியச் செய்து நல்ல நெய்யைக் குடிக்கச் செய்யலாம்.

45. சாலவே யுடம்பு நொந்து

தளர்ச்சையாய் வயறு போகுஞ்

சீலமாய் நயனந் தனிலில்

சிலவிரால் சிலாம்பு போலாம்

மாலயாம் நேரந் தனிலில்

மயங்கிக் கண்ணொளியுங் குன்றும்

நீல வேல் விழியாய்

வாலசந்திர கணையி தாமே

உடம்பு நொந்து, தளர்ச்சி அடைந்து, வயிறு கழியும். கண்ணில் விரால், சிலாம்பு போலக் காணப்படும். மாலை நேரங்களில் கண்ணொளி குன்றும். இவை வாலசந்திர கணையின் குறிகுணங்களாகும்.

46. சிரசினில் நீருண்டாகுஞ்

சிறு நயனஞ் சிரண்டில்

கருமிழி தனிலில் பற்றி

கருதுமீன் சிலாம்பு போலாம்

வரிவிழி சூழ்ந்து கண்ணு

மயங்கிடும் பிறையு முண்டாய்

தெரு விழி மானே வால

சந்திர கணையி தாமே

தலையில் நீர்கோர்த்துக் கொள்ளும். கண்களில் கருவிழிகளில் பற்றிக் கொண்டு மீன் சிலாம்புபோல் பொரியும். விழிசூழ்ந்து கண் மயங்கிடும். பிறையுமுண்டாகும். இவை வாலசந்திர கணையின் குறிகுணங்-களாகும்.

47. வீங்கிடும் கைகால் தானும்

விஷமது கூடி நிற்கும்

தாங்கிடு மன்ன தாகந்

தாள்வெறுப் பில்லா தாகுந்

தூங்கிடு கெவுங் கண்ணும்

சுத்தமாய் வெளுத்து கட்டும்

வீங்கியே நிற்குங் கண்டாய்

இதுகுணம் வாலேந்திரன் தானே

கைகால்கள் வீங்கிக் காணும். விஷங்கள் கூடி நிற்கும். அன்ன வேட்கையும், தாகமும் உண்டாகும். கண்கள் தூங்கி வழியும். வெளுத்துக் காணும். மேலும், கண்கள் வீங்கி நிற்கும். இவை வாலேந்திர கணையின் குணங்களாகும்.

48. கண்ணது வெளுத்து தாள்கடை

கண்ணில் வலியும் பற்றி

ஊண்மை போல்உடல் சுருக்கும்

மகோதர கணையுங் கூடி

கண்ணினில் மயக்க முண்டாம்

கலங்கி நீர் ஓடி விழுஞ்

சொன்னதோர் பீரிஷ் பொதிந்து

சுருதியாய் கூடுங் கண்டிரே

கண்கள் வெளுத்து, கடைக்கண்ணில் வலியுண்டாகும். உடல் சுருங்கும். மகோதரக் கணையும் கூடிக்கொள்ளும். கண்ணில் மயக்கமுண்டாகும். கண் கலங்கி நீர்விழும். சுருதியும் கூடும். என்பதாம்.

49. கண்டபின் மணியிற் றானே
மறைத்தது வட்டங் கொண்டு
கண்டதோர் வெள்ளைக் கீழே
கருத்த சுக்கிரனே தோன்றி
யென்றபின் கண்டால் பின்னே
இதுபிழை கருமை யுண்டும்
வென்றிசேர் இருபத் தொன்று
விளம்பியே நாற்பத் தொன்று
பண்டதோர் தார தொண்ணூற்
ஐந்ததான் கடந்தால் திட்டம்

கடைமணியில் வட்டம் கொண்டு வெள்ளைக்குக் கீழே கருத்த சுக்கிரன் தோன்றி பின்னர் பிழையாகக் கருமை உண்டாகும். பின்னர் இருபத்-தொன்றும், நாற்பத்தொன்றும், தொண்ணூற்றாறைத்கடந்து நிற்கும் என்பது

50. வாலாந்திர கணையி னாலே
வருவது குணத்தைக் கேளீர்
சீலமாய் இளைக்கே மாகும்
சீறியே பீச்சுங் காயும்
மேலெல்லாம் விசநீர் கோர்த்து
வெளுத்து நீருடம்பு வற்றி
காலத்தில் பிறந்தான் வீங்கி
கைகெண்டையும் வற்று மானால்
ஏலவே விட்டு போவீர்
இதுகுணம் வாரா தென்றே

வாலேந்திர கணையின் குணங்கள் பின்வருமாறு. சீலமாய் இளைக்க-மாகும். மலம் சீறி நிற்கும், பீச்சும், பின் சரியாகும். உடம்பில் விசநீர் கோர்த்துக் கொள்ளும். உடல் வெளுக்கும், உடம்பு வற்றும், புறம் வீங்கும். கையும், காலும் வற்றும். இவை வாலேந்திர கணையின் குணங்களாகும்.

51.வாலசந்திர கணையின் குணந்தன்னை

சால மீதினில் சாற்றிறேன் கேள்நீ

கோலவே வினிதாய் தந்தை சரசத்தலை

பாலா தங்களுக்கு நோயது சாருமே

வாலசந்திர கணையின் குணங்களுள் மிக முக்கியமான குணம் தந்தைக்கு இக்கணை இருக்குமானால் பிள்ளைக்கும் இக்கணை உண்டாகும் என்பதாம்.

52. சாரு மீளையில் வேருவை கொண்டு

தானிரும் நாசியில் நித்த முன்றிடும்

கூழுங் கண்கள் குழைந்து கசிந்திடும்

சீருடன் கடை கண்கள் சிதைக்குமே

ஈளை உண்டாகும் வியர்வை மிகும்.நாசியில் தொடர்ந்து நீர் வழிந்திடும்.கண்கள் குழைந்து, வாய் கசக்கும். கடைக்கண்கள் சிதைந்து துன்பந்தரும்.

53. சிதைக்கும் கண்களில் சுக்கிரன் வந்திடும்

தைங்குங் கைகால் யதிசாரம் பற்றியே

யுதைக்குஞ் சீதமும் ரெத்தமும்வீழ்ந்துதான்

குதைக்குங் கீழ்மூல கூவ்யுதான் தள்ளுமே

சிதைந்த கண்களில் சுக்கிரன் வந்திடும்.கைகால் வீங்கும். அதிசார நோய் உண்டாகி, சீதமும் இரத்தமும் வீழும். மூலம் வெளித்தள்ளும். இவை வாலசந்திர கணையின் குணங்களாகும்.

54. தண்ணிரு லன்னந் தன்னை வெறுத்திடுந்

தாக மாகியே தண்ணீரை வாங்கிடு

முள்ள மெத்த முருகி மெலிந்திடு

மொழிவான் கண மாலை மயங்கிடும்

மெள்ளவே கண்ணில் வந்திடுஞ் சுக்கிரன்

மீறியே பழுத்தே மெய்வெ டித்தது

கள்ளமல்ல இதுவால சந்திர

கணைய தாகும் பாரிகாரஞ் சொல்லுவேன்

உணவின்மீது வெறுப்புத் தோன்றும். மிகு தாகம் உண்டாகி அதிக நீரைப் பருகச் செய்யும்.உடல் உருகி எமலிவடையும்.மாலை நேரங்களில் கண் ஒளி மங்கும்.கண்ணில் சுக்கிரன் உண்டாகும்.உடம்பில் ஆங்காங்கே வெடிப்புண்டாகும்.அதற்கான பரிகார முறையைச் சொல்வேன்.

55.சொல்லுவேன் ஒன்றுரண்டு மூன்றஞ்சினில்

சுருதியாகவே தீர மருந்துகேள்

அல்ல திரு மாலுக்கு பூசையும்

ஆதித்தான் நமஸ்கா ரங்கள் ஓமங்கள்

தில்லை வாழுஞ் சிதம்பரச் சாரஞ்

சிந்தை கும்ப கழியு செலிப்புடன்

வல்லமை செய்யில் கொல்லா திசபாலா

வளரும் ஆயித்து வாறனைஇய யதுமே

ஒன்று, இரண்டு, மூன்று, ஐந்தினில் தீர மருந்திவைச்சொல்வேன். திருமாலுக்கு பூஜையும், ஆதித்தன் நமஸ்காரங்கள், ஓமங்கள், தில்லை வாழும் சிதம்பரச் சாரமும் வல்லமையுடன் செய்தால் வளரும். யாவையும் குறையுமென்பதாகும்.

56.மகேந்திர கணையின் குணம்:-

மகேந்திர கணையின் செய்கை

மாலைகண் போலே தோன்றும்

அந்தமாகத் தானே மகா

சீதங் கழியும் பின்னே

வயந்தா மாகக் கண்ணில்

விரிவிழு வறகு மேனி

சயாந்திடும் பயனம் பாளாம்

சடுதியில் கழிப்பிச் செய்யே

மகேந்திர கணையின் குணங்கள் பின்வருமாறு. மாலையில், மாலைக் கண்போலத்தோன்றும். சீதம் கழியும். கண்ணில் வரிவிழும். மேனி வறளும். மயனம்போரா சயத்திடும். உடனே கழிப்பிச் செயல் உண்டாகும்.

57.மாதே கேளாய் மகேந்திரத்தில்

வந்திடுங் குணங்களி தன்னை

சீதமே கழியும் பின்னே

சேர்ந்துடல் வெதும்பிக் காயும்

நாதமாய் வெளுத்து மேனி

நயனத்தில் வரியும் விழும்

சாதமாய் நயனம் பாழாஞ்

சடுதியில் கழிப்பிச் செய்யே

மகேந்திர கணையின் குறிகுணங்கள் பின்வருமாறு. சீதக்கழிச்சல் உண்டாகும். உடல் வெதும்பும். உடல் வெளுக்கும். கண்களில் வரிகள் விழும். கண்கள் பாழாகும். இதற்கு உடனடியாக நிவர்த்திச் செய்யவேண்டும்.

58. வாலேந்திர கணைக்கு கசாயம்:-

வாழைப்பூ அல்லி தானும்

வல்லாரை மொசு மொசுக்கை

நீழக்காய் அவரையி லல்லி

கீழ்காய் நெல்லி கொச்சங்காயும்

சூழக்காய் கொடுப்பை பிழம்பாசி

சேரனும் நல்ல பசலையோடு

வேளைக்காய் முதக மிரண்டுபடி

விட்டுநீ வெந்து கொள்ளே

வாழைப்பூ அல்லி, வல்லாரை, மொசுமொசுக்கை, நீலக்காய், அவரையின் மலர், கீழ்க்காய் நெல்லி, கொச்சுக்காய், சூழக்காய், கொடுப்பை, பழம்பாசி, பசலை, வேளைக்காய் இவற்றை ஒன்றிரண்டாக இடித்து 2.6லிட்டர் தண்ணீர் விட்டு எட்டில் ஒன்றாகச் சுருங்கக் காய்ச்சி இறக்கவும்.

59.கொள்ளுநீ யாவின் வெண்ணெய்
பாக்கள வதிலே யிட்டு
மெள்ளவே யஞ்சி நாள்தான்
இருவடித் தறிந்து விடில்
விள்ளுமே வால சந்திரன்
மருவிய வெதுப்பு மாறி
நள்ளு மெமமேலுஞ் சொல்லுவேன்
நறுநெய்யும் குடிக்க மாறும்

பசுவெண்ணெயைப் பாக்களவு இதனுள் சேர்த்து, வழங்கலாம். இல்லது இஞ்சிச்சாற்றிலும் வழங்கலாம். அவ்வாறு வழங்குவதால் வாலசந்திர கணையின் வெதுப்பு குறைந்துவிடும். நெய் பருகுவது சிறந்ததாகும்.

60. வெள்ள கீழ்காய் நெல்லியுடன்
விஷ்ணு மூலி பூவடனே
விள்ளுங் குடங்கல் வகைமூன்றும்
விரைவாய் புன்னைக் காயளவு
அள்ளார் குழலா யரைத்துருட்டி
ஆவின்பாலில்தான் கலக்கி
பிள்ளைகளு மருந்தில் வறட்சை வெப்பு
வாலேந்திரம் போம்பேய் வளைமே

வெள்ளை கீழ்க்காய் நெல்லி, விஷ்ணு மூலி பூ, குடங்கள் ஆகிய மூன்றையும் அரைத்துப் புன்னைக்காயளவு உருட்டி ஆவின்பாலில் கலக்கிக் குழந்தைகட்கு வழங்க வறட்சி, வெப்பம் நீங்கும். வாலேந்திர கணையும் நீங்கும்.

61. வாலேந்திர தனைக்கு கண்ணில் புற்றுக்கு மருந்து

உதிர மடக்கி இலை பறித்து
உடனே சிறவர் நயனத்தில்
சிதமாய் எழுத பற்றடர்ந்து
திரு வாலேந்திர தோச
மிகுவே யுண்மை யென்று முன்னோ
ருரைத்தார்வட நூலிவை கண்டு
மதியாச் செய்ய வல்லீரால்
வாலேந்தி ரங்கள் வாராதே

உதிரமடக்கி இலையைப் பறித்து குழந்தைகளின் கண்களின் மேல் வைத்துக் கட்ட வாலேந்திர தோஷம் நீங்குமென்பதாம். இதன் உண்மையை முன்னோர் உரைத்திருந்த வடமொழி நூலினைக் கண்டு சொன்னோம். இதனை முறைப்படி அறிந்து பயன்படுத்தினால் வாலேந்திர நோய்கள் வாராது என்பதாம்.

62. வாலேந்திர தனைக்கு நெய்

சிரச்சிற்றாம் பூலாத்தி வேரிவட
தோலியுஞ் சிறந்திர வுள்ளியுஞ்
சேரக் கூட்டி யோபறவே
யரைத்தருட்டி ஆவின் நெய்யில்
இயல்வான நெய்கோட்டான் பழம்
நரையுஞ் சமனாய் பார்புகழும்
கற்கமதை யதினில் சேர்த்து
பண்புடனேமெழுகு பதம்வடித்து வாங்கே

பூலாத்திவேர், வேர்த்தோல், ஈருள்ளி இவற்றைச்சேர்த்து ஒப்புரவாக நேத அரைத்து உருட்டி ஆவின் நெய்யில் குழப்பு, நெய்க்-கொட்டான் பழச்சாறும் நரையும் சமனாகச் சேர்த்து அடுப்பேற்றி மெழுகு பதமாகும்வரை காய்ச்சி வடித்து இறக்கிக் கொள்ளவும்.

..119

63.வாங்கிடுவாய் புளியுப்பு மிக தவிர்த்து

வாரமோர் காசிடைதான் அந்தி சந்தி

பாங்குடனே ஏழரைநாள் கொள்வா யானால்

பணிபு கெட்டும் கடுப்புனோடு சீரெத்த மாவும்

ஓங்கியதோர் வீக்கமான வாலசந்திரன் தீரும்

ஓயாத அத்திசுரம் ஒளிந்து போகும்

பூங்குழலே முனியுரைத்தார் சுலோகம் பார்த்து

பெருந்தவே செப்பினார் திண்ணந் தானே

வாரம் ஒருநாள் காலை,மாலை இரண்டு வேளை வேளைக்கு 5கி அளவு ஏழரை நாட்கள் உட்கொள்ளவும்.இதனால் வயிற்றுக் கடுப்பும், சீதரத்தமும் மாயும்.சிரம் தருகிற வாலசந்திர கணை நீங்கும். நீங்காத அத்திசுரம் ஒழிந்துபோகும். இம்மருந்துண்ணும் காலத்தில் புளிப்பை மிகத் தவிர்க்கவும்.

64.<u>வாலேந்திரம் கன்னில் பற்றுக்கு கன்னில் எழுதனு</u>

தொட்டால் வாடி நிலப்பனையும்

துய்ய வறுகு சிறுபூளை

மட்டார் சுட்டித்த கரளி

வளகுங் கொடுப்பை கரிசாலை

யுட்டாம் பனைப்புல் சிருதேவி

உகந்த சீதாஞ் செங்கிளநீர்

கட்டார் மூலிவை பத்துங்

கசக்கி யூட்டுந் துணியதிலே

தொட்டால்வாடி, நிலப்பனை,அறுகு, சிறுபீளை, கரளி, கொடுப்பை,கரிசாலை, பனைப்புல்,சிறுதேவி, சீதாசெங்கிளநீர், ஆகிய பத்து மூலிகைகளையும் கசக்சி துணியில் நனைத்தெடுத்துக்கொள்ளவும்.

65. ஊட்டுந் துணியி லந்தமுடன்

உகந்த முசலின் ரெத்தமுடனே

காட்டில் மையைக் கண்ணிடக்

குழந்தை கண்ணீர் பற்றறுமே

துணியில் ஊற்றிய சாற்றுடன் முயல் இரத்தம் தடவி துணியை எரித்துக் கரியாக்கி குழந்தையின் கண்ணிற்கு மையிட கண்ணில் ஏற்படும் வாலேந்திர நோய் குணமாகும்.

66. வேறுமுறை:

செம்பு நெரிஞ்சி சித்திரப்பால் கீழ்காய் மீண்டான்

சீதை யெழுத்தாணி கைய்யான் விஷ்ணுமூலி

சம்பளங் குக்குட முட்டை பூலந்

துத்தஞ் சீனக்காரந் துருசு துரோணி

யம்பு விலாங்குத் தோலிகளில் சாற்றாட்டி

யதனை வெள்ளைத் துணியூட்டி நிழலுலர்த்தி

நம்பு திரிதிரித்து நெய்யில் நனை மைபற்றி

நயனமிட வாலேந்திரம் பறீமப் போமே

செய்பு நெருஞ்சில், சித்திரப்பாவை, கீழ்க்காய் நெல்லி, தண்ணீர்மீட்டான், சீதாசெங்கழுநீர், மையாந்தகரை, விஷ்ணுமூலி , கோழிமுட்டை, துத்தம், சீன்க்காரம், துருசு, துரோணி இவற்றை விலாங்குமீன் தோல் சாற்றில் ஆட்டி வெள்ளைத் துணியில் ஊட்டி திரிதிரித்து நிழலில் உலர்த்தி எரித்துக் கரியாக்கி கரியை மையாக்கிக் கண்ணிடவும்.

67. வாலேந்திர கணைக்கு பூச்சுச_மருந்து

ஆனை கன்று வொருபிடி

அறிய விரோதி இளம்பிஞ்சு

கான குதிரை கடுகடுப்பு

கையிற் கனியு மிகக்கூட்டித்

தாயைக் கொன்றான் சாற்றிலரைத்

தண்ணீர்த் தடகததகத வருந்தில்

மானைப் போன்ற விழிமடவீர்

வருவுந் தமிழுந் திறந்திடுமே

ஆனைக்கன்று ஒரு பிடி, விரோதி இளம்பிஞ்சு, கானக்குதிரை, நெல்லிக்கனி இவற்றைக் கூட்டி வாழைச்சாற்றில் அரைத்து தண்ணீர் கலந்து பருகிவர வாலேந்திர கணை நீங்கும்.

68. கடைகண்ணில் கண்ணீர் பாயும்

கருதிடுங் தண்ணீர் தாகம்

விண்டதோர் குண மில்லாவிடால்

விரும்பியே மருந்தும் செய்யே

துண்டிய வால சந்திரன் கணை

குண மிதுவே யென்ன

மண்டியே வியாதி தீர

வளம்பாங் கண்டு கொள்ளே

கடைகண்ணில் கண்ணீர் பாயும். நீர்த்தாகமெடுக்கும். இக்குணங்களை அறிந்து வாலேந்திர கணைக்கேற்ப மருந்தளித்து நோய் போக்கும் தன்மைகளை உணர்ந்து கொள்ளலாம்.

69. மயேந்திர கணைக்கு நெய்:

பிள்ளைப் பிணியின் கணை தனக்குப்

பிரித்து நெய்யின் வகை கேளாய்

வள்ளலே மருதம் பட்டை

மற்றுங் கூவளை நன்னாரி

கள்ளார் கருவேலம் பட்டை

கட்டிய சித்தா முட்டியின்

இவருள்ள படியே கொச்சங்கா

யேவகைக்கு பல மொவ்றே

பிள்ளைப் பிணியின் ஒன்றான மகேந்திர கணைக்கான நெய்வகைகளைச் சொல்வேன். மருதம்பட்டை, கூவிளை நன்னாரி, கள்ளாரி, கருவேலம் பட்டை, சிற்றாமுட்டி, கொச்சக்காய் இவற்றை வகைக்கு 35கி வீத- மெடுத்துக் கொள்ளவும்.

70. ஒக்க இடித்து மருந்து தன்னை

உடனே குறுணி சலத்தி விட்டு

வற்றக் காய்ச்சி எட்டொன்றாய்

அரித்தே வடித்து மேல்மருந்து

தக்க துளசி கீழ்காய்நெல்லி

தண்ணீர் மிட்டான் கொவ்வை

புக்கக் கொடுப்பை வல்லாரை

புங்கம் விரிசு பழம்பாசி

இவற்றையெல்லாம் சேர்த்திடித்து 2.6மிலி தண்ணீர்விட்டு எட்டில் ஒன்றாக வற்றக்காய்ச்சி இறக்கி வடித்துக் கொள்ளவும். துளசி கீழ்க்காய் நெல்லி தண்ணீர்விட்டான் கிழங்கு, கோவை, கொடுப்பை, வல்லாரை, பங்கம்பாளை பழம்பாசி

71. பச்சை மருந்து மொரொன்று

பரிவாய் சாறு தானுழத்து

மெச்ச கசாயங் கூடவிட்டு

மேவுங் கற்கந் திரிசாதி

வச்சந் துங்கனி னார்

வாகை சேரவே திப்பிலியு

மிச்ச முடனி சீரக

மிகவே கழஞ்சொன்றிடை கூட்டே

திருநீற்றுப் பச்சை இவற்றின் சாறு வகைக்கு 325மி.லிட்டர் சேர்த்துக் கசாயமும் கூடவிட்டு திரிசாதி, துங்கனினார், திப்பிலி, சீரகம், இவற்றை அரைத்துக் கற்கமாக்கி மேற்சொன்ன மருந்துடன் கலந்து கொள்ளவும்.

72. கூட்டியே அரைத்து மெய்யுரியிற்

கூராய் வெந்து மெழுகுபத

மூட்டும் படியே காசிடைகொள்

ளுடனே தீருந் திரிகணைக

ளீட்டுக் கடுப்பு பலநோய்க

ளியலாம் சாரிநோய் கணையும்

நாட்ட முடனே நல்முனிவர்

நயந்தே யுரைத்தார் நாரியரே

இவற்றையெல்லாம் கூட்டி அரைத்து அடுப்பேற்றிக் காய்ச்சி மெழுகுபதமாகும்போது இறக்கிக் கொள்ளவும். இதனை 5கி அளவு உட்கொண்டு வர திரிகணைகள், கடுப்பு பேன்ற பல நோய்கள் நீங்கும் என்பது முன்னோர் சொன்னதாகும்.

73. கண்ணில் பிறப்படும் சுக்கிரனுக்கும் கண்ணில் ஒழிக்க நறு நெய்:-

திடமான நெய்யொன்று கண்ணிலந்த

செப்புகிறேன் கத்திரியுடன் பருத்தி பிஞ்சும்

மடவான நத்தைச்சிப்பி பூச்சி நீரும்

ஆட்டினுட செவிரெத்தம் பூலா வேரும்

கடவான திரிபலையுஞ் சீரகங்க ளிரண்டுங்

கடைமதிர மவினுடனே சமனாய் கூட்டி

வடமான மைபோவில யாட்டி வாங்கி

வான பசுவின் நெய்தனிற் கூட்டிக் காய்ச்சே

கண்ணிற்கான நெய்யினைச் சொல்வேன். கத்திரி, பருத்திப் பிஞ்சு, நத்தைச்சிப்பி, பூச்சிநீர், ஆட்டுசெவி இரத்தம், பூலாவேர், திரிபலை, நற்சீரகம், பெருஞ்சீரகம், அதிமதுரம் இவற்றைச் சம அளவெடுத்து மை போல நேகாக ஆட்டி பசு நெய் சேர்த்துக் காய்ச்சி இறக்கிக் கொள்ளவும்.

74. காய்ச்சியே சீரகத்தை பொடிய தாக்கி

கால்கழஞ்சு கிளியாகக் கட்டி கொண்டு

பூச்சியதோர் நெய்வைத்து கண்ணில் வீக்க

புடைத்தெழுந்த சுக்கிரன்தான் மட்டுக் காகும்

வாச்சுதே வேப்பெண்ணை யாழாக் குள்ளே

அரைத்திடுவாய் புளிங்காய் காயளவு மேனி

வாச்சுதே மெழுகுபதங் காசிடைதான் வாங்கி

வாலருக்குக் கொடுத்துவிட யிழைப்புப் போமே

காய்ச்சி எடுத்தபின் சீரகத்தைப் பொடித்துத் தூவி 2கி அளவு கிளியாகக் கூட்டி நெய் சேர்த்துக் கண்ணில் வைத்துக் கட்டபுடைத்தெழுந்த சுக்கிரன் நீங்கும். புளிங்காய் காயளவு அரைத்த மருந்தை எடுத்து நெய்சேர்த்துக் காய்ச்சி மெழுகு பதமாகும்போது இறக்கி வழங்கிட இழைப்பு நீங்கிடும்.

75. மகேந்திர கணையின் குணம்

மகேந்திர கணையின் செய்கை

வகுத்துக் கேளாய் வஞ்சியரே

சகோதரம் வாலேந்தி ரத்தின்

பின்னுடனே கூடி நின்று

யகாரமா யுடம்பு வற்றி

ஆனதோர் வயறு தள்ளி

மிகாரமாய் கண்மயங்கி

விழியில் நீர்பாயு மென்றே

வாலேந்திர கணைக்குச் சகோதரன் போன்றது மகேந்திர கணையும் உடம்பு மிகவும் வற்றும். வயிறு தள்ளி கண் மயங்கி கண்ணில் நீர்க்கொட்டும். இவை மகேந்திர கணையின் குணங்களாம்.

76. பாயுமே கண்ணீ றாண்டி

பகர்ந்திடும் பிராலம் பற்ற

தெய்யுமே பிரால் பொதிந்து

சேர கருவிழி கீழாக

மாயமாய் பிறை போலேதான்

வந்திடும் வள்ளை சுக்கிரன்

நெயமாய் கறுத்த சுக்கிரன்

நேரிடில் மரணந் தானே

கண்ணில் தொடர்ந்து நீர் வடிந்து கொண்டே இருக்கும். உடம்பில் செதில்கள் போல் தோன்றும். பிரால் பொதிந்து கருவிழிக்குக் கீழே பிறைபோல் காணப்படும். இது வெள்ளைச் சுக்கிரன். இதனுடன் கறுப்பு சுக்கிரனும் நேரும். நேர்ந்தால் மரணம் தான்.

77. கணை பதினெட்டுக்கு நெய்

காரண மாய்முன் னோர்கள்
    கட்டி வைத்த சாஸ்திரத்தை
தாரணியிலே யிசம்புத் தன்மைகேள்
    சுரமுடன் வல்லாரை யில்லை
வளர துளதியால் விளிறு
    சொல்லலாம் பழம்பாசி
சுரை யிலையும் நல்ல
    கொவ்வை விரிசிறுட யிலையும்

கணை பதினெட்டிற்கும் நெய் சொல்லப்படுகின்றது. காரண காரியங்களை அறிந்து கட்டி காத்தவை நம் சாத்திரங்கள், அதிசாரம், வல்லாரை இவற்றை வில்லை செய்து துளிச்சாறு, பழம்பாசி, சுரைஇலை, கொவ்வை இலை, அரசனிலை...(தொடர்ச்சி இல்லை)....

78. (10ம் எண் உள்ள ஏடு இல்லை)

பாகமாய் நெய் வடித்து
    பனுபுடன் கணே சனைநீ
மோகமாய் பூசித்துமுன் பணிந்து
மாகவே அந்திநேரம் விடியற்கால
    மிருபொழுது சிந்தையாய் கொண்டு
வாத்திடும் நோயத்தமாய் பற்றிய
    தோர்கணைதான் பதினெட்டுந்தான் தீரும்
அத்திசுர மிளைப்பும் அகன்றுபோம்
    பித்தமுடனே பாலகற்கு வரும்ரோகம்
பறந்து மோமென்று தமிழ்
    கோலமுனி யுரைத்தார் கூறு

பக்குவமாய் நெய்யை பதத்திலே இறக்கி கணேசனை பூஜை செய்து இரண்டுவேளை உண்டு வந்தால் (விடியற்காலை, அந்திநேரம்) கணைகளின் வகையான 18ம் நீங்கும். அத்திசுரம் இளைப்பு, பித்தம்நீங்கும். இவை மட்டுமின்றி பாலகற்கு உண்டாகும் அனேக நோய்களும் இதனால் நீங்கும் என்பது கோலமுனிவனாம் அகத்தியர் உரைத்ததாகும்.

(77ம் என் பாடலுக்கு பிறகு ஏடு இல்லை.)

91ம் என் பாடலில் இருந்துதான் தொடங்குகிறது.

79. வெளுப்பு கணையின் குணம்.

வெளுப்பு கணைதானி மெய்கலந்தால்
வெளுத்தே முகவு மிகவீங்குங்
கழுத்தந் தேய்ந்து கண்வெளுத்து
கருவி தளர்ந்தே மயக்கமுண்டாம்
பழுத்த பழம்போல் மெய்வெளுத்து
பச்சை நரம்பு மிகவெடுத்து
நளிரு முடலு மிகவுலர்ந்து
நயந்தே யவிலஞ் சொல்லாதே

உடம்பு வெளுத்து, முகம் மிகவும் நீங்கும். கழுத்துத் தேய்ந்து கண் வெளுக்கும். உடல் தளர்ந்து மயக்கமுண்டாகும். உடம்பு வெளுப்பது பழுத்த பழம்போல் தோன்றும். உடம்பில் ஓடுகின்ற பச்சை நரம்புகள் வெளியே தெரியும். உடல் குளிரும். பின் உலரும்.

80. இதற்கு நெய்.

நாயுருவி சிறுக்கீரை பொன்னாங்காணி
நற்சீர மொமமோடு மதரமெலம்
நோயகலு மாயக்காய் கெருட பச்சை
நன்மையதா மீரவுளி கிராம்பு மஞ்சளாயு
மிவையோ றொவ்று கழஞ்சுவீதம்
அடவாக யுரியநறு நெய்யிற் காய்ச்சி
நலமுடனே காகளவு உள்ளே கொள்ளில்
நில்லாத கணை நோயும் பறந்து போமே

நாயுருவி, சிறுகீரை, பொன்னாங்காணி, நற்சீரகம், ஓமம், அதிமதுரம், ஏலம், மாசிக்காய், கெருடப்பச்சை, ஈருள்ளி, கிராம்பு, மஞ்சள் இவை வகைக்கு 5கி வீதம் எடுத்து நெய்சேர்த்துக் காய்ச்சி 5மிலி அளவு உள்கொண்டு வந்தால் வெளுப்புக்கணை நோயானது நீங்கும்.

81.வெய்பு கணையின் குணங்கேளாய்
மிகவே காயு முடலததாள்
செப்பார் முலையிற் நாவறண்டு
தினம் தண்ணீர்தாள் குடிக்கும்
போய்பா வீக்க மடிகாட்டி
அன்னம் மறுக்கு முடவுருகு
மொய்பாய் கழிச்சல் பலவிதமா
அலையு மூலத்தடி . . . . .

உடல் காயும், நாவறண்டு போகும்.தாகம் மிகுதியாகி அடிக்கடி தண்ணீர் குடிக்கத்தோன்றும். உடம்பு வீங்கும்.சாப்பாட்டைத் தள்ளும். உடல் உருகி மெலிந்துபோகும். பலவிதமான கழிச்சலை உண்டாக்கும். இவை வெய்பு கணையின் குணங்களாகும்.

82.வடனா விற் பார்த்து மெற்றகணைய்
பூடு மரிய தகரை யிலையின்
பாக வரிசையுடன் பொன்னாவெரையும்
புகழு மிலை தாமரையுஞ்
சொன்னார் கீழகாய் நெல்லி
சுகமாக நின்னை யமாய்
நெல்லிக்காய் தான்றிக்காய் நேசமுடனே
சமனாய் தள்ளி பிழிந்துதனை சாறுக்
கொண்டு வல்லிமேரே நெய்க்குச் சமனாக
நேசமுடனே கலந்து வைக்கும் படியே வகை
கேளாய் மிக்க நல்ல ஏலம் திரிபலையும்
இலவங்கம், கொத்தமல்லி, கோலமிளகு, வீர
கோட்டம்,நன்னாரி சாலவே சீவசன்றலை

தகரை இலை,பொன்னாவரைஇலை,தாமரை இலை,கீழ்க்காய் நெல்லி, நின்னை இலை, நெல்லிக்காய் இலை, தான்றிக்காய் இலை இவற்றைச் சமஅளவெடுத்துப் பிழிந்து சாறெடுத்துக் கொள்ளவும்.அச்சாற்றளவு நெய்சேர்த்துக் கலந்து ஏலம் திரிபலை இலவங்கம் கொத்துமல்லி மிளகு கோட்டம்,நன்னாரி, சீவசன்றலை.

83. வசம்பு, மாயக்காய், கச்சோலம் மிச்சை செவி
மதுரம்,ஈரவுள்ளி பிசகாமல் நல்ல கெருடப்
பச்சை நலமான செண்பகப்பூ, வல்லி
சிறுநாகப்பூ வளமாக மெல்லியரே சாத்திபேதி
சமனிடையாய் கூட்டியே நெத்திரத்தால்
பார்த்து நிறுத்துக்கோ மாத்திரையாய் ஆவின்
நெய் நாழியதில் கலந்து தான் காய்ச்சி மானே
மெழுகு பதம் வரும் போது தேனேக் கேள்
கோரோசனை சீனி, கவநீறும் புழுகு
மோரிடை சரியயொளிறிது கொள்வது

வசம்பு,மாசிக்காய், கச்சோளம்,எலிச்செவி, அதிமதுரம், ஈருள்ளி, கெருடப்பச்சை,செண்பகப்பூ, வல்லி,சிறுநாகப்பூ,சாத்திரபேதி இவற்றை கண்ணளவாகப் பார்த்து சமமாக எடுத்துக் கொள்ளவேண்டும். இதனுடன் 1.3லிட்டர் பசுஎநய் கலந்து காய்ச்சி மெழுகுபதம் வரும்போது கோரோசனை சீனி, கவநீறு, புனுகு இவற்றையும் சேர்த்துக்கொள்ளவும்.

84.விஷபாக கணையின் குணம்:

தாங்கிய சரீர மெல்லாந்
    தடித்துடன் கனத்து விம்மித்
தூங்கிய நயனந் தன்னிற்
    சுக்கிர னெழுந்து . . . .
பாங்குடன் தண்ணீர் தாகம்
    பருகு சோற்றாமை யாகும்
வீங்கியே வெளுக்கும் மேனி
    விஷபாக கணையி தாமே

உடம்பெங்கும் தடித்து, கனத்து விம்மும். தூங்கிவிழும். கண்களில் சுக்கிரன் எழுந்து நிற்பான். தாகமெடுக்கும் தண்ணீர் பருகினாலும் தாகம் அடங்காது. உடம்பானது வீங்கி வெளுக்கும். இவை விஷபாக கணையின் குணங்களாகும்.

85. திட்டு முட்டாக முக்குஞ்

சீதமுங் கடுத்து வீழுங்

கட்டு முட்டாக . . . .

களத்திடும் மயக்க முண்டாம்

நட்டமாந் தாது தாளும்

நாவது வுலர்ந்து தாகஞ்

சட்டமாய் விஷ பாகந்தானி

சாத்தியமாம் மரணந் தானே

முக்குத் கடுத்து திட்டுமுட்டாகச் சளி விழும். கட்டுமுட்டாக உடல் களக்கும். களப்பதுடன் மயக்கம் உண்டாகும். தாது தளர்ந்து காணப்படும். நாவுலர்ந்து தாகம் உண்டாகும். இவை விஷமாகக் கணையின் குணங்களாம். இதனால் மரணம் எய்துவது திண்ணமாகும்.

86. ஊதுகணையின் குணம்

உடம்பெல்லலம் வெதும்பி நொந்து

வுளைந்து கால்சந்து மேனி

திடமிக வூதிக் காயும்

சகிக்கிடு மலமும் சாவற

சடமெல்லா வூதம் வற்று

சன்னையா யிருமுஞ் சற்றே

மடமயி லலேள பூது

கணையென வகுக்க லாமே

உடம்பெல்லாம் வெதும்பி நொந்து ளைந்து, கால் சந்துகள் மேனி இவை வலித்து மலம் வற்றும். உடம்பு ஊதும். வற்றும். தொடர் இருமல் உண்டாகும். இவை ஊதுகணையின் குணங்களாகும்.

87.இதத்கு_நெய்

தேங்காய் நாலுதனை திருகிச்
சிறக்க பிழிந்து நாலுபடி
பாங்காய் மஞ்சள் திப்பிலியும்
பருகு முந்திரிப் பழத்துடனே
வாங்காய் மதுரமஞ் சிறுநாகப்
பூவுங் கிராம்பு சிங்கி
யுடனாங் காணத்தி திப்பிலியு
மாத்தவகைக் கொன்றரை கழஞ்சே

நான்கு தேங்காய்களைத் திருகி நன்றாகப் பிழிந்து 5.2லிட்டர் சாறெடுத்து மஞ்சள் திப்பிலி சேர்த்து முந்திரிப்பழம், அதிமதுரம், சிறுநாகப்பூ, கிராம்பு, சிங்கி, காணத்தி, திப்பிலி இவை வகைக்கு 3கிராம் வீதம் சேகரித்துக் கொள்ளவும்.

88.வகை சேர மருந்து

வச்சேர தேங்காய்ப்பால் வடிய
வரைத்து தாங்க ரைத்து
-- -- --
துகையாய் வெந்து நெய்வடித்து
தட்டு காசினை வருந்த
பகையே தீரு முதுகணை
பறந்து போகுங் கண்டிரே

மருந்துகளை எல்லாம் ஒன்றாகச் சேர்த்து தேங்காய்ப்பால் வார்த்தரைத்து வேகவைத்து நெய்வடித்து 5மிகி அளவு சாப்பிட்டுவர குழந்தைகட்கு உண்டாகும் முதுகணை நீங்கும் என்பதாம்.

89. ஊதுதனைக்கு ஆமணக்கெண்ணெய்:
ஆமணக்கு எண்ணெய் நாழி
அதிலுடனே காட்டெருமைப் பாலாழாக்கு
தாமணக் குறிஞ்சா வேலிப் பருத்தி
ஆதளை பிரமி
வாமண நொச்சி மேனி
மருவு வேப்பிலை தக்காளி
யோமணச் சங்கங் குப்பி
யோரொன்று சாறு முக்கே

ஆமணக்கெண்ணை 1.3லிட்டர், காட்டெருமைப்பால் 650மிலி குறிஞ்சா இலை, வேலிப்பருத்தியிலை, ஆதவளை, பிரமி, நொச்சி, குப்பைமேனி, வேப்பிலை, தக்காளி, சங்கங்குப்பி இவை வகைக்கு 325மிலி சேகரித்துக் கொள்ளவும்.

90. சாற்று முன்காய மொமஞ்
சதகுப்பை கிராம்பு வாளம்
மெற்றுங் கருஞ்சீரகம் வசம்பு
யிந்து திப்பிலி தானுவா
யாற்றும் வெண்கடுக்காய் சார
மஞ்சு சரிசமனாய் கூட்டே

பெருங்காயம், ஓமம், சதகுப்பை, கிராம்பு, நேர்வாளம், கருஞ்-சீரகம், வசம்பு, இந்துப்பு, திப்பிலி, வெண்கடுக்காய், சத்திச்சாரம் இவற்றையும் சமஅளவாய்ச் சேகரித்துக் கொள்ளவும்.

91. கட்டுநீ வகை யொரொன்று

கழஞ்சது தகத்த ரைத்து

நாட்டமாய் கரைத்து வெந்து

வடித்து காவிடையே கொள்ளில்

தட்டமாங் கணையும் வீக்க

மியதட வூது மாந்தம்

வாட்டமா யகலு மென்று

மாமுனி யருளிச் செய்தார்.

மேற்சொன்ன சரக்குகளை வகைக்கு 5 கி வீதமெடுத்து அரைத்து உரைத்து நெய் சேர்த்துக் காய்ச்சி வடித்துக் கொள்ளவும். இதில் 5கி அளவு உண்டு வந்தால் கணை வீக்கம், ஊதுமாந்தம் முதலியன நீங்கும் என்பது அகத்தியர் சொன்னதாகும்.

92. வாய்வு கணையின் குணம்:

வயிற்றை பிரட்டி வலியுண்டாய்

வாய்நீர் குழற்றி வாந்திக்கும்

பயிற்றி யுடலம் வற்றியது

பாவைபோல் யுணர்ந்து வற்றும்

பொசித்த வசனஞ் செரியாது

பொருமபி வயறு வூதிவருங்

காயிற்ற வாய்வுகணை யென்று

கண்டே பெருகப் பேசுவரே

வயிற்றைப் பிரட்டும், வலி உண்டாகும். வாய்நீர் சுழன்று வாந்தி உண்டாகும். உடல் வற்றும். பெண்போல் உடம்புலர்ந்து வற்றும். உணவில் வெறுப்புத் தோன்றும். வயிறு பொருமும். வயிறூதும். இவை வாயுகணையின் குணங்களாம்.

93. இதத்துப் பொடி -

தாளிச பத்திரி சீரகமுந்

  தக்க வசம்பு திரிகடுகு

வாளிச மொதகந் திரிபலையும்

  வகை சேரேலம் வால்மிளகு

காளிச மென்னுங் கருஞ்சீரங்

  காயம் மதுர ரோகணியும்

நாளிச மொன்று கழஞ்செடுத்து

  நன்றாய் வடித்துப்பொடி செய்யே

தாளிச பத்திரி, சீரகம், வசம்பு, திரிகடுகு, கடுக்காய், திரிபலை, ஏலம், வால்மிளகு, தாளிசமெனும் கருஞ்சீரகம், காயம்த அதிமதுரம், கடுகு ரோகணி இவற்றை ஒன்ற சேர்த்துப் பொடித்துக் கொள்ளவேண்டும்.

94. பொடிசெய் வெருகடி சரிசீனி

  பொருந்த கலந்து வெந்நீரில்

கடிதாய் விரவிக் கொள்வீராய்

  கடிய வாய்வு கனை போமே

பொடித்தவற்றை மூவிரலளவு எடுத்து அதற்கு அதே அளவு சீனி சேர்த்து வெந்நீரில் கலந்து வழங்கி வர வாயுகனைகள் அகன்று விடும்.

95. நீர்கணையின் குணம்:

தலையுங் கனத்து நீரேற்றுச்
    சளிபோல் நீருந்தா னூறுஞ்
ஓலையுஞ் சரீரம் நீர்கலந்து
    வொடக் கடக்க வொட்டாது
மலையுஞ் சிறந்த நீர்சிவக்கும்
    வாய்நீர் யூறி யருவிறுக்கும்
சிலையுஞ் சிறந்த நீர்கணைதான்
    செய்யுங் குணங்கள் யிதுவாமே

தலை கனக்கும், நீரேற்றம் கொள்ளும். சளிபோல்நீர் ஊறும். உடம்பானது ஓலைபோல் மெலியும். நடக்க முடியாது. கண்ணில் நீர் வடியும். கண் சிவக்கும். வாய்நீர் ஊறி அருவருக்கும். இவை யாவும் நீர்க் கணையின் குணங்களாகும்.

96. நீர்கணைக்கு கசாயம்:-

சீந்தித் தண்டு நீர்முள்ளி
    சிறிந்த் நெரிஞ்சி யிலந்தையிலை
சார்ந்த முசனை வேர்நிலப்
    பட்டை மிளகு சாரணைவேர்
ஆய்ந்து தள்ளி வளஞ்சேர்
    மருந்தங் சீறமங்கது வொன்று
வாய்ந்த சுக்கு கருஞ்சீரகம்
    மஞ்சள் வகைக்கு முக்கழஞ்சே

சீந்தில்தண்டு, நீருள்ளி, நெருஞ்சில், இலந்தைஇலை, முசனைவேர், நனாப்பட்டை, மிளகு, சாரணைவேர், சுக்கு, கருஞ்சீரகம், மஞ்சள் இவற்றை வகைக்கு 15கி வீதமெடுத்துக் கொள்ளவும்.

97.காஞ்சே சரக்கை கிளிகட்டி

கடுக்காய் பத்து விரைதள்ளி

வளஞ்சேர் மருந்தங் சீற்றும்

வாரி யிருநா லெட்டொன்றா

யளந்தே மருந்தி லருதகிளய

பொடித்துக் காசிடை மேல்தூவி

யுளஞ்சேர் நாள்மூன்ற பொழுதில்

ஓடும் வீக்கம் நில்லாதே

இச்சரக்குகளைக் கிளியாக் கட்டி விரை நீக்கிய கடுக்காயை பத்தெடுத்து பாண்டத்திட்டு தண்ணீர்விட்டு எட்டில் ஒன்றாகச் சுருங்கக் காய்ச்சி அருதகிளாய்? பொடித்து 5 கிராம் தூளைத் தூவி 3 நாட்கள் பருகிவர வீக்கங்குறைந்து நீகக் கண நீங்கும் எனபதாம்.

98.நீர்கணைக்கு_நெய்

முசுட்ட யிலையு மாவரைவேர்

முதநீர் தள்ளி விரையுடனே

வசுட்டமான வறள்கொடுப்பை

யாடா தொடை மருதந் தோல்

கசுட்ட மான கைதோறி

கன்னுப்பிளை தூதவளை

யசுட்ட மாக வகைசாறு

ஆக வகைக்கங்கரை படியே

முசுட்டை இலை,ஆவாரைவேர்,காடிநீர்,உள்ளிவிதை,கொடுப்பை, ஆடாதோடை, மருந்த்தோல்,கைதோன்றி, கன்னுப்பிள்ளை, தூதுவளை வகைக்கு 650மிலி சாறுவீதம் எடுத்துக் கொள்ளவேண்டும்.

99.படியே யெலம் மதரமுடன்
பாங்காய் சாதிக் காயுடனே
குடியாங் கோட்டம் சதகுப்பை
கொத்த மல்லி சீரகமுங்
கொடிதாங் கிராம்பு கருஞ்சீரங்
குறித்த வுளவாய் திரிகடுகு
விடுவேல் சந்த மிருவேலி
விதமாய் வகைக்கு கழஞ்சொனே

ஏலம், அதிமதரம், சாதிக்காய், கோட்டம், சதகுப்பை, கொத்தமல்லி, சீரகம், கிராம்பு, கருஞ்சீரகம், திரிகடுகு, சந்தனம், இருவேலி இவற்றை வகைக்கு 5கி வீதம் சேகரித்து எடுத்துக் கொள்ளவும்.

100.ஒன்றா யரைத்து யாவின்நெய்
உரிதானி விட்டு வெந்துவிடு
நன்றாய் காய்ச்சி உட்கொள்ள
நாடா நீரின் கனை போமே

மேற்குறிப்பிட்டவற்றை எல்லாம் ஒன்றாக அரைத்து ஆவின்நெய் 2.6லிட்டர் சேர்த்து கலந்து உரிய அளவு உட்கொண்டுவர நீர்க்கனை நீங்கும்.

101.பூரணவ_கனணயின்_குணம்:

கருசியு முடம்பு வரீந்த

குடல்தனிற் பால தொங்காடில்

நெஞ்சையுங் குழிய வாங்கி

நிறமொழி வேற தாகுந்

தஞ்சியங் கண்ணுங் காந்தனி

றயல்விழி பஞ்ச தாகும்

பஞ்சின மெல்லடியி னாறே

பாவையின் கணையி தாமே

உடம்பு உலரும், குடலில் தொங்குவத போன்ற வலி எடுக்கும். நெஞ்சுக் குழி பெரிதாகும். உடலின் நிறம்மாறும். மொழி-குரல் மாற்றமடையும். கண்குழி உள்ளே போகும். மேலும்கண் விழி உள்ளே போகும்.மேலும் கண்விழி பஞ்சடையும்.இவை பாவைகணையின் குணங்களாகும்.

102.ஊள்ளி ரோக_கணையின் குணம்:

ஊதிடு முடம்பு காய்ந்த

உடல்குலை கருகி யங்கே

வேதனை பலத முண்டாம்

வெந்திடும் வாயும் நாறந்

தீதினை உள்ளில் ரோகஞ்

செய்குண மிதவே யென்ன

வாதினை வறட்சி ரோகம்

வகைகுணம் வகுத்த சொல்வோம்

உடம்பு ஊதி பெருக்கும்.உடம்பு காயும்.வயறு கறுக்கும். வேதனை உண்டாகும்.வாய் வெந்த நாற்றமெடுக்கும்.இவை உள்ளி ரோக குணங்களாகும்.வறட்சிகணையின் குணங்களை இனிச் சொல்வோம்.

103. உதிரஞ் சிவந்த உடல்ஊதி
உடல் குலைந்த ஈரல் வற்றி
யுதரங் கருகி மேலுலாத்தி
யத்தி யுருக்கி குருதிவற்றுங்
கதிரவ னுள்ளில் ரோககணை
குண மிதுவே யென்ன
பொதிகையில் வாழும் ஈசன்
புகன்ற நூலி தாமே

வயிறு சிவக்கும்.உடல் ஊதும்.உடல் குலையும். ஈரல் வற்றும். உதடு கருகும்.உடம்பு உலரும். உத்தியுருக்கி கருது வற்றும். இவை கதிரவனில் உலிக்கும் உள்ளில் ரோக குணங்களாகும். இது பொதிகையில் வாழும்.

104. உள்ளி ரோக துணைக்கு நெய்
பொன்னாங் காணி சிறுக்கீரை
புகழும் செஞ்சந்தன மதரம்
நன்னா ராமிச் சோரோஷீபு
நலஞ்சேர் புன்னைக் காயளவு
சொன்னார் தடியங் காய் குடமுமந்
தலங்கும் நாழிநெய் தன்னிலே
வன்னி யெரித்து வடித்தருந்த
வறண்ட யுள்ளிங் ரோகம்போம்

பொன்னாங்காணி, சிறுகீரை, செஞ்சந்தனம், அதிமதரம், நன்னாரி, எலுமிச்சம் இவற்றைச் சேர்த்தரைத்து புன்னைக்காயளவு எடுத்துத் தடாயங்காய் சேர்த்து 1.3லிட்டர் நெய்சேர்த்து வன்னி விறகால் எரித்து வடித்தெடுத்துப் பருகிவர உள்ளில் ரோககணை நீங்கும்.

105. உள்ளில் ரோகம் எட்டுக்கும்_அழனத்தென்னெய்

பேசிய ரோகம் தீர

பிரமி வல்லாரை வண்ணி

வீசிய நெரிஞ்சி சிண்ணி

விரிசு வெங்கனை முத்தாழி

பாசி யுள்ளடிகள் காணி

பாச்சோற்றி தகரை யாரை

மாசி மாந்தளிர் மருத

மாதுளை துளசி கோவ்வை

உள்ளில் ரோகம் நோய் தீர்வதற்கு பிரமி,வல்லாரை,வண்ணி நெருஞ்சி, சிறுசின்னி,விரிசு, வெங்கண , முத்தாழி பாசி,புள்ளடி, பாச்சோற்றி, தகரை, ஆரை,மாசி, மாந்தளிர்,மருத,மாதுளை, துளசி,கொவ்வை இவற்றைச் சேகரித்துக் கொள்ளவும்.

106. இண்டிலை யிசங்கு கொற்றா

விட்டு வகை சாறுழக்கு

முண்டி யாண்ட மொய்பா

முக்கடு பலையு கெல...

மண்டக மதுரங் கோட்டம்

கிராம்பது வசம்போடுள்ள

கண்டபாறி கெருட பச்சை

கார மக்கிரா யுலவாய்

இண்டிலை,இசங்கு, கொற்றான் இவை சாறு 325மிலி சேர்த்து முக்கடுகு,திரிபலை, ஏலம்,அதிமதுரம்,கோட்டம்,கிராம்பு,வசம்பு, கெருட பச்சை அக்கிரகாரம் இவற்றைச் சேகரித்துக் கொள்ளவும்.

107. இதி வகைக்கு கழஞ்சு கொண்டு

ஈருள்ளி யுழக்குத் தன்னைச்

சாத்திர யறிந்து போட்டு

சரக்கெல்லா மரைத்து காய்ச்சி

முதிரபதம் வடித்து நீயு

முழுங்கவே கரண்டி கொள்ளிற்

போதுப்பை . . . .

. . . . . . போமே

இவற்றை வகைக்கு 5கி வீதமெடுத்து ஈருள்ளி இவை வகைக்கு 325மிலி எடுத்துச் சாத்திரம் அறிந்து போட்டு அரைத்துக் காய்ச்சி வடித்து கரண்டி அளவு உட்கொண்டால் உள்ளில் ரோகம் நீங்கும் எனபதாம்.

108. <u>உள்ளு ரோகம் ஏட்டுக்கும் ஆமணக்கெண்ணெய்</u>

சிற்றாமணக்கு முத்திரு நாழி

சிறந்தாவின் பாலிரு நாழி

யொத்த தை . . . . . த்து

உலர்த்தியே யிடித்துக் கொண்டு

சிற்றாமா மிளநீர் வெள்ளஞ்

சிறக்க வஞ்ஞாழி தன்னை

உள்ளதை சாலக்கி காய்ச்சி

உடனே எண்ணெயூற்றிக் கொள்ளே

ஆமணக்கு, முத்தை உரித்து 1.3லிட்டர், ஆவின்பால் 103லிட்டர் சேர்த்து இடித்து சிற்றாமணக்கு, இளநீர், இவை வகைக்கு 1.3லிட்டர் சேர்த்துக் கலக்கிக் காய்ச்சி எண்ணெய் ஊற்றிக் கொள்ளவும்.

109. கொள்ளவே சாதிக் காயுங்

குருசாணி சாதிபத்திரி

நள்ளவே கிராம்பு சீரம்

நலமுடனே வசம்போ டெலந்

தெளிய திப்பிலி மதரம்

சிறக்கவே மாயக் காயு

மள்ளிய மருந்து தனினை

அதிவ்வகை கழஞ்சு காலே

சாதிக்காய், குரோசாணி, சாதிபத்திரி, கிராம்பு, சீரகம், வசம்பு, ஏலம், திப்பிலி, அதிமதரம், மாசிக்காய் இவற்றை வகைக்கு 125மிலி. வீதமெடுத்துச் சேகரித்துக் கொள்ளவேண்டும்.

110. இதவகை அரைக்கக் கேளு

இத்துடன் துளசிச் சாறும்

மத்தித்த வல்லாரைச் சாறும்

வகைக்குச் சாறு முக்கதாக

இத்துடன் அரைத்து காய்ச்சி

இயல் மெழுகுபதம் வடித்து

ஊதித்த காசிடை குடிக்க

கணை பதினெட்டும் போமே

இச்சரக்குகளைத் துளசிச்சாறு சேர்த்தரைத்து, வல்லாரைச்சாறும் 325மிலி எடுத்து சேர்த்தரைத்து காய்ச்சி மெழுகு பதமாகும் போது இறக்கி 5மிகி அளவு குடிக்க கொடுக்க பதினெட்டு வகை கணைநோய்களும் நீங்கும்.

111.உள்ளு ரோக_கனுணக்கு_பசுவின் நெய்_

கொடுப்பை தகரை பழம்பாசி

குணமாம் விரிசு அகத்தியிலை

அடுத்தே கீழ்காய்நெல்லி கொல்வை

அமுர்தவள்ளி சித்திரப் பாலை

கொடுக்கு மருந்து மொல்பததால்

சொல்லும் வகைக்கு சாறுழக்கு

கடுத்தே பிழிந்து ஈரவுள்ளி

கழஞ்சி வேரே யரைத்திடுமே

கொடுப்பை, தகரை, பழம்பாசி, விரிசிலை, அகத்தியிலை, கீழ்க்காய் நெல்லி, கோவை, அமுர்தவல்லி, சித்திரப்பாலை இந்த ஒய்தையும் இடித்து வகைக்கு 625 மிலி சாறெடுத்து ஈரவுள்ளி வேரேடுத்து அரைத்துக் கொள்ளவும்.

112.அரைக்கு மருந்து அதிமதுர

அளிசே ரெல யிலவங்க

முரைக்குங் கடுக்காய் கன்னார்

முள்ளி தெற்றான் மாயக்காய்

வரைக்குந் திப்பிலி கெருடபச்சை

வகை சீரகமுந் துரிசுடனே

இசைக்குங் கிராம்பு சாத்திரபேதி

இன்ன மருந்து சொல்லுகிறேன்

அரைக்க வேண்டிய மருந்து சொல்வேன். அதிமதுரம், ஏலம், இலவங்கம், கடுக்காய், நன்னாரி, தேற்றான் மாசிக்காய், திப்பிலி, கெருடப்பச்சை, சீரகம், துரிசு, கிராம்பு, சாத்திரபேதி.

113. கொல்லுங் கூச நீருடனே

துகலுஞ் சந்தம் நறுநீண்டி

வெல்லு மரத்த சந்தனமு

மிகவே கழுத்த சீரகமுங்

குவலு மிரா மிச்சனுடன்

கிளர்ந்த வோரொன்றொரு கழஞ்சு

தல்லு மீர வுள்ளியுடச்

சாற்றால் அரைத்து வழித்திடுமே

கூகைநீறு, சந்தனம், நறுநீண்டி சிகப்பு சந்தனம், கருஞ்சீரகம், விலபமிச்சு இவை வகைக்கு 5கி வீதமெடுத்து வெங்காயச் சாறுவிட்டு அரைத்து வழித்தெடுத்துக் கொள்ளவும்.

114. வழித்த மருந்து மிதசாறு

வகையாய் நறுநெய் நாழி தன்னில்

அழித்தேகலக்கி யளவில் வைத்து

அடவே மெழுகு பதமானால்

கழித்தே சீலை வடிகொண்டு

காசிடை நக்கக் குடிப்பீரா

லொளித்தேகணைநெய் வாய்புண்ணு

முள்ளில் ரோகம் போய்விடுமே இவ்வகை மருந்துகளை 1.3லிட்டர் நெய் சேர்த்துக் கலக்கி அடுப்பேற்றிக் காய்ச்சி மெழுகு பதமாகும்வரை காய்ச்சி இறக்கி துணியில் வடிகட்டிக்கொண்டு பின்னர் 5மிலி அளவு உள்ளங்கையில் ஊற்றி நக்கி வர கணை, வாய்ப்புண், முள்ளிலி ரோகம் போன்றவை நீங்குமென்பது.

115. உள்மூல கணையின் குணம்:

உதிர முசுரந்தங் கதி
    உடல் குழைந்து ஈரல்வற்றி
யிதரமுங் கருகி மேலி
    லற்பமாய் சுரமுங் காய
மிதரமா வண்டங் சீறில்
    நீரே யெரிக்குங் குருதிவிழுங்
கதிரவ முள்ளில் மூல
    கணையுட குணங்கள் தானே

வயிறு ஊதும்; உடல் குலைந்து ஈரல் வற்றி, உதடு கறுகி, காயும், வயிறு சீற்றத்திற்குண்டாகும். சிறுநீர் எரிக்கும். குருதி வீழும். இவை யாவும் உள்மூல கணையின் குணங்களாகும்.

116. குடல்சேர் கணையின் குணம்: இது அசாத்தியம்.

மானே குடல்சேர் கணை தனக்கு
    வயறு பொருமும் வலியுண்டாம்
தானே தண்ணீர் மிகபருகுஞ்
    சற்றே நாவு முலர்ந்தவரு
மூனே யுருக்கு யுடல்வற்று
    முள்ளே யனற்றுஞ் சுரங் காயுங்
கானே நயன மிருண்டுவருங்
    கடிய கணை யென்றறிவ்வர

வயிறு பொருமும், வயிற்றில் வலி உண்டாகும். தண்ணீர் மிகுதியும் குடிக்கத் தோன்றும். நாவுலர்ந்து உடலை உருக்கும். உடல்வற்றும். உள்ளே அனைத்தும் சுரங்களையும் கண் இருண்டு வரும். இவை குடல்சேர் கணையின் குணங்களாகும்.

..146

117.குதவாய் குத்துங் குறக்குளையுங்

குமுறி யிரையு மந்திக்குந்

தசமே யிரையுங் கருக்குவிழுந்

தானே சுரமு குளிரெருக்குந்

சீதமாய் வயறு கடுத்துளையுஞ்

சீதங் கழியும் வழுவழுக்குங்

குதவாய் காரணியிதின் குணங்கள்

குடலேற்றத்தின் கணை தானே !

மலவாயில் குத்தல் உண்டாகும். குறுக்கில் உளைச்சல் உண்டாகும். வயிறு குமுறி இரைச்சல் உண்டாகும். மலம் கடுத்து விழும். சுரம் காயும். குளிர் எடுக்கும். வயிறு கடுத்து உளையும். சீதம் கழியும். வழுவழுக்கும். இவை குடலேற்றத்தின் கணைக்குறிகளாகும்.

118. குடலைச் செருமி மெய்குத்துங்

குமியு மிரையு மந்திக்குங்

கடலை கலக்கும் வாறதுபோற்

கதிக்க வலிக்கு மீலவிளே

நடமேல் வ . . . பதிநிறம்

நலவேம்பூப் போல் மலங்க கழியும்

குடலேற்றத்தின் கண குணங்கள்

கொல்லும் வகைகளிது தானே

குடல் செருமும். உடல் குத்தும். வயிறு குமியும். இரையும், மந்திக்கும். அடிவயிற்றைக் கலக்கும். வலிக்கும். வேப்பம்பூபோல் மலங்கழியும். குடல் ஏற்றம் உண்டாகும். இவை குடலேற்றக் கணையின் குணங்களாகும்.

119. குடல்சேர குணைக்கு கசாயம்

தான்கரு வேப்பு நெ. .. .

கருமுருக்கி னெட்டு

மணமா முருங்கை னெட்டும்

வளர்வேம்பின் னெட்டி னோடே

கானில் வாள்பொழிஞ்சி வேருங்

கடிய நாரகத்தி னெட்டு

மீனமாம் பெரிய தும்பை

யிலையுட னின்ன மாமே

கருவெப்பு, கருமுருக்கை எட்டு, முருங்கை எட்டு, வேப்பம்பட்டை மொழிஞ்சி வேர், நாரகத்தி எட்டு, பெரியதும்பை இலை இவற்றைச் சேகரித்துக் கொள்ளவும்.

120. ஆந்திரி கடுகோ டிஞ்சி

அதில் மஞ்சள் வசம்புமாட

மூன்தான் பொடு தலையும்

வேலிப்பருத்தி பொடியை

தானெல்லா மொப் பிடவே வெதுப்பி

கொண்டு உடன் சிலம் விட்டு

காய்ச்சி சம்பிடக்குடித்த போதே

குடலேற்ற கிராணி போமே

ஆந்திரி, கடுகு, இஞ்சி, மஞ்சள், வசம்பு, பொடுதலை, வேலிப் பருத்தி இவற்றையெல்லாம் ஒன்றாகச் சேர்த்து வெதுப்பி நீர்விட்டுக் காய்ச்சி சாப்பிடக் கொடுத்தவுடன் குடலேற்ற கிராணிகள் நீங்கும் என்பதாம்.

121. சூடலேற்ற_கனுணக்கு_அழுணக்கெண்ணெய்:

யெரண்ட எண்ணெய் அரைப்படியு

மிசையும் வேலிப்பருத்தி தும்பை

சீரண்ட மானபிரமி கொவ்றை

பேய்ப்பூருடனே சிறு குறிஞ்சா

வாரண்ட மான தூதுளையும்

இமுர்த வள்ளி தக்காளி

பேரண்ட மான வகைச்சாறு

பேணி வகையொன் றுரியாமே

எரண்டத்தெண்ணை 625மிலி, வேலிப்பருத்தி, தும்பை, பிரமி, கொவ்றை, பேய்ப்பீர்க்கு, சிறுகுறிஞ்சா, தூதுளை, அமிர்தவள்ளி, தக்காளி, இவற்றின் சாறு வகைக்கு 1.3லிட்டர் சேகரித்துக் கொள்ளவேண்டும்.

122. திரிகடுகு திரிபலை கடுகுரோகணி

சிவதை இந்துப்பு நேர்வாளங்

கறியுமு சீரங் கருஞ்சீர

கடிய வெள்ளுள்ளி பெருங்காயம்

பிறிவுறு யோரோவிறாரு கழஞ்சு

பேணியரைத்து கரைத்து வெந்து

குறியுமு தட்டு காசளவு

கொள்வீர் கானநோயது போமே

திரிகடுகு, திரிபலை, கடுகுரோகணி, சிவதை, இந்துப்பு, நேர்வாளம், சீரகம், கருஞ்சீரகம், வெள்ளுள்ளி, பெருங்காயம், இவை வகைக்கு 5கி வீதம் எடுத்து பேணி அரைத்து கரைத்து, வேகவிட்டுக்காசளவு உட்கொண்டுவர கணைநோய் நீங்கும்.

123. கரப்பான் கணையின் குணம்:-

தேகம் வறண்டு நாவுலருஞ்
சிரங்கு சொறியு மிதவிபொருகுந்
தாக முடனே மேலவருந்
தண்ணீர் வேண்டீந் தகையெய்து
மாகம் புண்போல் நொந்துளைந்து
வழவஞ் சொறியுங் காந்தலுமாந்
தொகை யனையாய் கூறிடக் கேள்
தோஷிமுங் கரப்பன்கணையிதுவே

தேகம் வறண்டு நாவுலரும். சிரங்கு, சொறி பெருகும். தாகமுண்டாகும். மேல் அள்ளம் உலரும். தண்ணீர் தாகமெடுக்கும். புண்போல் நோக்காடு உண்டாகும். சொறி காந்தல் உண்டாகும். இவை கரப்பன் கணையின் குணமாகும்.

124. கரப்பன் கணைக்கு நெய்:-

சீனப்பா வரண்டு பலஞ்
சிறந்த வசம்பு திரிகடுகு
காவக் கார்கோல் கருஞ்சீரஞ்
கிராம்பு கோட்டஞ் சாதிக்கா
யெளப் படவே வேம்பாடை
இதுவே வகைகழஞ் சொல்றாமே

சீனம் 70கி, வசம்பு, திரிகடுகு, கார்க்கோல், கருஞ்சீரகம், கிராம்பு, கோட்டம், சாதிக்காய், வேம்பாடை இவை வகைக்கு 5கி வீதம் எடுத்துக் கொள்ளவும்.

125.ஆமே சங்கங் குப்பியுடன்

அதினுடன் குப்பை மேனி

தாமே கழுதை விட்டைநீர்

தகரை கழஞ்சு முசுமுசுக்கை

யொமே சொன்னோம் வகைச்சாறு

வூரியாய் கூட்டி யாவின் நெய்

நாமே நாழி தான்விட்டு

நலமாய் வெந்து வடிகொள்ளே

சங்கங்குப்பி, குப்பைமேனி, கழுதைவிட்டைநீர், தகரை, கழஞ்சு, முசுமுசுக்கை இவற்றின் சாறு வகைக்கு 1.3லிட்டர் ஆவின்நெய், 1.3லிட்டர் சேர்த்து அடுப்பேற்றி வேக வைத்து வடிகட்டிக் கொள்ளவும்.

126. கொள்ளே கரண்டிநெய் குடிக்க

கூறக் கேளீர் மடமாதே

விள்ளே கரப்பன் கணையெல்லாம்

விரண்டே யோடும் விஷகரப்பன்

நள்ளே பொதிகை மாமுனிவன்

நவின்றார் நூ லின் முறை கண்டு

கொள்ளே மருந்து தான்கொண்டு

குடிக்கத் தீரும் கூறியாமே

இந்நெய்யில் கரண்டி அளவு தினமும் குடித்து வர கரப்பான் கணைகள் நீங்கும். விஷ கரப்பானும் குணமாகும். இது நான் சொன்னதல்ல. அநுபவத்தால் உணர்ந்து பொதிகை வாழ் மாமுனிவன் அகத்தியன் சொன்னதாகும்.

127. பித்திராணி_கணையின்_குணம்

அங்க முடம்பும் வாடி
அடவுடன் வயறுந் தளிளி
பங்கமாய் மலங்க ளிந்து
பகல்குறை ஈரலில் மிஞ்சி
தங்கிடா மலமுந் தள்ளி
அடிக்கடி தானுண் வேண்டு
மங்கிலா நெஞ்ச ளற்று
மடிக்கும் பித்கனை யதாமே

அங்கமும், உடம்பும் வாடி, வயிறு தள்ளி, தொடர்ந்து மயங்கழித்து, பலங்குறைந்து ஈரலில் துன்பம் மிகுந்து, தாங்காத அளவு பெரும்பகுதி மலங்கழிந்து கொண்டே இருந்து, அடிக்கடி சாப்பிடவேண்டும். போல் இருந்து சாப்பிட்டுக் கொண்டே இருந்தால் அது பித்கிராணி கணையின் குணமாகும்.

128. பித்தரணைக்கு_உருண்டை

சாற . . . முன்றதனைப் பொடித்து முன்று
தானொரு கறதிலின்ற தான்னு சி காந்த
மீதினையு மரைத்திடு நற்சீரந் தானு
தானு மினியி விதி மதுரங் காசியதாக
ந்தியுட நாவினளி . . பொறி சேர்த்து
நீயரைத்தெழு உருண்டைசெய்து சோறுமுன்னுட்டி
மாதேயொருண்டை தினதின மெழு நாள்கொள்
மைந்தருட பித்கிராணி மாறிப் போமே

முன்றதனைப் பொடித்து முன்று அசினையும் கலந்து காந்தம் சேர்த்து நற்சீரகம் கூட்டி, அதிமதுரம் இவற்றைச் சேர்த்து அரைத்து ஏழு உருண்டைகளாகச் செய்து தினம் ஒரு உருண்டை வீதம் சாப்பிட்டு வர பித்கிராணி மாறிப் போகும்.

129.முசல் வலிக்கிணையின் குணம்

மதலையின் மேனி வாடி

மவுர காந்தலுண்டாம்

குதவாய் மலம் போகாது

கன்றகண் மூடிக் கொள்ளும்

நிதனமாய் வாய்நீருறி

நெஞ்சிடை குழிய வாங்கும்

பிதன்மாய் பால சோர்ந்து

பகர்குளிர் காய்ச்சலிதோன்றும்

குழந்தையின் உடல் வாடும், தலை காந்தல் உண்டாகும். மலம் போகாது. கண்கள் மூடிக் கொள்ளும். வாய் நீருறி நெஞ்சிலே குழி விழும். பாலகன் சோர்ந்து குளிர் காய்ச்சல் உண்டாகும். இவை முயல் வலிக்கணையின் குணங்களாகும்.

130. தோன்றிடும் வயது மூதிச்

சோர வுடை லதிருக்கு மெத்த

கன்றிடும் வலியு முண்டாய்

கொள்குறி பலதந் தோன்று

மீன்றிடுந் தாயார் தானு

மிகள்முசல் வலியே யென்னப்

பொன்றிடா முனிவன் சொன்னார்

புகழ்மறை நூலை யாந்தே

வயறு ஊதும். எதிரெடுக்கும். உடம்பெல்லாம் வலியுண்டாகும். பல வகையான குறிகுணங்களைத் தோற்றுவிக்கும். முயல்களை வலிபோன்று இதன் வலியும் உண்மாகும். என்பது அகத்திய முனிவன் வாக்காகும்.

131.முசல் வலி_கறுணக்கு_தயிலம்:

எருக்கிலை நொச்சி வெய்பு
மிசைந்த நாய்வேளை புங்கு
மெருக்க மாகழச்சி வேருங்
குருந்துடன் வெள்ளை வேரு
மருக்க மளங்கரை யோடு
வகைக்குச் சார்சமனாய் கட்டி
பொருக்கள் வைத்துக் கோழிக்குடல்
சோரை பூனைக் காட்டம்

எருக்கிலை,நொச்சி, வேம்பு, நாய்வேளை, புங்கு, எருக்கு, கழற்சிவேர், வெள்ளைக்குருந்துவேர்,மளங்கரை இவற்றைச் சரி சமனாய்க் கட்டிக் கொள்ளவும்.கோழிக்குடல், பூனைக்காட்டம்.

132.பூனையின் காட்ட மோடு
புகழ்சி டாவின் குடும்பி
யானதோர் மஞ்ஞை பீலிகை
யிளகரி முசுறு முட்டை
தானெனும் நிலவேர் சன்னி
நாயகம் வயம்பு காய
மான பூலா விருட்ச
மரத்தை சந்தனம் வெள்ளுள்ளி

ஆண் ஆட்டின் குடுமி, மஞ்சை, பீலிகை, இளகரி,முசுறுமுட்டை, நிலவேர், சன்னி நாயகம்,வசம்பு, காயம்,பூலாவிருட்சம், அரத்தை, சந்தனம்,வெள்ளுள்ளி இவற்றையும் சேகரித்துக் கொள்ளவும்.

133. உள்ளி முக்கடுகு சிங்கி
ழூ பொரி காரந்தனை
மொள்ளிய வசமதாக முழு
தேவதாரந் குப்பை மேனி
மள்ளவே வகைக்கோ ரொன்று
கழஞ்சதாய் வேண்டி முன்வைத்
தள்ளதோர் சாகந் தன்னில்
துகள்பெற அரைத்துக் கொள்ளே

உள்ளி, முக்கடுகு, சிங்கி, பொரிகாரம், அசமதாகம், தேவதாரம், குப்பைமேனி, இவற்றை வகைக்கு 5கி வீதமெடுத்து முன் சொன்னவற்றோடு சேர்த்து அரைத்துக் கொள்ளவும்.

134. அரைத்ததிற் கலக்கி நன்றாய்
அன்புடன் மின்ப பெண்ணெய்
யுரைத்துடன் படி தானொன்றுக்
குழக்கு நல்லெண்ணெய் சேர்த்து
யெரித்திடு திரிநாள் தன்னில்
இயல்மெழுகு பதத்தில் வாங்கி
அரித்து சாற்உழக் கருந்தில்
முசல்வலி அதன்று போமே

அரைத்ததை ஒன்றாக உறவாடுமாறு கலக்கி வேப்பெண்ணெய் 1.3லிட்டர், 325மிலி நல்லெண்ணெய் சேர்த்து அடுப்பேற்றி 3 நாட்கள் எரித்து மெழுகு பதமாகும்போது இறக்கி ஆறியபின் வேளைக்கு 325மிலி வீதம் குடித்துவர முசல்வலி நீங்கும் என்பதாம்.

135. இதத்கு_திரி_

தேவ தாரம் வெள்ளுள்ளி

சன்னாயகம் சிறந்த சுக்கு

துரிசு மால்தோல் சுத்த

மேவு மஞ்சள் வசம்பு

விடத்தை தோல் மிக்கப் பூலா

விருஞ்சி மிலி சோடு

தாவு கெந்தகத் தோடேது டக்கயிறு

தானும்நாள் பனிஞ்சுதின் கொம்புடன்

காவுகின்ற கழுதையின் காட்டமும்

கானில்வாளமு சிறகாட்டமுங் கூட்டிடே

தேவதாரம், வெள்ளுள்ளி, சன்னி நாயகம், சுக்கு, துரிசு, மஞ்சள், வசம்பு, விடத்தைத் தோல், பூலா, விருச்சிகம், மிளகு, கெந்தகம், சாவப்போவ்.

136. கூட்டியே சமன்கொண்டு பொடித்துள்

குலாவு சீலையின் கம்பிளியானதில்

ஊட்டியே திரியாக திரித்ததை

உற்றத்தீயில் கொளுத்திங் காட்டிட

வாட்டமுற்ற முசல் கணையாம்

வலிமைந்தர் தன்னுட தேகம்விட்டேகி

காட்டி லோடி யொளித்திடுமே

யெனகானிவ் வாழு முனி . . . யதனர்

இவற்றைச் சம அளவாகக் கொண்டு பொடித்துள் செய்து சீலையின் ஊட்டி அதனைத் திரியாகத் திரித்துக் கொள்ளவும். திரியைக் கொளுத்தி புகைபிடித்திட முயல் கணை உடம்பைவிட்டே ஓடிடும். இருக்கும் இடம் தெரியாமல் காட்டில ஓடி ஒளிந்திடும் என்று அகத்தியர் சொன்னார்.

137. சலசலம் பிரட்டிக்கும் உடல் வெளுக்கும்
வயமும் பொருமி கழிந்திருக்கும்
சலமும் சளியுஞ் சுரந்தோஷமும்
தாபமுமந் தலையெ. . . .வருஞ் சொல்வார்
சலகணையை பரிவால்
அறிந்த மருந்த செயதியில்
பெலனும் பெருக்கும் பணிதீரும்
பேணி யிருப்பார் பெரியோரே

மலமும் சலமும் இரட்டிப்பாகக் கழியும்.உடல் வெளுக்கும்.வயறு பொருமும்,கழியும்,மூக்கில் நீரும் சயிளும் இழியும். சுரும் தோஷமும். தாபம் உண்டாகும்.இந்தச் சல கணையை உணர்ந்து அறிந்த மருந்து செய்தால்

138.நெய்:-
நெய்யுங் கதளியின் பூவதனின் சாறு
நாழிபுகழ் மதுர மாயத்காய்
உலவாய் சீரமாங் குயிலே
வகைக்குமொரு கழஞ்சி கொண்டு
வடிய வரைத்தாவின் நெய்
உரியில் சேர்த்து
பாங்குடன் ஈருள்ளியும் சிரத்தை
பரிவாக வகை சிரங்கை யறிந்தேயிட்டு
ஒங்குமுதிர்பந் தரித்த வருந்த வெப்பு
சலகணையும் வறட்சிரெத்த மோடி போமே

நெய், வாழைப்பூச்சாறு, அதிமதுரம்,மாசிக்காய்,இவை வகைக்கு 5கி வீதம்எடுத்து பசுவின்நெய் 1.3லிட்டர் சேர்த்து ஈருள்ளி உள்ளங்கையளவு அறிந்து சேர்த்து அடுப்பேற்றிக் காய்ச்சி பருகிவர வறட்சி இரத்தம்ஓடிப்போகும் என்பதாம்.

139.நத்தைசூரி கனையின் குணம்:

கண்ணில் சதை உண்டாகும்
    கடுத்திடு மலமும் சீராக்கும்
விண்ணிரில் சுளத்தும் வாய்நீர்
    மேனியும் வெளுத்துக்காட்டும்
மண்ணினைத் தன்னை வேண்டும்
    மருண்டிடும் நயனம் இரண்டும்
கண்ணிய நத்தைச் சூரிக்
    கனையென நவின்ற வாறே

கண்ணில் சதையுண்டாகும். மலமும் சீராக்கும். உடல் கனக்கும். வாய்நீர் ஊறும். உடல் வெளுத்துக்காணும். கண்கள் மருண்டிடும். இவை யாவும் நத்தைச் சூரி கனையின் குணங்களாகும்.

140.மாந்த கனையின் குணம்:

உடலெல்லாம் வெதும்பி காயும்
    முன்னையுந் தாக முண்டாம்
கடலிரை திரையை போலே
    கலக்கியே வயறு போகும்
நடையிடை கைகா லொயும்
    நயனத்தில் வியாதி யுண்டாம்
மட மயில் மானே மந்த
    பித்தத்தின் கனையி தாமே

உடல் வெதும்பிக் காயும்.தாகம் அதிகம் உண்டாகும். கடல் அலையால் உண்டாகும் நுரைபோல வயிறு நுரைத்துக் கழியும்.நடக்க ஒட்டாது கைகால் ஓய்ச்சல் எடுக்கும்.கண்ணோய்கள் உண்டாகும். இவை யாவும் மாந்த பித்த கனையின் குணங்களாகும்.

141. பட்சி கணை:

வறண்டுடல் வற்றிக் கண்ணில்

மருவு சுக்கிற்று முண்டாம்

கறண்டுடன் அடி தள்ளி

கடுப்புடன் சீதம் வீழும்

பண்டியே வயமும் ஊதி

பற்றியே வலிக்கும் பிள்ளை

பறந்திடு மசாத்தி யந்தான்

பட்சியின் கணையி தாமே

உடல் வறண்டு வற்றி, கண்ணில் மருவுண்டாகும். அடி தள்ளும். கடுப்பும், சீதமும் உண்டாகும். வயிறு ஊதும். வயிறு வலிக்கும். இத்தோடிடம் உண்டானால் பிழைப்பது கடினம் என்பதாம்.

142. சற்பு கணை:

சற்ப கணையின் குணந்தனக்கு

தானே கண்ணில் பிறப்பாடு

வெற்ப முடனே வயறோமுகும்

மேனி வறண்டு வற்றி வரும்

அற்ப மெனவே யெண்ணாதே

அண்டி தள்ளு மூலத்தில்

யற்ப மெனவே யெண்ணாதே

யசாத்திய மென்று கூறவதே

சற்ப கணையில் கண்ணில் நோய் புறப்படும். வயிறொழுகும். உடல் வறண்டு வற்றும். அண்டித் (அடி) தள்ளும். மூலம் உண்டாகும். இதைச் சாதாரண மாக எடுத்துக் கொள்ள வேண்டாம். இச்சற்பகணை வந்தால் பிழைப்பது அசாத்தியமாம்.

143. சித்திர_கணை:

குரலருந் திருக்கும் சற்றே

குளுந்திடுங் காயும் மேனி

விரல்கை கால்குளுந்து தானும்

மெலிந்துட லிருந்து காணும்

வரம்பி லனைய கண்ணாய்

வற்றிடும் தேக மெல்லாம்

சிரமு முதிடிக்குந் தண்டம்

சித்திர கணையி தாமே

சித்திகணை குரலிலே பிசிருண்டாகி குரல் அருந்திடும். உடல் குளிரும். காயும். உடல் கால் கைகள் குளிரும், மெலியும். தேகம் வற்றும். தலையில் வலி உன்டாகும். இவை சித்ரகணையின் குணங்களாகும்.

144. உளருகணை:

நாளிலே வற்றும் தேகம்

நயனமும் வெளுத்துக் காணும்

கொளிலே சுரமுங் காயும்

குடலதனை பிரட்டி நோகும்

பாளிலே வயறு மந்தம்

பசுமஞ்சளி போலே கணகண

நாளிலே யுனக்கு வெய்பு

கணையென சாற்ற லாமே

உளர்கணை ஒரு நாளிலே தேகம் வற்றும். கண் வெளுத்துக் காணும். உடம்பில் சுரம் காயும். குடல் பிரட்டி நோகும். வயிறு மந்தப்படும். பசு மஞ்சள் போலே கணகண எரிந்திருக்கும். இக்குறிகுணங்கள் கண்டால் அது உளர்கணை என உணரலாம்.

.. ..